


நினைக்கத்
தெரிந்த
மனமே
அருணாநந்தினி


நினைக்கத்
தெரிந்த
மனமே
அருணாநந்தினி

Please share your novels and Comments @ http://tamilnovel-link.ucoz.com/forum/2

## உள்ளே...


1. நினைக்கத் தெரிந்த மனமே! 5
2. நாளை வா நிலா 114


# நினைக்கத் தெரிந்த மனமே!

1



மார்கழி மாதக் குளிரில் பெங்களூர் நகரம், இழுத்துப் போர்த்திக்கொண்டு ஆழ்ந்த துயிலில் இருந்தது. வித்யாவின் மேனி சிலிர்த்தது. சாம்பிராணிப் புகை மூட்டம் போல எங்கும் பனிமூட்டம் சூழ்ந்திருந்தது.

பனிப்படலத்தில் 'மினுக்'கிய சோடியம் விளக்குகள், ஆலயத்தில் ஏற்றிவைத்த அகல்விளக்குகளாய் சுடர்விட்டன.

இதமான குளிர், உடலை மென்மையாய் வருடியது சுகமாக இருந்தது.

லண்டனில் இருந்தவளுக்கு இந்த குளிர் ஒன்றுமில்லை தான். அங்கு பனி, மழையாக அல்லவா பொழியும்! பாறையாய் அல்லவா உறையும்!

நகரின் இதயப் பகுதியில் இருந்த அந்த நட்சத்திர ஓட்டலின் மூன்றாவது தளத்தில் இருந்து பார்த்தபோது

வெளிப்புறக் காட்சி, மனதுக்கும் கண்களுக்கும் வெகு ரம்மியமாக இருந்தது. எங்கோ ஒரு கோவிலில் சுப்ரபாதம்! சுப்புலட்சுமியின் தேன் குரல் குழைந்து, பக்தர்களை ஈர்த்தது.

'இந்த பெங்களூர் அவளுக்கு புதிதல்ல. பழகிய ஊர்தான். நான்கு ஆண்டு கழித்து.. எத்தனை மாற்றங்கள்!'

கட்டிடங்கள் பூதங்களாய் எழும்பி நின்று பயமுறுத்து கின்றன... எங்கும் மனிதத் தலைகள்... பசுமைகூட கொஞ்சம் குறைந்துவிட்டது போல தோற்றம்... வாகனங்கள் பெருகி, இரைச்சல், சுற்றுச்சூழலில் மாசு பெருகிவிட்டதே!' பெருமூச்சு விட்டாள்.

உலகமே மாறிக்கொண்டு வருகையில் இந்த நகரமும் மாறிப்போனதில் வியப்பு என்ன..? திரைச்சீலையை விலக்கிக் கொண்டு, கூடுதலாய் குளிர்காற்று உள்ளே நுழைய.. அந்தப் பனிக்காற்றின் இதத்தில் மெய்மறந்தாள், வித்யா.

'மாற்றங்கள் சுற்றுப்புறத்தில் மட்டுமா? வாழ்விலும்தான். ஏன், என் வாழ்க்கையிலும்தான்! ஆனால், மனம்...?' அந்தக் கேள்விக்கு விடை தெரியாமல் மனசுக்குள் அவள் தவித்தாள்.

இரவு - படுத்தவுடன் உறங்கிப் போனான், கவுதம்.

வித்யா, தன் பார்வையைத் திருப்பினாள். கட்டிலில் அமைதியாய் உறங்கிக் கொண்டிருந்த கணவனை ஆழமாகப் பார்த்தாள். அவனது உறக்கத்தை நினைத்துப் பொறாமைப் பட்டாள்.

தூக்கமும் வரப்பிரசாதம்தான். அதிலும் கவலையை மறந்த தூக்கம், பெரிய பாக்கியம்! படுத்தவுடன் அவளுக்கு



உறக்கம் வந்ததில்லை.. புரண்டு படுத்து, எதையாவது நினைத்து தூக்கம் வராமல் தவிப்பது வழக்கம்.

தூக்கம், எப்படிப்பட்ட மனஇறுக்கத்தையும் தளர்த்தி விடுகிறது. கவுதம், இறுக்கம் தளர்ந்து, நிம்மதியாய் உறங்கிக் கொண்டிருந்தான். தலைமுடி கலைந்து.. நெற்றியின் மீது கேசம் புரள.. சீரான மூச்சுடன் தூங்கும் கணவனை தொடர்ந்து சிலகணங்கள் பார்த்துக்கொண்டே இருந்தாள்.

ஆண்மையும், அழகுமாய் இருக்கும் கவுதமின் மனைவி என்ற நினைப்பே அவளுக்குப் பெருமைதான்.

இருந்தும்... மனசுக்குள் ஒரு உறுத்தல்!

'கவுதமை கணவன் என்று உறவு பாராட்ட எனக்கு என்ன உரிமை இருக்கிறது.. இன்னும் நான் நல்ல மனைவியாய் நடந்துகொள்ளவில்லையே?

'பாவம்.. இவரும்தான் பொறுமையுடன் காத்துக் கொண்டு இருக்கிறார்... இவரைக் கணவனாக அடைய எந்தப் பெண்ணும் கொடுத்து வைத்திருக்க வேண்டும்.. ஆனால், நான் ஏன் இப்படி தொட்டாற்சிணுங்கியாய் சுருண்டு கொள்ளுகிறேன்...

'என் மனம் ஏன் பழசை நினைத்துத் தவிக்க வேண்டும்... இன்னும் என் மனம் மாறவில்லையா.. இல்லை! மனதில் பட்ட காயம் ஆறாப் புண்ணாக இருந்து தடுக்கிறதா?'

தடுமாறி நின்றாள், வித்யா. கணவன் அசைவது கண்டு பார்வையை விலக்கினாள். கணவனைப் பார்த்துக்கொண்டு இருந்ததை அவன் அறியக்கூடாதே என்ற பதைபதைப்பு.

காலையில் கண்விழித்த கவுதம், மனைவியைப் பார்த்தான். ''வணக்கம்'' என்றான்.

பதிலுக்கு வணக்கம் சொன்னாள், வித்யா. குளிரில் கைகள் மரத்துப்போயிருந்தன. உள்ளங்கைகளைத் தேய்த்து, சூடேற்றி, கன்னத்தில் வைத்தாள்.

கல்யாணமாகி இரண்டு ஆண்டு முழுசாய் ஓடியும் ஏனோ இன்னும் அவனுடன் இயல்பாய் அவளால் உரையாட முடியவில்லை.

''என்ன வித்யா.. குளிரா? நீதான் லண்டனில் இருந்தவள் ஆயிற்றே? அந்தக் குளிரைவிட இங்கு அதிகமா என்ன?''

''குளிர், எங்கிருந்தாலும் குளிர்தானே!''

''ஆமாம்... எங்கிருந்தாலும் குளிர் குளிர்தான்.. பெண் எங்கிருந்தாலும் பெண்தான்.. மாற்றம் ஏது?'' சிரித்துக் கொண்டே எழுந்து, அமர்ந்தான், கவுதம்.

தொலைபேசியில் இரண்டு காபிக்கு 'ஆர்டர்' கொடுத்தான். கட்டிலைவிட்டு இறங்கினான். குளியல் அறைக்குள் நுழைந்தான்.

இனி கவுதம் சோம்பலாய்ப் படுக்கமாட்டான். அது அவனுடைய சுபாவம். முழிப்பு வந்த பின்பு தூக்கம் கிடையாது.

அழைப்பு மணி ஓசை கேட்க, கதவைத் திறந்தாள். காபி வந்துவிட்டது.

முகத்தைக் கழுவி, துண்டால் துடைத்துக்கொண்டு வெளிவந்தான், கவுதம். தனித்தனியாக வைக்கப்பட்டிருந்த தேயிலை நீரையும், பாலையும் அளவுடன் கலந்து, கொஞ்சமாய் சர்க்கரையும் சேர்த்து வைத்தாள், வித்யா.

கணவனுக்கு எந்த விகிதத்தில் சேர்த்தால் பிடிக்கும் என்பதைத் தெரிந்து வைத்திருந்தாள். அவனுடைய விருப்பு - வெறுப்புகளை நன்கு புரிந்துகொண்டிருந்தாள்.



அவனுக்கு கோபம் வருவது அத்தி பூத்தாற்போலத்தான் பெண்மையைப் போற்றுபவன், பெண் இனத்தை மதிப்பவன் கவுதம். அதனால்தான் இத்தனை காலமும் அவளிடம் முகம் சுளிக்காமல் இனிமையாய்ப் பழகுகிறான்.

அவர்கள் இருவரையும் பார்ப்பவர்கள் மனம் ஒன்றிய, மயக்கும் ஜோடிப் புறாக்கள் என்றுதான் நினைப்பார்கள்... ஆனால், இருவருக்கும் இடையே நூல் இழை விரிசல் இருப்பதை யாரும் அறியமாட்டார்கள்.

இதோ.. இப்பவும்தான், காபியை அவனது சுவைக்கு தக்கவாறு கலந்து தருவது, ஆசை மனைவி தன் அன்புக் கணவனைக் காதலுடன் கவனித்துக்கொள்வது போலத் தோன்றுகிறது.

ஆனால், அவர்களின் நடுவே இருக்கும் சிறு பள்ளம், தொடர் கதையாகி வரும் சங்கதி. அது அவளே ஏற்படுத்திக்கொண்டது.

விசாலமான நோக்கு.. விட்டுக் கொடுக்கும் தன்மை.. எல்லாமே கவுதமிடம் இருந்தது. அதனால்தான் தன் மனைவியின் விருப்பத்துக்குத் தலையசைத்து, பெங்களூர் வந்திருப்பது! வேறொரு சராசரி ஆண்மகனாய் இருந்திருந்தால் நிச்சயம் மறுத்திருப்பான்... தன் வெறுப்பைக் காட்டி இருப்பான்.

தேனிலவைக் கொண்டாடவோ, இயற்கை அழகை ரசித்திடவோ அவர்கள் இங்கு வரவில்லை. இங்கிலாந்தில் இல்லாத இயற்கை அழகுமிக்க இடமா?

அப்படியானால் இவர்கள் ஏன் பெங்களூர் வந்தார்கள்?

இது, இதயத்தினுள் ஆழ்ந்து புதைந்து கிடக்கும், பழைய நினைவுக் குவியல்களின் தொகுப்பு என்பதாலா?

மனசுக்குள் பூட்டிவைத்திருக்கும் பெருமூச்சின் விளைவா? ஏன்? வித்யாவுக்குப் புரியவில்லை.

''வெளியே வருகிறாயா வித்யா? 'வாக்கிங்' போகலாம்?''

ஒரு வினாடி திகைத்துவிட்டு 'ம்.. என்ன கேட்டீர்கள்?'' என்றாள்.

கணநேர மவுனத்திற்குப்பின் சொன்னான் - '' 'வாக்கிங்' போகலாம் என்றேன். இனிமையான காலைப்பொழுது... இதமான காற்று... போகலாமா?''

''போகலாமே..''

இருவரும், ஓட்டல் அறையைப் பூட்டிவிட்டு புறப்பட்டனர்.

லண்டனில் பனிக் கொட்டும் குளிரில் இருந்தவர்களுக்கு இந்தக் குளிர் வெகு சாதாரணம்தான். ஆனால், பெங்களூர் வாசிகளுக்கு இது கடுங்குளிர்.

கம்பளி உடையில் செல்லும் இரவு காவலர்கள்... விழி மூடாமல் உழைத்துக் கொண்டிருக்கும் தொழிலாளிகள், கதவைத் திறக்கலாமா, வேண்டாமா என்று யோசித்துக் கொண்டிருக்கும் புத்தம்புது இளம் ஜோடிகள், பால் பாக்கெட்டுகளை சுமந்து செல்லும் பையன்கள்.. சோம்பல் முறித்து, வாகனங்களை எடுக்கும் ஓட்டுநர்கள்! நடுங்கும் குளிரிலும் தெய்வத்தை நாடிச் செல்லும் பக்தர்கள்...

பெங்களூரின் அன்றாட வாழ்க்கையைப் பார்த்து ரசித்தவாறு இருவரும் நடந்தனர்.

''பெங்களூர் எப்படி மாறிவிட்டது!'' வித்யா, வியப்புடன் சொல்ல...

''அப்படி என்ன மாற்றம்?'' கேட்டான், கவுதம்.



''இப்போது அடுக்கு மாடிக் கட்டிடங்கள் அதிகம்... மரங்கள் குறைவு என்றாகிவிட்டது. ஒரு காலத்தில் வெகு சுத்தமான நகரம் என்று பெயர் வாங்கிய இடம், இப்போது மாறிவிட்டது.''

''காலமாற்றம்... எல்லாமே மாறவேண்டியதுதான்'' என்றான்.

'உள் அர்த்தத்துடன் பேசுகிறானோ?' எதுவும் பேசாமல் அவனுடன் நடந்தாள், அவள்.

உணவுக்காக ஓட்டல் அறைக்குப் போனார்கள்.

கப்பன் பூங்கா, விதான சவுதா எல்லாம் சுற்றிப் பார்க்க எண்ணம்.

''டி.வி. வேண்டுமானால் பாரேன், வித்யா'' மனைவியிடம் சொன்னான், கவுதம்.

'ரிமோட்' டினை இயக்கினாள். திரையில் காட்சி ஓடியது. சுவாரஸ்யமின்றி சானல்களைத் திருப்பினாள்.

கன்னடப் படம் குறுக்கிட்டது. நான்கு ஆண்டுக்கு முன் பார்த்த படம்.. கன்னட வார்த்தைகள் எத்தனையோ மறந்து போய்விட்டன. ஆனாலும் கதையில் ஆழ்ந்து போனாள், அவள்.

வழக்கமான கதை... வழக்கமான முடிவு... கதாநாயகனும் கதாநாயகியும் திருமணத்தில் இணைகிறார்கள். திருமணம் தான் வாழ்க்கையின் முடிவு என்பது போல!

சரி.. எத்தனை திருமணங்கள் வெற்றி காணுகின்றன... எத்தனை கல்யாணங்கள், அக்னியை வலம் வந்து அக்னியில் எரிந்து போகின்றன.

தன்னுடையதும்...

உள்ளம் கனத்தது. கண்களை இறுக மூடிக்கொண்டாள். உப்பு கரித்து, இமை ஓரங்கள் எரிந்தன.

கவுதம், தொலைக்காட்சியை அணைத்துவிட்டு, அவளிடம் நெருங்கினான்.

''வித்யா.. ஏன் உன்னையே நீ வருத்திக்கொள்கிறாய்? உனக்கு மாற்றம் தேவைன்னா வேறு இடங்களா இல்லை.. அழகான ஊட்டி... அற்புதமான ஏற்காடு... அருமையான கேரளா.. இல்லை. சிம்லா.. டார்ஜிலிங்.. கோவான்னு எத்தனையோ இருக்கிறது.

வெடித்த புண்ணில் குண்டூசியைச் சொருகுவது போல் இது என்ன அவதி.. இப்படி இங்கு வந்து மனசு வேதனைப் பட வேண்டுமா? சொல்.''

அவளது அழுகை இன்னும் அதிகமாகியது. முகத்தை மூடிக்கொண்டு விம்மினாள்.

அருகில் அமர்ந்தான். அவள் முகத்தை மூடியிருக்கும் கைகளை விலக்கி, அவளை மார்போடு அணைத்து, சமா தானப்படுத்த துடித்தது மனம்.

ஆனால், முடியவில்லை... பற்களைக் கடித்தபடி, தன் இரு கரங்களையும் மார்பின் குறுக்கே கட்டியபடி நின்றவன், அவளையே பார்த்துக்கொண்டிருந்தான்.

தன்னை அடக்கிக்கொள்ள அவன் சிரமப்படுவதை, இறுகிக் கிடக்கும் அவன் முகமும், முறுக்கி நின்ற கைத் தசைகளும் காட்டின.

அழட்டும்.. ஓயும் வரை அவள் அழுது தீர்க்கட்டும்.. அவளது கண்ணீர் எதற்காக? நடந்து முடிந்த நாடக வாழ்க்கைக்கா? இல்லை நடந்துகொண்டிருக்கும் போலி வாழ்க்கைக்கா? அவனுக்குத் தெரியவில்லை.



அழுகை ஓய்ந்து.. விம்மல் நின்று.. கண்ணீர் வற்றியதும் எழுந்து, முகம் கழுவி வந்தாள், வித்யா. கணவனைப் பார்த்துப் புன்னகைத்தாள். அது பலவீனமான புன்னகை!

ஆனால், அவன் சிரிக்கவில்லை... அவளை தீர்க்கமாகப் பார்த்தான்.

'வித்யா... என்றைக்கு நீ மனதளவில் மாறப்போகிறாய்.. தாங்கும் சக்தியைப் பெறப்போகிறாய்..' அவனது பார்வை கேட்டது.

அழைப்பு மணி ஒலிக்க... அந்தப் பார்வையிலிருந்து தப்பிக்கும் வழியாய், ஓடிச்சென்று கதவைத் திறந்தாள்.

மதிய உணவு அழகாய் அடுக்கப்பட்டு, வெள்ளை நிறத் துணியால் மூடப்பட்டு, நட்சத்திர ஓட்டலுக்குரிய இலட் சணத்துடன் வந்தது.

அந்தப் பணியாளுக்கு மனதுக்குள் நன்றி சொன்னாள், வித்யா.. சங்கடமான நிலையிலிருந்து தன்னைக் காப்பாற்றியதற்கு!

உணவுவேளையில் கூட அவர்களுக்குள் மவுனம்தான் அடர்த்தியாய் பரவியிருந்தது.

'வேண்டாம்', 'போதும்' என்பது கூட சைகை மொழிதான்.

மதியம் இரண்டு மணிக்குமேல் இருவரும் காரில் புறப்பட்டனர். அப்போது மவுனம் கொஞ்சம் கலைந்தது.

அவள் முக்கிய கட்டிடங்களை, இடங்களைச் சுட்டிக் காட்டினாள். சில இடங்களில் புதிது புதிதாய் கட்டிடங்கள் முளைத்திருந்தன. உற்சாகத்தில், மனதில் பாரம் குறைந்தது. அவள் முகம் தாமரையாய் மலர்ந்தது. விழிகள் அந்த மலரைச் சுற்றும் கரு வண்டுகளாய் அலைந்ததை ரசனையுடன் பார்த்தான், கவுதம்.

கணவனின் இரகசிய ரசிப்பை உணராமல் தனக்குத் தெரிந்ததை பெருமையுடன் விளக்கிக்கொண்டிருந்தாள், வித்யா.

2



இளமஞ்சள் நிற ஒளியில் ராஜ கம்பீரத்துடன் நின்றிருந்த அந்த பிரமாண்ட கல் கட்டிடத்தைக் கண்டதும் வித்யாவுக்குள் உற்சாகம் பூத்தது.

''இதுதான் விதான சவுதா! கர்நாடக அரசு தலைமையகம் இயங்குவது இங்குதான்'' கண்கள் மின்ன, அவள் சொன்னாள்.

கட்டிடக்கலைக்கு சாவல்விட்டு நிற்கும் கம்பீரமான கட்டிடம்! பெங்களூர் அழகுக்கு அழகூட்டும் கலைப்பெட்டகம்!

இளமஞ்சள் ஒளியில், பசுமை நிற பூஞ்செடிகளின் பின்னணியில் அதன் அழகே தனி.

''இங்கேதான் சட்டசபை கூடம்..'' கணவனிடம் பெருமையோடு சொன்னாள், வித்யா.

''ரொம்ப அழகு!'' உண்மையான ரசனையுடன் வந்தன, அவனிடமிருந்து வார்த்தைகள்.

வெளி அழகினை முழுமையாய் ரசித்துவிட்டு புல்வெளிப் பக்கம் இருவரும் நடந்தனர்.

வழியில் மக்காச்சோளத்தை சுட்டுத் தருபவனைப் பார்த்ததும் அவள் நின்றாள்.

''சாப்பிடலாமா?'' ஆவலுடன் கணவனைக் கேட்க.. அவன் வியப்புடன் நோக்கினான்.

''இதையெல்லாம் நீ சாப்பிடுவியா?''

''ஏன் கூடாது.. முந்தி இங்கே வந்தபோது நான் கேட்டு வாங்கி..'' குரல், தேய்ந்து நின்றது.



'யாரிடம்?' நினைத்ததும் நெஞ்சு அடைத்தது.

அந்த நாட்களின் நினைவலைகள் மறுபடியும் 'குப்'பென்று எழ, அவளுக்கு வியர்த்தது. துக்கம் தொண்டையை அடைத்துக்கொள்ள, அழட்டுமா என்று கெஞ்சின, கண்கள்.

ஊகூம்... அழக்கூடாது. காலையில் அழுததற்கே கவுதம் கோபப்பட்டான். மறுபடியும் அழுதால் அவ்வளவுதான். 'பெங்களூரும் வேண்டாம்...ஒரு மண்ணும் வேண்டாம்' என்று லண்டனுக்குப் புறப்படச் சொல்லுவான்.

என்றைக்கோ வாழ்ந்த வாழ்க்கை.. அந்த நினைவுகளின் ஏக்கம், மீண்டும் மனதில் வந்தாயிற்று. அதையே நினைத்துக் கொண்டிராமல், மறக்க முயல வேண்டும்... எல்லாவற்றையும் மறக்க வேண்டும்... அது முடியுமா? என் வாழ்க்கையில் மறக்கவே முடியாத, மனதைவிட்டு அழியாத, அழிக்க முடியாத காதல் நிகழ்வுகள் நடந்த இடத்தில் இருந்துகொண்டு, அவற்றை மறப்பது என்பது எளிதில் முடிகிற காரியமா?

அவளது நினைவோட்டத்தை உணர்ந்தவன் போல, ''இங்கே பாரு வித்யா...'' என்றான், கவுதம்.

அவள் ஆசைப்பட்ட சோளத்தை சுட்டுத்தரச் சொன்னான்.

சுதாரித்துக் கொண்டாள், வித்யா. மனதைத் தேற்றிக் கொண்டாள். தன்னை உறுத்தும் பழைய நினைவுகளை மறக்க, மிகவும் பிரயத்தனப்பட்டாள். 'கணவனுடன் இந்த ஊருக்கு வந்திருக்கிறோம்... அவ்வளவுதான். மற்ற எண்ணங்களுக்கு இடம் தரக்கூடாது' தீர்மானித்துக் கொண்டாள், அவள்.

சோள இலையில் வைத்துத் தந்த சூடான சோளக்கதிரில் மசாலா தடவப்பட்டு இருந்தது.

''உங்களுக்கு?''

தோள்களைக் குலுக்கினான், கவுதம். ''எனக்கு வேண்டாம்.''

''சாப்பிட்டுப் பாருங்களேன்.. இந்த சுவை தனிதான்.''

சோளக்கதிரை பாதியாய் உடைத்து, ஒரு துண்டை அவனிடம் நீட்டினாள். அவன் தயங்கி, வாங்கிக்கொண்டான். பழக்கமில்லாத காரணத்தால், காரமசாலா உதட்டில் பட்டதும் 'சுர்' என்று எரிய... 'உஸ்' என்று தவித்துப்போனான்.

காரம் தாளாமல் கண்களில் நீர் கோர்க்க, அவன் திணறுவதைக் கண்டு அவள் சிரித்தாள்.

உதடு படாமல் பற்களால் கடித்துவிட்டு ''இப்படி சாப்பிடணும்'' என்று செய்து காட்டினாள்.

அவனும் முயற்சி செய்து பார்த்தான்.

சோளத்துண்டு இலையிலிருந்து நழுவி கீழே விழுந்தது தான் மிச்சம். அவளைப் பரிதாபமாய்ப் பார்த்தான், கவுதம்.

''ஊகூம்.. இனி நான் கொடுக்கமாட்டேன்.. வேண்டும் என்றால் இன்னொன்று வாங்குங்கள்..''

''அய்யோ.. எனக்கு வேண்டாம்மா.. முதலில் 'ஐஸ்கிரீம்' வாங்கி சாப்பிடணும். உஸ்.. ஸ்....'' காரம் தாளாமல் அவன் தவித்தான்.

மகாத்மா காந்தி சாலையில் 'ஐஸ்கிரீம்' பார்லர் முன் காரை நிறுத்தினான், டிரைவர்.

சாலை முழுக்க பெரிய பெரிய கடைகள்.. உயர்தர அங்காடிகள்.

அதிநாகரிக மங்கைகளின் நடமாட்டம்.. பெரும்பாலும் கல்லூரி மாணவிகள், வளைய வரும் மாணவர்கள்..



ஜோடியாய் அலைந்துகொண்டிருக்கும் காதல் குயில்கள்.. சாயங்கால வேளையில் வண்ண விளக்குகளின் ஒளியில் சொர்க்கபுரியாய் காட்சியளித்தது, அந்த இடம்.

'இருவரும் ஐஸ்கிரீம்' சாப்பிட்டார்கள்.

''ஏதாவது பொருட்கள் வாங்கலாமா?'' என்று கேட்டான், கவுதம்.

''ஓ! முதலில் காவிரியைப் பார்க்கலாமா?''

புருவங்களை உயர்த்தினான், அவன்.

''காவிரியா.. அது யார்? உன் தோழியா?''

'கிளுக்'கென்று சிரித்தாள், அவள்.

''காவிரி என்பது கைவினைப் பொருட்கள் விற்கும் இடம். அழகான பொருட்கள் அங்கு கிடைக்கும். அனைத்தும் தரமானவை. உயர்தர அன்பளிப்பு வாங்கவேண்டும் என்றால் காவிரிதான். அத்தனை பிரசித்தம்!''

காவிரியினுள் நுழைந்து, ஒவ்வொரு கலைப் பொருளையும் உற்றுப் பார்த்தவன், வியந்துபோனான்.

''நீ சொன்னது உண்மைதான் வித்யா.. என்ன அழகு! என்ன வேலைத்திறன்! இந்த கலைநுணுக்கத்தில் இந்தியாவை மிஞ்ச எந்த நாடும் இல்லைதான். இந்த நடராஜர் சிலை, பிரமாதம். வெகு அற்புதம், வித்யா. வாங்கலாமா?''

''ம்..''

அவன் வாங்கினான்.

செல்லும் வழியில் ஒரு அழகான கோவிலைக் கண்டு காரை நிறுத்தச் சொன்னாள், அவள்.

''பிரபலமான கோவில். சக்திவாய்ந்த விநாயகர். ஒரு நிமிடம் தரிசனம் பண்ணிவிட்டுப் போகலாம்'' என்றாள்.

வித்யாவின் விருப்பத்தை மறுத்து, அவன் ஒருநாளும் சொன்னதில்லை.

கவுதமுக்கு தீவிரப் பக்தி கிடையாதுதான். கோவிலைக் கண்டதும் கன்னத்தில் போட்டுக் கொள்ளும் ரகம் இல்லை.

எந்தக் கோவிலுக்குச் சென்றாலும் ஒரு வினாடிக்குள் கர்ப்பகிரகத்தில் இருக்கும் தெய்வத்தை வழிப்பட்டுவிட்டு, பின் தன் கண்களை கோவிலின் விதானத்தின் மேல், கோபுர சிலைகள் மீது, தூண்களின் வேலைப்பாடுகளில் அலைய விட்டு, அமைதியாய் ரசிப்பான்.

அவனது ரசனை மற்றவர்களிடமிருந்து வேறுபட்டு இருந்தது.

எந்த ஒரு பொருளையும் சரி, மேற்போக்காய் பார்க்கும் வழக்கம் கிடையாது. ஊன்றி, கூர்மையாய்க் கவனிப்பான். மனிதர்களின் வெளித்தோற்றத்தை ஊடுருவி.. உள் மனதை துளைத்து, சரியாய் எடைப் போட்டுவிடும் திறன் அவனிடம் இருந்தது. தான் அறிந்ததை சொல்வான். அது சரியாகவே இருக்கும்.

'அதேபோல தன் மனதையும் அறிந்து வைத்திருப்பானோ? ஊகூம்.. இருக்காது' நினைத்தவளுக்கு சின்னக் குழப்பம்! அவள் மனதை அவளாலேயே இன்னும் அறிந்து கொள்ள முடியவில்லையே?

இரவு, ஓட்டல் வந்து சேரும் போது மணி பத்தாகி விட்டது. இருவரும் அலுப்பு தீரக் குளித்தனர்.

தலையைத் துவட்டிக்கொண்டு வந்தான், கவுதம். கண்ணாடி முன்னே அமர்ந்து, கூந்தலை வாரிக்கொண்டிருந்த மனைவியிடம் சொன்னான்.



''வித்யா, நாளைக்கு.. ம்.. அது என்ன இடம்.. ஆங்.. மல்லேசுவரம் போகணுமே?''

கூந்தலை வாரிக்கொண்டிருந்த வித்யாவின் கரம், இயக்கத்தை நிறுத்தியது. முகம், சாம்பலாய் வெளுத்தது. இதயம் படபடத்தது.

மல்லேசுவரம்!

அந்தப் பெயரைக் கேட்டதும் அவள் உள்ளம் நடுங்கியது.

''ஏன் வித்யா.. உனக்கு வேறு ஏதாவது யோசனை இருந்தால் சொல். இன்னொரு நாளைக்குப் போகலாம்.''

''ஏதுமில்லை.. ஆமா, மல்லேசுவரமா.. அங்கே எதற்கு?'' குரலில் நடுக்கம் தெரிந்தது!

''என் நண்பன் முரளியின் சகோதரி வீடு அங்கேதான் இருக்கிறது. வீட்டு விலாசத்தைத் தந்திருக்கிறான். அவர்களது திருமண நாள் அடுத்த மாதமாம். அதற்குப் பரிசு கொடுத்தனுப்பி இருக்கிறான். போய்க் கொடுத்துவிட்டு வரலாம். உனக்குத்தான் பெங்களூர் பரிச்சயமாயிற்றே?''

''வெறும் ஆறு மாதம்தான்.''

''போதுமே... அந்த ஆறு மாதத்தில் பெங்களூரைச் சுற்றிப் பார்த்திருப்பாய்தானே, அது போதும்.''

ஏதும் பேசாமல் தன் விரல்களைப் பார்த்தவாறு தலைகுனிந்து அமர்ந்திருந்தாள், வித்யா.

ஏனோ அவளைப் பார்க்க அவனுக்கு பரிதாபம் மேலிட்டது.

''வித்யா.. நாளைக்கு யோசிக்கலாம். இப்போது படுத்துக் கொள். எனக்கும் களைப்பாக இருக்கிறது'' என்று படுத்தவன், உடனே உறங்கியும் போனான்.

அவளுக்குத்தான் தூக்கம் வரவில்லை!

மல்லேசுவரத்தில்தான் 'அவன்' இருக்கிறான். அவனை சந்திக்க நேருமோ?

பெருமூச்சுவிட்டாள், வித்யா.

இரவெல்லாம் புரண்டு படுத்தாள்.. பழைய நினைவுகள் அவளுள் கரைபுரண்டன.

'ஒருவேளை, அவனைப் பார்த்துவிட்டால்.. இல்லை, அவன் என்னைப் பார்த்துவிட்டால்..' நினைக்கவே உடலும் உள்ளமும் பதறின. நெற்றியில் வியர்வைப் பூக்கள் பூத்தன.

## 3



பெங்களூர் பயணம், வித்யா விரும்பியதுதான். ஏனோ அந்த ஊரை மீண்டும் பார்க்க வேண்டும் என்ற ஆசை. புறப்பட்டு வந்தாகிவிட்டது.

முதல் கணவனோடு ஒரு மாதம் வாழ்ந்த ஊருக்கு ஏன் வந்தோம் என்ற காரணம் அவளுக்கே புரியவில்லை. அப்படியே வந்தாலும் அவனைச் சந்திக்கப்போவதில்லை என்ற நம்பிக்கை இருந்தது.

அத்தனை பெரிய நகரத்தில் - மக்கள் சமுத்திரத்தில் அவனையாவது, சந்திப்பதாவது? ஊகூம்.. அது சாத்தியமே இல்லை என்ற எண்ணம் எழுந்தது.

உலகமே சின்னதாகிப் போனபின்பு இந்த நகரம் எம்மாத்திரம்? அதிசயமாய், திடீர் சந்திப்பு நிகழத்தான் செய்யும்.

மனம் விசித்திரமானது.. அதில் உதிக்கும் எண்ணங்களோ மிக வினோதமானது... அதிலும் பெண் மனம் என்றால்



சொல்ல வேண்டியதில்லை... ஆழ்கடலின் ஆழத்துக்குச் சென்று வந்தவர்கள் கூட பெண் மனதைப் புரிந்துகொள்ள முடியாமல் திகைக்கிறார்கள்... படைத்த பிரம்மனுக்கும் கூட அது புதிர்தான்.

வித்யாவின் மனம், அவனை சந்திக்க ஆசைப்பட்டதா? இல்லை, அவனது முகத்தைப் பார்க்கவே கூடாது என்று தவிர்க்க நினைத்ததா? அவள் மனதை அவளாலேயே அறிந்துகொள்ள முடியவில்லை!

பெங்களூர் வர ஆசைப்பட்டவள், ஆறு மாதம் வாழ்ந்த பழைய வாழ்க்கையைப் பற்றி ஒரு முடிவுக்கும் வரமுடியாமல், கவுதமுடனும் வாழ்க்கையைத் தொடங்க இயலாமல் தவித்தாள்.

நத்தையைப் போல கூட்டினுள் சுருண்டு கிடந்தால் வேதனை விலகிவிடாது! நஞ்சுக்கு நஞ்சுதானே முறிவு! அவனை சந்திக்கும் வரைதான் வேதனைப் பிடுங்கித் தின்னும். சந்தித்துவிட்டால்... அந்த வேதனையும், மனதை அழுத்திக் கொண்டிருக்கும் துன்பச்சுமையும் குறைந்துவிடுமே!

குதூகலமாய் இருவரும் காரில் புறப்பட்டார்கள்.

மல்லேசுவரத்தை நெருங்க நெருங்க அவளுக்குப் படபடப்பு கூடியது. இதயத்தின் 'லப் டப்' ஓசை பலமாய்க் கேட்டது. மனம் துடிதுடித்தது. மூளை வீங்கிக்கொண்டு வருவதுபோல உணர்வு.. உள்ளங்கையில் வியர்வை பிசுபிசுத்தது.

குப்பை என்று எண்ணி ஒதுக்கி வைத்திருந்த பழைய நினைவுகள், இப்போது வந்து நெஞ்சம் முழுதும் ஒட்டிக் கொண்டு அவளைக் குடையத் தொடங்கின.

மல்லேசுவரத்தில் காரை நிறுத்தச் சொன்னான், கவுதம். இறங்கி, பழக் கடையை நோக்கி நடந்தான்.

வித்யா, சுற்றிலும் பார்வையை ஓட்டினாள். இந்த வழியாய் எத்தனை தடவை நடந்திருப்பாள், அவள்.

மாமியாருடன் கோவிலுக்கு, பண்டிகை நாட்களில் தெரிந்தவர்களின் இல்லங்களுக்கு.. ஏன்.. முதல் கணவனுடன் கூட வந்தாளே.. அதோ.. அந்தக் கடையில்தான் இருவரும் பழரசம் பருகியது.. சற்றுத் தள்ளியிருக்கும் ஓட்டலில் இருவருமாய் சிற்றுண்டி உண்டது.. அவன், சரம் சரமாய்ப் பூ வாங்கித் தந்தது. - அவள் பழையதில் மூழ்கி இருந்தாள்.

பின்னால் திரும்பிப் பார்த்த கவுதம், தன் மனைவி காரிலேயே இருப்பது கண்டு நெற்றியைச் சுருக்கினான். திரும்ப அவளருகில் வந்து "வித்யா... இறங்கு" என்றான்.

லேசான தடுமாற்றத்துடன் கீழிறங்கினாள், வித்யா.

இது என் ஊர் என்று அவள் நினைத்திருந்தது ஒரு காலம். இன்று அது அந்நியம். அதுமட்டுமா.. 'அவனும்' அந்நியன்தான்.. உரிமை தொலைந்துபோன - உறவு முறிந்துபோன வேற்று மனிதன்.

அலைபாய்ந்துகொண்டிருந்தது, மனசு. அவளது கண்கள் ஒரு உருவத்தைக் கண்டதும் நிலைக்குத்தி நின்றன.

அவள் பயந்தது நடந்தேவிட்டது! யாரைப் பார்த்தால் இதயம் சுருண்டுகொள்ளும் என்று எண்ணிப் பயந்தாளோ - யாரைப் பார்க்கக்கூடாது என்று வேதனைப்பட்டாளோ அவனைப் பார்த்துவிட்டாள். அவனது கண்களில் பட்டு விட்டாள்!



அவன்... அவனேதான் - அவளுடைய மாஜி கணவன், ரகுவரன். அவனைப் பார்த்ததும் அப்படியே திகைத்துப் போய் நின்றாள், வித்யா.. சிலை போல!

## 4



இது என்ன விசித்திரம்.. முதல் கணவனின் ஊருக்கு இரண்டாம் கணவனை அழைத்து வந்திருக்கிறாள். எந்தப் பெண்ணின் வாழ்க்கையிலும் நடக்காத - நடக்கக்கூடாத ஒன்று!

வித்யாவின் கடந்த காலத்தைப் பற்றி இவன் அறிந்து இருந்தாலும் பெங்களூரில் - இந்த மல்லேசுவரத்தில்தான் மாஜி கணவனுடன் அவள் வாழ்ந்தாள் என்பது அவன் அறியாதது.

பழையவனிடம் மாற்றம் தெரிந்தது. கையில் பையுடன்.. அருகில் ஒருத்தியுடன் காணப்பட்டான்.

கூர்ந்து பார்த்தாள். 'அவளா? ஆமாம்... அவளாகத்தான் இருக்க வேண்டும்..'

அவன் ஐந்தடி பதினொரு அங்குல உயரம். அதிகம் மாறமுடியாது. ஆனால், உடம்பில் கொஞ்சம் பூரிப்பு தெரிந்தது. கன்னங்கள் லேசாய் உப்பி இருந்தன. தலைமுடியின் அடர்த்தி வெகுவாய் குறைந்திருந்தது.

அருகில் இருந்தவள் - அன்றைய காதலி! இன்று மனைவியா?

அவளை ஒரு முறைப் பார்த்தது.. இப்போது அவளுள் எத்தனை மாற்றம்! உடல் வற்றி.. முகம் ஒடுங்கி.. கன்னங்கள் குழி விழுந்து.. கண்களுக்கு கீழ் கருவளையங்கள் சூழ்ந்து.. ஆங்காங்கே எலும்புத் துருத்திக் கொண்டு..

கடவுளே! அன்றைக்குப் பார்த்த துள்ளும் அழகியா இவள்? நம்ப முடியவில்லையே?

நடக்கமுடியாமல், மூச்சிரைத்தவாறு தளர்ந்து நடை போடும் அவளுடன் நிதானமாய், பொறுமை இழந்து, முகம் சுளித்து நிற்கும் ரகுவரனைப் பார்த்தாள்.

அவன் முகத்தில் எரிச்சலும் பொறுமை இன்மையும் போட்டியிட்டன.

அவனது கண்களிலும் வித்யா பட்டாள். அவளைப் பார்த்து மலைத்துப் போனான்.

'வித்யாவா?' என்று அவன் வாய் பிளந்து நின்ற நேரத்தில்தான் கவுதம், பழங்கள் வாங்கி முடித்து, திரும்பி வந்தான்.

மனைவியின் பார்வை போன திசையில் அவன் கண்கள் திரும்பின. அங்கே, ஒருவன் திகைத்து நின்றிருப்பதைக் கவனித்தான்.

கணினியில் கைதேர்ந்த கவுதமுக்கு அடிப்படைக் கணக்கான ஒன்றும் ஒன்றும் இரண்டு என்பது தெரியாதா? அவனே தன் மனைவியின் முதல் கணவன் என்பதை ஊகித்துக்கொண்டான்.

மனைவியிடம் குனிந்து ''டார்லிங்.. போகலாமா?'' என்று புன்னகைத்தான். செயலற்று நின்றிருந்த ரகுவரனை கண்களால் வெட்டிவிட்டு, காரில் ஏறி அமர்ந்தான். சுயநிலைக்கு வந்த வித்யா, கணவனைத் தொடர்ந்து காரில் ஏறி அமர்ந்தாள்.

'டார்லிங்!' இதுவரைக்கும் அவளை அவ்வாறு அழைக்காதவன் இன்று அழுத்தமாய் இப்படி அழைப்பது ரகுவரனுக்காக என்றுதான் நினைத்தாள்.



ஆக, ரகுவரனை 'யார்' என கவுதம் தெரிந்துகொண்டு விட்டான் போலும். அதுதான் இந்த எச்சரிக்கையோ.. 'நீ என் உடைமை' என்று மறைமுகமாய் சொல்கிறானோ? இல்லை.. இவளது தடுமாற்றத்தை உணர்ந்து.. பழையதை நினைத்து சித்தம் பேதலிக்க வேண்டாம் என்று நாசூக்காய் குறிப்பிட்டானா? வித்யாவுக்கு குழப்பம் மேலிட்டது.

யாரைப் பார்த்துவிடுவோமோ என்று இதயம் படபடக்க இருந்தாளோ அவனைப் பார்த்துவிட்டதால் அவளது சின்ன இதயமும் படபடப்பை நிறுத்திக்கொண்டு சீராக ஓடத் தொடங்கியது.

பரிசை ஒப்படைக்கச் சென்ற வீட்டில், உபசரிப்பு வெகு பலமாக இருந்தது. பல நாளாய் பழகியவர்களைப் போல அன்பு காட்டினர்.

அவர்களும் புதுத் தம்பதிதான். கணவன் அடிக்கடி மனைவியை சீண்ட.... அவளும் முகத்தில் செம்மை பூசிக்கொண்டு சிரித்ததைப் பார்க்கிறபோது வித்யாவுக்கே ஏக்கம் வந்தது.

இது அல்லவா தாம்பத்தியம்! சீண்டல்களும்.. குறும்புகளும்.. வெட்கமும்.. சிரிப்புமாய் அமைந்த, மனம் நிறைந்த வாழ்க்கை.. எத்தனை பேருக்கு அந்த யோகம் கிடைக்கும்?

ஒருவழியாகப் புறப்பட்ட போது மணி நாலரை!

'இன்று தங்கிவிட்டு போகலாம்' என்ற அவர்களது அன்பு வேண்டுகோளை 'அடுத்த முறை கண்டிப்பாய்' என்று கூறி தவிர்த்துவிட்டுப் புறப்பட்டனர், இளம் தம்பதியினர்.

அவளாக ரகுவரனைப் பற்றி பேசுவாள் என்று எதிர்பார்த்து, ஏதும் கேட்காமல் காத்திருந்தான், கவுதம். அவளோ அவனைப் பற்றிய பேச்சையே எடுக்கக் காணோம்!

அவள் மனதினுள் சொல்லமுடியாத உளைச்சல்.... எதனால்? ரகுவரனை சந்தித்துவிட்டதாலா? தெரியவில்லை.

'அவனாகக் கேட்டால் பேசலாம்.. எதுக்கு முந்திரிக் கொட்டைத்தனம்' என நினைத்தாள், வித்யா.

இந்த ஊமை நாடகம் தொடர்ந்தது. அவர்களுக்குள் அமைதி திரைபோட்டது.

'தானாகக் கேட்பது நாகரிகம் அல்ல' என்று அவன் நினைத்திருக்கலாம்.. 'நானாக சொல்வதா.. ச்சே...' என்று அவள் தயங்கி இருக்கலாம்.

அன்றைக்கு எந்தப் பேச்சும் இல்லாமல் படுத்து விட்டனர். கட்டிலில் அவள் ஒரு ஓரம்... அவன் இன்னொரு ஓரம்.. இது புதிது அல்ல... இரு ஆண்டாக நடப்பதுதானே!

வித்யாவின் மனம் எதையோ அசைபோட்டது.

'இன்றைக்குச் சொல்ல வேண்டுமா?'

முதன் முதலில் அக்னி சாட்சியாக தனக்கு தாலிக் கட்டியவனை சந்தித்ததில் வந்த பாதிப்பு.. அவள் மனதில் திராவக அலைகளாகப் புரண்டன.

உள்ளம், பழைய வாழ்க்கையின் நினைவுத் தாள்களை ஒவ்வொன்றாய்க் கிழித்தது.

அந்த நாட்கள்? அவளது இதயத்தில் மாறாத வடுவினை ஏற்படுத்திய நாட்கள்!

'கடவுளே.. மறக்க முடியவில்லையே..?' கண்களின் ஓரத்தில் நீர்முத்துக்கள் உதித்தன.. கண்கள் மட்டுமா அழுதன.. அவளது இதயமும்தான்!



5



'**பா**ர்த்துக்கோ வித்யா.. அவன் தான் மாப்பிள்ளை!'

அழகுப் பதுமையாய் இருந்த வித்யாவை இழுத்து வந்து, ஜன்னல் அருகில் நிறுத்தி.. ரகுவரனைக் காட்டினாள், தாய்.

தன்னைப் பெண் பார்க்க வந்த ரகுவரனை முதல் பார்வையிலேயே வித்யாவுக்குப் பிடித்துவிட்டது.

'இலட்சணமாய் இருக்கான்டி... இவனைக் கணவனாய் அடையுறதுக்கு நீ ரொம்பக் கொடுத்து வைத்திருக்கணும்' அனைவரும் ஏகோபித்த குரலில் சொல்லவும், வித்யாவின் மனம் மகிழ்ச்சியில் பொங்கியது. இதயம் முழுதும் இனித்தது.

வாட்டசாட்டமாய் இருந்தான், ரகுவரன். திரைப்பட இயக்குநர் கண்ணில் பட்டிருந்தால் கண்ணை மூடிக்கொண்டு அவனைக் கதாநாயகனாய்த் தேர்வு செய்திருப்பார்கள். அவனது தோற்றத்தில் மயங்கி 'பூம் பூம்' மாடாய் தலை அசைத்தாள், வித்யா.

மணமேடையில் அவனுடன் நின்றபோது அவள் கர்வத்துடன் தலைநிமிர்ந்து நின்றிருந்தாள். உலகத்தையே வென்றது போல ஒரு பெருமிதம்.. கண்ணுக்கு அழகான கணவன்.. பெண் மனம் ஏங்கும் வசீகரம்... கனவுகளை மெய்ப்பிக்கும் கம்பீரம்.. இந்த அழகு ராஜா என்னுடையவன் என்ற பெருமையில் அவள் கண்கள், பரவசத்தில் மின்னின.

ஓரக்கண்ணால் கணவனைப் பார்த்துப் பார்த்து ரசித்தாள். போதாதற்கு தோழிகள் வேறு அவனைப் புகழந்து, அவளை உசுப்பேற்றினார்கள்.

'வித்யா.. நீ கொடுத்து வச்சவடீ.. பாரு.. ராஜகுமாரன் மாதிரி கணவன் வாய்த்திருக்கிறார்.. உனக்கு முன்னால் நான் இவரைப் பார்த்திருக்கக்கூடாதா?' என்று பெருமூச்சு விட்டாள், ஒருத்தி.

'கணவன் அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்டீ.. வித்யா, நீ நல்ல வரம் வாங்கி வந்திருக்கிறாய். ம்.. என் தலையெழுத்து எப்படியோ? குட்டையோ.. சொட்டையோ.. பயமா இருக்குடீ' என்றாள், இன்னொருத்தி.

'சேச்சே.. என்ன பேச்சுடீ இது.. அழகு மட்டும் முக்கியமில்லே.. குணமும்தான். வித்யா உன் கணவரின் அமைதியைப் பார்க்கிறபோது ரொம்ப பொறுமைசாலின்னு தோணுது. உன்னை நிச்சயம் நன்றாக வைத்துக் கொள்வார்டீ..'

தோழிகளின் புகழாரம் தோளில் விழுந்ததில் வித்யாவின் மனம் பூரிப்பில் தத்தளித்தது.

தோற்றத்தைப் போலவே அன்பு நிறைந்த கணவனாக அவன் இருந்துவிட்டால்.. தேனும் பாலும் கலந்ததுபோல வாழ்க்கை இனிக்குமே!

ஆனந்தத்தின் உச்சத்தில் பேதை மனம் என்னென்னவோ கனவுகளைக் கண்டது. எதை எதையோ நினைத்து குதூகலமாய்த் துள்ளியது.

ஆனால், பிறகுதான் அவளுக்குத் தெரிந்தது. அவனுக்கு இந்தத் திருமணத்தில் விருப்பம் இல்லை என்று. இந்தத்



திருமணம் என்ன... மணவாழ்க்கையிலேயே அவனுக்கு விருப்பம் கிடையாதாம்.

'ஓ.. அதனால்தான் அவனிடம் சிரிப்போ, கலகலப்போ இல்லை' என்று நினைத்தாள். சில குறும்பு நண்பர்கள் வித்யாவையும் அவனையும் இணைத்து பேசி கிண்டல் செய்தபோது கூட அவனது முகத்தில் சிடுசிடுப்புதான் தெரிந்தது.

யாரோ ஒருவன், குளிர்பான பாட்டிலில் ஒரே ஒரு 'ஸ்டிரா'வைப் போட்டு, நீட்ட.. 'எனக்கு எச்சில் எல்லாம் பிடிக்காது' என்று கவுதம், சிடுசிடுத்ததுகூட தவறாகப் படவில்லை....

ஆனால், திருமண இரவில்... முதன் முறையாய் தனிமையில் சந்திக்கும் மனைவியை இழுத்து அணைப்பதுகூட வேண்டாம்.. புன்சிரிப்புடன் எதிர்கொள்ளவாவது கூடாதா? முகத்தையும் பார்க்காமல் ஒதுங்கிப் போனானே.. அது ஏன்.. எதற்கு? குழம்பினாள், வித்யா.

முதலிரவில் அவன் முகம் கொடுத்துப் பேசவே இல்லை.. ஒதுங்கிச் சென்று படுத்துவிட்டது கண்டு அவள் மனம் துணுக்குற்றது.. அதற்குபின் ஒரு வாரமும் அதே கதைதான்.

வித்யா மனதுக்குள் தவித்தாள். 'ஒரு வேளை தன்னை விரும்பவில்லையோ? இது, அவனது விருப்பமின்றி நடந்த கல்யாணமோ?'

தயங்கித் தயங்கி மாமியாரிடம் கேட்க.. பதிலும் கிடைத்தது. அவன் ஆஞ்சநேய பக்தனாம். திருமணத்தில் ஈடுபாடு இல்லையாம்.. 'வேண்டாம்' என்று மறுத்தவனை கட்டாயப் படுத்தி, மணமுடித்து வைத்தார்களாம்.

'ப்பூ.. இவ்வளவுதானா? என்னவோ ஏதோ என்று பயந்தோமே?'

'இந்த மாதிரி ஆஞ்சநேய, இராமகிருஷ்ண, விவேகானந்த பக்தர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள். அவளும் பார்த்திருக்கிறாள். ஏன்.. அவளது பெரியம்மா மகன்கூட அனுமன் பக்தன்தான். 'ஜெய் அனுமான்' என்று என்றும் பிரமசாரியாகவே இருக்க வேண்டும் என்று நினைத்தவன், இப்போது சம்சாரி!'

அவள் மனம் சமாதானம் சொல்லிக்கொண்டது! இந்த பிரமசாரிய விரதம் எத்தனை நாள் என்று பார்க்கலாம்.

இரண்டு மாதம் இந்த கண்ணாமூச்சி ஆட்டம் நடந்தது.

இரவு வெகு நேரம் கழித்து வருவதும், சில நாட்கள் வராமல் இருப்பதுமாய் மாதங்கள் சென்றன.

மருமகள் முன்னே மகனைக் கண்டிக்க முடியாமல் தவித்தாள், அவன் தாய். ஒருநாள், அடக்கமுடியாமல் கேட்டுவிட்டாள்.

''டேய்.. நீ பண்ணுவது உனக்கே நல்லா இருக்கா? வீட்டில் உனக்காக ஒருத்தி இருக்கிறாள் என்கிற நினைப்பு உனக்கு வரலையாடா?''

''வேண்டாம்னு சொல்லியும் கட்டி வைத்தாய்.. இப்போ அனுபவி'' என 'வெடுக்'கென்று பாம்பாய் கொத்திவிட்டுச் சென்ற மகனைப் பார்த்து வாயடைத்துப் போனாள், தாய்.

இரவு வெகுநேரம் கழித்து வந்தால் 'கோவிலுக்கு போய் வந்திருக்கிறான். 'அவனை சத்தம் போடாதே' என்றும், எங்கேயாவது தங்கிவிட்டால் 'பஜனை போலிருக்கு.. அதான் தங்கிவிட்டான்' என்றும் மாமியார் சமாளிப்பதைப் பார்த்து பரிதாபப்பட்டாள், வித்யா.



பாவம்.. கட்டாயப்படுத்தி மகனை எனக்குத் தாலிக்கட்டச் சொல்லிவிட்டார்.. மகன், என்னுடன் சேர்ந்து வாழாதது அவருக்கு குற்ற உணர்வைத் தருகிறது.

குதிரையைத் தண்ணீரின் அருகில் கொண்டுவிடத்தான் முடியும். குடிக்க வைக்க இயலுமா?

அவன் மனம் மாறி வித்யாவுடன் வாழ்க்கையைத் தொடங்க வேண்டும்.. மனம் மாறுவானா? பெருமூச்சு விட்டாள்,தாய்.

ஆனால், வித்யாவுக்கு 'கோவிலுக்குச் சென்று வந்தால் நெற்றியில் விபூதி குங்குமம் இல்லையே? பஜனையிலிருந்து வருகிறவனின் கையில் பூவோ, பழமோ, தேங்காயோ இல்லையே' என்று நினைக்கத் தோன்றவில்லை.

அந்த இளம் பருவத்தில் கணவனை தன் கனவு நாயகனாகக் கண்டாள். அவளது பூ மனதில் அவன் அழியா ஓவியமாக இருந்தான்.

பத்தொன்பது வயதில் முதன்முதலாய் அவள் நெருக்கமாய்ச் சந்தித்த ஆண்மகன்.. 'இவன் என் கணவன்.. இனி இவனேதான் எனக்கு சகலமும்' என்ற எண்ணமும் துளிர்விட்டது. அதனால் எழுந்த அன்பு, பிரவாகமாகப் பெருக்கெடுத்தது.

அவன் மனம் மாறி தன்னை ஏற்றுக்கொள்ளும் நாளுக்காக ஆசையுடன் காத்திருந்தாள், அவள்.

மாமியார் அவளுக்குத் தைரியம் கூறிக்கொண்டிருந்தாள். 'அம்மா வித்யா.. பொறுமையாக இரு.. நிச்சயம் அவன் மாறுவான்' என்பாள்.

இப்படியாக மேலும் மூன்று மாதம் ஓடிமறைந்தது. சில நாட்களில் அவனிடத்தில் சிறிது மாற்றம் தெரிந்தது.

அவளை ஏறெடுத்துப் பார்த்தான். அவளிடம் பேசினான். காபி வாங்கிக் குடித்தான்.

அவளுக்கு வியப்பும் திகைப்பும் மேலிட்டன. 'இதென்ன அதிசயம்?' என்று நினைத்தாள். கூடவே, மனசுக்குள் மகிழ்ச்சி. 'கணவன் திருந்தி வருகிறான். தன் வாழ்வு மங்கலமாய் மலரப் போகும் காலம் வெகுதூரம் இல்லை' என்ற நம்பிக்கை ஏற்பட்டது.

அவனுடைய அன்புக்காக உருகியவள் அவனின் அரவணைப்புக்காகவும் ஏங்கத் தொடங்கினாள்.

அன்றைக்கு வெகு அதிசயமாய் அலுவலகத்திலிருந்து விரைவாக வந்தான், ரகுவரன்.

'அம்மா எங்கே?'

'பக்கத்து வீட்டு மாமியுடன் கோவிலுக்குப் போயிருக் கிறார்கள்' என்றாள், அவள்.

'எந்தக் கோவில்?'

'சாயிபாபா கோவிலுக்கு.''

'ஓ.. அப்ப வர தாமதமாகும்.'

'ஆமாம்' வியப்புடன் அவனைப் பார்த்தாள்.

என்ன இன்றைக்கு! இத்தனை உரையாடல்!

உற்சாகமாய் காபி கலந்து தந்தவள், சமையலறைக்குள் நுழைந்துகொண்டாள். ஏதாவது தான் பேசப்போய், கணவனுக்கு மறுபடியும் 'குர்' என்று கோபம் வந்துவிடுமோ என்ற பயம்.

குக்கரை, அடுப்பில் வைத்துவிட்டு திரும்பும் முன் இரண்டு கரங்கள் வசீகரமாய் அவளை வளைத்தன.



யார் என்று அவள் திகைக்க அவசியமே இல்லை.. ஆனால், எப்படி இந்த அதிசயம் என்ற வியப்பு ஏற்பட்டது.

'இவருக்கு திடீர் என்று என்ன ஆனது? அனுமார் தன் சீடர்களின் வரிசையிலிருந்து இவரை நீக்கிவிட்டாரா?'

கரங்களின் அணைப்பு இறுகியது. அவளுள் மின் னோட்டம்.. முதன் முதலாய் கணவனின் அணைப்பில் மேனி சிலிர்த்தது.

அவளைத் தன் பக்கமாய்த் திருப்பினான். முகத்தை நிமிர்த்தினான். அவனது கண்கள் அவளை உற்றுப் பார்க்க... அவளோ கண்களை மூடிக்கொண்டாள்.

அதிசயம்! ஆனால் உண்மை!!

விந்தை! வியப்பு! தன்னையே கிள்ளிக் கொண்டாள், வித்யா... 'ஆ!' வலித்தது. ஆக... இது கனவல்ல, நிஜம்தான்!

'கடவுளே.. இந்த நாளுக்காகத்தானே நான் காத்திருந் தேன்.. இந்த அன்புக்காகத்தானே ஏங்கினேன்.. இந்த பொன்னான நேரத்தை எப்போதும் மறக்கவே முடியாதே.'

'தேனின் தித்திப்பு அடிநாக்கில் உறைந்தது போல இந்த இனிய நினைவு என் அடிமனதில் எப்போதும் இருக்கும்...' அந்த நினைப்பில் அவள் உடம்பு நடுங்கியது.. இதயம் உணர்ச்சி வேகத்தில் பலமாய் அடித்துக்கொண்டது. அதை அவனும் உணர்ந்தான்.

'வித்யா..' என்று அவளை நோக்கி குனிந்தான். கன்னங் களில்... இதழ்களில் அவனது உதடுகள் பட்டன... படர்ந்தன.

'தன் இதயம் வேலை நிறுத்தம் செய்துவிட்டதா? இல்லை... கரைந்து இரத்தத்துடன் கலந்துவிட்டதா?' அவளுக்கு மூச்சு முட்டியது.. நெஞ்சு விம்மித் தணிந்தது.

அவன் தன்னைத் திரும்பியும் பார்க்க மாட்டானா என்று இதுநாள் வரை ஏங்கியவளுக்கு அவனது பார்வை அவள் மீது பட்டதுமல்லாமல் அணைப்பும் கிட்டியதே..

அவளது வேண்டுதல் வீண்போகவில்லை!

அவனது அணைப்பு இறுகியது... நேரம் நின்றுபோய் உலகமே ஸ்தம்பித்தது போலத் தோன்றியது.

'ஸ்ஸ்ஸ்...' குக்கர் சீறியதும், திடுக்கிட்டு இருவரும் விலகினர்.

வியர்த்திருந்த தன் முகத்தை கைக்குட்டையால் துடைத்துக் கொண்டு அங்கிருந்து சென்றான், அவன்.

'ச்சே! விவஸ்தை இல்லாத குக்கர்.. இப்போதுதான் கத்த வேண்டுமா?' மனசுக்குள் மறுகினாள், வித்யா.

அன்று இரவு அவன் எங்கும் செல்லாமல் வீட்டில் இருந்தது, பெற்றோருக்கு வியப்பைத் தந்தது. அடுத்து, வித்யாவைப் பார்த்தார்கள். அவர்களின் பார்வையின் அர்த்தத்தை உணர்ந்தும் உணராதவளாய் இருந்தாள், அவள்.

அன்றைய இரவு அவளுக்கு முதல் இரவாக அமைந்தது. மல்லிகை மொட்டு மலர்ந்தது போல் அவளது மேனி முழுதும் மணத்தது.

அதன் பிறகு பத்து நாள் இனிமையாகக் கழிந்தது. தினமும் நல்லபிள்ளையாக வீட்டுக்கு வந்தான். வித்யாவை வெளியே அழைத்துச் சென்றான். மல்லேசுவர தெருக்களில் ஜோடிப் புறாக்களாய் சிறகடித்தனர். ஒரு இடம் விடாமல் சுற்றினர்.

அவளிடம் அவன் வேடிக்கையாகப் பேசினான்... அவளைச் சீண்டினான்.. அன்பைப் பொழிந்தான்.. பத்து நாளும் பத்து நிமிடங்களாய் ஓடி மறைந்தன.



மகன், மனைவியுடன் மகிழ்ச்சியாய் இருப்பதைக் கண்டு மகிழ்ந்தனர், பெற்றவர்கள். பாவம்! வேதாளம் மறுபடியும் முருங்கை மரம் ஏறப்போவதை அவர்கள் அறியவில்லை. அவன், திடீரென மாயமாகிப் போனான்.. வீட்டுக்கு வரவே இல்லை. பெரிசுகள் தங்களுக்குள் ஏதோ 'கசமுச'வென்று பேசிக்கொள்வதை கவனித்தாள், வித்யா.

'என்ன ஆயிற்று... மீண்டும் அனுமன் அழைத்துவிட்டாரா என்ன? இருக்காதே. பிரமசாரிகளைத்தானே அவர் ஏற்றுக்கொள்வார். இவர் சம்சாரி ஆயிற்றே?'

'இந்தக் கேள்விக்கு அந்த மாருதிதான் பதில் சொல்ல வேண்டும்.'

அதற்குப் பதிலும் கிடைத்தது.

அவளுக்கு மொட்டை கடிதாசி ஒன்று வந்தது.

'உங்கள் சொந்த வாழ்க்கையின் இரகசியத்தை தெரிந்து கொள்ள விருப்பம் என்றால் உடனே கீழ்க்கண்ட விலாசத்துக்கு சரியாக மாலை நாலரை மணிக்கு வரவும்.'

இந்தக் கடிதத்தை நம்புவதா வேண்டாமா? இதில் குறிப்பிட்டிருக்கும் என் வாழ்க்கையின் இரகசியம் என்னவாக இருக்கும்? தலைச் சுற்றுவது போல இருந்தது, அவளுக்கு.

கடைசியில் அந்த விலாசத்துக்குச் சென்றுதான் பார்ப்போமே என்று நினைத்தாள்.

அத்தை, மாமாவிடம் என்ன சொல்வது? மருத்துவரிடம் போவதாய்.. சொல்லலாமா? ஊகூம்... பதறிப்போய் விடுவார்கள்.. வேண்டாம். கோவில் என்றால், 'நானும் வருகிறேன்' என்று அத்தை உடனே புறப்பட்டுவிடுவார்..

சரி.. தோழி ஒருத்தியைப் பார்த்துவிட்டு வருவதாகச் சொல்லிவிடலாம்.

'இத்தனை நாட்கள் இல்லாத தோழி திடீர் என்று எங்கிருந்து முளைத்தாள்?' என்று கேள்வி எழும். ஏதாவது சொல்லிச் சமாளிக்க வேண்டும்.

ஒருவழியாகப் புறப்பட்டு விட்டாள்.

கையிலிருந்த விலாசத்தை வைத்துக்கொண்டு யார் யாரிடமோ விசாரித்து, அந்த வீட்டைக் கண்டுபிடித்தாள்.

அது, சிறிய வீடுதான். 'இங்கு என்ன இரகசிய பூதம் புதைந்து கிடக்கிறது?'

'கதவைத் தட்டியதும் ஏதாவது பூதம் எட்டிப்பார்க்குமா? அந்த பூதத்தைக் காணத்தான் வந்திருக்கிறேனா?' யோசித்தவாறே அழைப்பு மணியை அழுத்தினாள்.

சில கணங்களில் கதவு திறந்தது. இளம் பெண் ஒருத்தி இரவு உடையிலேயே வெளிவந்தாள்.. அவளுக்கு இன்னும் இரவுதானோ என்னவோ?

விரிந்து கிடந்த கூந்தலை வாரி முடித்துக்கொண்டே வித்யாவைப் பார்த்தாள்.

அவளுக்கு இருபத்தி நான்கு வயது இருக்கும். அழகும், இளமையும் பொங்கி வழிந்தன. 'என்ன வேண்டும்?' என்று வினவினாள்.

என்ன சொல்வது என்று தெரியாமல் தடுமாறினாள், வித்யா. 'இவள் யாரோ தெரியாது. இவளுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? வாழ்க்கை இரகசியம் என்று உளறிய ஒரு கடிதத்தை நம்பி, இங்கே வந்தது முட்டாள்தனம். பேசாமல் திரும்பிவிட வேண்டும்' என்று நினைத்தாள்.

'சாரி' என்று சொல்ல வாய் திறந்தவள் அப்படியே மலைத்து நின்றாள். 'ஷோபா.. யார் அது?' என்று கேட்டுக் கொண்டே வெளிவந்தவன் வேறு யாரும் அல்ல, சாட்சாத் அவளது கணவன் ரகுவரனேதான்!



## 6



'தலையில் இடி விழ' என்பார்கள்! அந்த அனுபவத்தை அப்போதுதான் உணர்ந்தாள் வித்யா.

அவளது கணவன், வேறொருத்தியின் வீட்டில்.. மோகப் படுக்கையிலிருந்து எழுந்து வந்த கோலத்துடன்...

அவளது உடம்பெல்லாம் எரிந்தது... மனதுக்குள் தீயின் தகிப்பு..

ஆக.. தன் கணவன் போட்ட அனுமார் பக்த வேடம் எல்லாமே பொய்.. இவருடைய நடிப்பில் தான் மட்டுமல்ல... அத்தையும் மாமாவும் தான் ஏமாந்திருக்கிறார்கள்..

பாவம்! அவர்களுக்குத் தெரிந்தால் அதிர்ச்சியில் உடைந்துவிடுவார்களே.. உத்தமபுத்திரனைப் பெற்றிருக்கிறோம் என்று பெருமையோடு இருக்கும் அந்தப் பெற்ற உள்ளங்கள், ரகுவரனின் இரட்டை வேடத்தை அறிந்தால் அவ்வளவுதான்... நொந்து நூலாகிவிடுவார்களே..

குழம்பி நின்றது, வித்யா மட்டுமல்ல.. ரகுவரனும்தான்.

வித்யாவைக் கண்டு உறைந்து நின்றான். என்றைக்காவது அவளுக்குத் தெரியத்தான் போகிறது என்று நினைத்தாலும் இப்படி திடீர் என்று வெட்டவெளிச்சமாகும் என்று எதிர்பார்க்காததால் திடுக்கிட்டுப் போனான்.

'வித்யா.. நீ எங்கே இங்கு?' தடுமாறிக் கேட்டான்.

'அதை.. நான் கேட்க வேண்டும்.. நீங்கள் எதுக்காக இந்த வீட்டில்.. இவள் யார்?'

தயங்கினான், அவன். பட்டென்று வாய் திறந்து பேசினாள், அந்தப் பெண் ஷோபா.

'ஏன் மென்று விழுங்குகிறீர்கள்,ரகு? சொல்லுங்களேன். நான் உங்களுக்கு என்ன வேண்டும் என்று. இவள்தான் உங்கள் புதுமனைவி, இல்லையா? இதோ பாரு, வித்யா.. இவர் என் கணவர்.. அதாவது கணவராகப் போகிறவர். நீ இவரைக் கைப்பிடிக்கும் முன்பே எங்களுக்குள் காதல் ஏற் பட்டுவிட்டது. என்னைத்தான் மணக்க இருந்தார். ஆனால்..'

இடைமறித்தாள், வித்யா. கணவனிடம் சொன்னாள்: 'இந்த உண்மையை அத்தை, மாமாவிடம் சொல்லி இருக்க லாமே.. அவர்களையும் ஏமாற்றி.. என்னையும் ஏமாற்றி.. ச்சே.. ' அருவெறுப்புடன் முகத்தைத் திருப்பிக்கொண்டாள்.

'உன்னை ஏமாற்றியது என்னவோ உண்மை. என் அப்பா, அம்மாவை ஏமாற்றியதாகச் சொல்லாதே... அவர்களுக்கு இது தெரியும் அவர்களின் பிடிவாதத்தால்தான் உன் கழுத்தில் தாலி கட்டினேன். நான், வேண்டாம் என்று சொல்லிப் பார்த்தேன். விஷம் தின்று உயிரை விட்டுவிடுவோம் என்று பயமுறுத்தி என்னை சம்மதிக்க வைத்தார்கள்.'

அதிர்ச்சி மேல் அதிர்ச்சி.. இடிமேல் இடி!

பெற்றோருக்கும் தெரியுமாமே.. தெரிந்துதான் நாடகம் நடத்தினார்களா? இந்த கண்றாவிக்கெல்லாம் அவர்களும் காரணமா?

என்ன உலகம் இது? ஏமாறுபவர்கள் இருந்தால் ஏமாற்றும் மனிதர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். ச்சே! கோவிலாம்.. பஜனையாம்.. என்னமாய் கதை அளந்தார்கள்?

இப்படியும் ஒரு பெற்றவர்களா? மகனின் வாழ்க்கைக் காக அறியாப் பெண்ணான என்னைப் பலிகடா ஆக்கி, எல்லோருமாய் சேர்ந்து என் தலையில் கல்லைப் போட்டுவிட்டார்கள். இனி.. என் வாழ்வின் கதி?



அவனை நோக்கித் திரும்பினாள். 'இனி உங்கள் முடிவு என்ன? என்னோடு வாழ்க்கையா? இல்லை.. இவளுடனா?'

சொல்லும் போதே வித்யாவின் கண்கள் அவளை அளந்தன.

'அப்படியென்ன என்னைவிட பிரமாதம்.. இவளிடம் மயங்கி என்னை ஏன் நிராகரித்தார்?

உடல் வாளிப்பையும், செயற்கை சாதனங்களால் அழ கூட்டப்பட்ட முகத்தையும் கண்டு மயங்கிப் போனாரோ என்னவோ..

இவளைவிட தான், நிச்சயம் அழகிதான்' என்று நினைத்துக் கொண்டாள், வித்யா.

பொன்னிற மேனி... துடைத்துவிட்டது போல வழவழத்த வதனம்.. செதுக்கி வைத்த சிலை போன்ற மேடு பள்ளங்கள், நீண்ட... அழகிய கண்கள். விற்புருவம்.. சிவந்த இதழ்களின் மேல் சிங்காரமான நாசி.. சங்கு கழுத்து.. கருகருவென்ற அடர்ந்த கூந்தல்.. நிச்சயம் எந்த ஆடவனும் கர்வத்துடன் கண்சிமிட்டும் எடுப்பான தோற்றம்... ஆனால், காதலை கண்களில் பூசிக்கொண்டிருந்தவனின் பார்வைக்கு இதெல் லாம்,, கழிசடையாய்த் தெரிந்ததோ என்னவோ? நெஞ்சை அடைத்தது போல வேதனை.

அவளது கேள்விக்கு நிதானமாய் பதில் சொன்னான், ரகுவரன்.

ஒவ்வொரு வார்த்தையும் சம்மட்டி அடியாக அவளது இதயத்தை சிதைத்தது. கத்தியின் கூர்முனையாய் நெஞ்சைக் கீறியது.

'இவளுடன் தான் என் வாழ்க்கை... இது என் தீர்மானம்.. இவள்தான் என் மனதில் இடம்பிடித்தவள். என் மனமும்

உடலும் இவளுக்குத்தான் சொந்தம். இவளைப் பிரிந்து என்னால் வர முடியாது. இங்கே நிற்பதும் போவதும் உன் விருப்பம். என் வாரிசை சுமந்திருக்கும் இவளை விட்டு விட்டு உன்னுடன் வாழ்வது என்பது இனி முடியாத காரியம்.'

நிர்தாட்சண்யமாய் அவன் கூறியதைக் கேட்கக் கேட்க அவள் உள்ளமும், உடலும் குறுகிப்போனாள்.

அருகில் இருந்த ஷோபாவின் முகத்தில் கர்வம் தெரிந்தது. இருக்காதா பின்னே.. அவனது அன்பை பெறும் போட்டியில் வெற்றிக்கொடி நாட்டியவள், ஆயிற்றே.

அநியாயமாய் ஏமாந்துபோன ஒரு பெண்ணின் உள்ளம், உள்ளுக்குள் ஊமையாய் அழுவதை அவள் எப்படி உணருவாள்?

அதுசரி.. அந்த பத்து நாட்கள்.. காதல் என்றானே.. கட்டிப்பிடித்தானே.. அது பச்சோந்தித்தனமா? மனதை சந்தேகப் புழு அரிக்க.. நெஞ்சம் தாளாமல் அவனைக் கேட்டு விட்டாள்.

'இவள் மீது காதலா.. அது உண்மையென்று நம்புகிறீர்களா?'

'சந்தேகம் இல்லை. இவளைத்தான் காதலிக்கிறேன்.'

'அப்படி காதலிப்பவர் எப்படி.. எப்படி.. என்னோடு பத்து நாட்கள் நெருக்கமாய் வாழ்ந்தீர்கள்? ஒரு பெண்ணை மனதாரக் காதலிப்பவர் இன்னொரு பெண்ணை ஏறெடுத்தும் பார்க்க மாட்டார்களே.. நீங்கள் என்னுடன் தாம்பத்தியமே நடத்தி இருக்கிறீர்கள்.. நீங்கள் காதல் என்று நினைப்பது வெறும் காமமா?'

வார்த்தைகள் சாட்டையடிகளாய் அவனை விளாசியது.



ஷோபாவின் முகம் கோபத்தில் சிவந்தது. 'என்ன.. பத்து நாட்களா.. இவளுடன்.. ச்சே.. நீங்கள் இத்தனை மோசமாய் இருப்பீர்கள் என்று நான் நினைக்கவில்லை' என்று அவள் கத்த...

'ஷோபா.. கொஞ்சம் பொறுமையாகக் கேளேன்... எனக்கும் உனக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டு நீ என்னுடன் பேசாமல் இருந்தாய் பாரு.. உன் மேல் எழுந்த கோபம்தான் என்னை இவள் பக்கம் திருப்பியது.'

'அடடா.. ஆண்கள் தங்கள் பலவீனத்தை மூடிமறைக்க எப்படியெல்லாம் கதைவிடுகிறார்கள்' அவன் காதுபட முணுமுணுத்தாள், வித்யா.

அடி விழுந்தால் தொடக்கத்தில் வலிக்கும்.. அடிமேல் அடி விழுந்தால் வலி தெரியாமல் மரத்துப் போகும்.. அது போலத்தான் வித்யாவின் வார்த்தைகள் ஊசி பாய்ந்தது போல் முதலில் வலித்தன... அதற்குப் பிறகு அவன், அதைப் பொருட்படுத்தவே இல்லை.

கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தவளாய் பேசினாள். 'சரி.. உங்கள் முடிவை நீங்கள் சொல்லியாகிவிட்டது. இனிமேல் உங்களுடன் வாழ்வது என்பது எனக்கும் முடியாத ஒன்று... ஒரு பெண்ணின் வாழ்க்கையோடு விளையாடிவிட்டு வெகுசுலபமாய் விலகிக்கொள்வது உங்களுக்குச் சாதாரணமாய் தெரிகிறது.

என் எதிர்காலத்தை இருட்டடித்துவிட்டீர்கள் என்பதை நீங்கள் உணரமுடியாமல் காமம் உங்கள் கண்களை மறைக்கிறது. அதற்காக நானும் தளர்ந்துவிட மாட்டேன். நீங்கள் செய்த தப்பை உணரும் காலம் வரும். மனசாட்சி உங்களை குத்தியெடுக்கும். அதுபோதும் எனக்கு. 'குட்பை' என் பழைய ரகுவரன்.'

அவனைத் திரும்பிக்கூடப் பார்க்காமல் நடந்தாள், வித்யா. உள்ளம் கொதிகளமாய்த் தகித்தது.. அழுகையை அடக்கிக் கொண்டு விரைந்தாள்.

பேருந்து நிலையத்தில், அவளுக்காகக் காத்திருந்தவனைப் போல ஒருவன் வந்து நின்றான்.

'சாரி.. கசப்பான உண்மையை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்று நான்தான் கடிதம் எழுதினேன். நீண்ட நாளாய் அவர்கள் இருவரும் இப்படி இருப்பது எனக்குத் தெரியும். ரகுவரன் உங்களைக் கல்யாணம் செய்து கொண்டதை அறிந்ததும் அதிர்ச்சி அடைந்தேன்.

உங்களுக்கு உண்மை தெரியவேண்டும் என்றுதான் இந்தக் கடிதத்தை எழுதினேன். இது உங்கள் மனதுக்கு வேதனை தந்திருந்தால் மன்னித்துவிடுங்கள். ஒரு பெண்ணுக்கு அநியாயம் நடக்கிறது என்பதைப் பொறுக்க முடியாமல் தான் இப்படி...'

'நன்றி' என்று மட்டும் சொன்னாள், அவள். அவளுடைய வேதனையைப் புரிந்துகொண்டவன் போல நகர்ந்தான், அந்த இளைஞன்.

'யாரோ ஒரு ஊர், பெயர் தெரியாதவனுக்கு இருக்கிற கரிசனம் கூட, தாலி கட்டியவனுக்கு இல்லையே?' வித்யாவின் கண்கள் கலங்கின. அவன் சென்ற திசையை வெறித்தவாறு நின்றாள்.

தன் வாழ்க்கையே வெறுமையானது போல உணர்வு. மல்லேசுவரம் செல்லும் பேருந்து நிற்க, ஏறிக் கொண்டாள்.

அவளது மனதைபோல அந்தப் பேருந்தும் பாரத்தைச் சுமந்து, தள்ளாடிச் சென்றது.



# 7



ரகுவரனின் பெற்றோருக்கு முகத்தில் கரியைப் பூசிக்கொண்டது போல அவமானமாக இருந்தது. மருமகளுக்கு எது தெரியவே கூடாது என்று நினைத்தார்களோ அது தெரிந்து விட்டது. அவர்கள் நினைத்தது ஒன்று.. ஆனால், நடந்தது வேறு.

மகன் தவறான பாதையில் செல்கிறான் என்று அறிந்தபோது அது வாலிபக் கோளாறு.. கால்கட்டு போட்டு விட்டால் சரியாகிவிடும் என்று எல்லாப் பெற்றவர்களைப் போலவே கணக்குப் போட்டனர். சிலரின் கணக்குகள் மெய்யாகிவிடும். இன்னும் சிலரின் கணக்குகளோ பொய்யாகி விடுகிறது.

ரகுவரன் விஷயத்திலும் அதேதான் நடந்தது. ஷோபா தங்கள் வீட்டு மருமகளாக வருவதில், அவனது பெற்றோருக்கு சுத்தமாய் விருப்பமில்லை. நல்ல குடும்பத்து பெண்ணாகப் பார்த்துப் பிள்ளைக்குக் கட்டி வைத்தால் அவன், அவள் வழிக்கு வந்துவிடுவான் என்ற நம்பிக்கை.

அந்த நம்பிக்கை இப்போது அவநம்பிக்கையாகி, அநியாயமாய் ஒரு பேதைப் பெண்ணின் வாழ்க்கையை நரகமாக்கிவிட்டது.

உள்ளூர் பெண் என்றால் உடனே தெரிந்துபோகும் என்று சென்னையிலிருந்து வித்யாவைத் தேர்ந்தெடுத்தனர். வித்யாவைப் பார்த்ததுமே அவர்களுக்கு மிகவும் பிடித்து விட்டது.

வித்யாவின் வீட்டிலோ நல்ல மாப்பிள்ளை கிடைத்ததாக நினைத்து மனம் பூரித்துப் போயினர்.

அத்திப்பழம் சிவப்புதான்.. அதைப் பார்த்து ரசித்தால் அழகுதான்.. ஆனால், உள்ளே புழு நெளியும்.. மகளைக் கொடுத்த இடத்தில் இந்தக் கதைதான் என்று அறியாமல் அவள் சொர்க்க வாழ்வு நடத்துவதாய் மகிழ்ச்சி அடைந் தார்கள்.

ஒருவேளை நன்றாக விசாரித்திருந்தால் குட்டு வெளிப் பட்டிருக்கலாம். ஆனால், வித்யாதான் ரகுவரனைப் பார்த்ததும் மயங்கிவிட்டாளே.. மானசீகமாய் கணவனாக மனதில் வரித்துவிட்டாளே... அவளது கண்களுக்கு அவன் ரகுகுலத் திலகம் ராமச்சந்திர மூர்த்தியாகவே தெரிந்தான்.

அவன் இராமன் அல்ல.. ருக்மணியை மணந்து சத்ய பாமாவையும் நேசித்த கிருஷ்ணன் என்று அவள் எப்படி அறிவாள்?

நடந்து முடிந்த தவறில் அனைவருக்குமே பங்குண்டு.

'வித்யா.. எங்களை மன்னித்துவிடும்மா.. சத்தியமா என் பிள்ளை திருந்துவான் என்றுதான் இந்தக் கல்யாணத்தை நடத்தினோம். நீதான் மருமகளாக வரணும்னு மனசார விரும்பினோம். உன்னைக் கைப்பிடித்த நேரம், அவன் திருந்தி நல்ல பிள்ளையா வருவான் என்ற நப்பாசை தான்ம்மா.. இப்படி விபரீதம் ஆகும்னு நாங்கள் நினைக் கவே இல்லைம்மா.. எங்களை மன்னித்துவிடும்மா...'

அவர்களது கெஞ்சும் குரலைக் கேட்டுப் பரிதாபப் பட்டாள், வித்யா.

'பாவம்.. அவர்கள் என்ன செய்வார்கள்? மகனின் நன்மைக்காக எதுவும் செய்யத் தயாராக இருந்தனர். 'அவர்களைச் சொல்லி குற்றமில்லை. எல்லாம் என் விதி.. தலையெழுத்து நன்றாக இல்லை.. எச்சிலாகிப்போன அவர்,



எனக்கு வேண்டவே வேண்டாம்' மனசுக்குள் புலம்பினாள், வித்யா.

வெளிப்படையாக எதுவும் பேசாமல் மவுனம் சாதித் தாள். பெற்றவர்கள் பதறி வந்து, அழைத்துப் போனபிறகும் மவுனம்தான்.

களிப்புடன் தொடர்ந்த மணவாழ்க்கை வெறும் கனவாக முடிந்துபோனது. அதுவும் பகல் கனவு!

**த**ன் கண்களில் இருந்து வழிந்த நீர், கன்னத்தைத் தொட்ட போதுதான் அழுதுகொண்டிருக்கிறோம் என்று உணர்ந்தாள்.

'ஏன் அழவேண்டும்? அந்த மோசக்காரனை நினைத்து அழுவதும் வீண்.'

கண்களைத் துடைத்துக்கொண்டாள்.

தன்னையே கேட்டுக்கொண்டாள். 'உண்மையில், நடந்து முடிந்ததற்காக அழுகிறேனா..? இல்லை, நடக்கக்கூடாதது எல்லாம் நடந்ததற்காக அழுகிறேனா? எதற்காக? ஏன்?'

இருண்டு கிடந்த உள்ளத்தைத் துளாவித் தேடினாள். எங்கேனும் ஓர் மூலையில் உண்மை ஒட்டிக் கொண் டிருக்குமோ.. அந்த உண்மை எதுவாக இருக்கும்?

ரகுவரன் மீது இருக்கும் அன்பு மாறாததா? ச்சே... பாழாய்போன மனம், அவனை மறக்கமுடியாமல் அவனது நினைப்பிலேயே கிடக்கிறது.

கவுதமுக்கு என்ன குறை? ரகுவரனைவிட நூறு மடங்கு... ஆயிரம் மடங்கு உயர்ந்தவன். பண்பில் ஆகட்டும்... பரந்த மனப்பான்மையில் ஆகட்டும், எத்தனை உயர்ந்தவன். அவனை ஏன் ஏற்றுக்கொள்ள முடியாமல் தவிக்கிறது என் நெஞ்சம்?

'ஒருவேளை, ரகுவரனை மனதிலிருந்து இன்னும் முழுமையாக அழிக்காமல் இருக்கிறேனா.. என் வாழ்க்கையில் சூறாவளிக் காற்றாய் வந்து, என் இதயத்தை சின்னா பின்னமாக்கியவனை இன்னும் உள்ளுக்குள் பொத்தி வைத்திருக்கிறேனா.. ஏன் அவனைப் பார்த்தவுடன் நினைவுக் குப்பைகளில் சிறைப்பட்டுத் தவிக்கிறேன்?'

நெஞ்சு அடைத்துக்கொண்டு வர..... எழுந்து போய் தண்ணீர் குடித்தாள்.

கணவன் மீது பார்வையைச் செலுத்தினாள். நிம்மதியாய் உறங்கிக் கொண்டிருந்தான், அவன்.

'இந்த நிம்மதியும் உறக்கமும் எனக்கில்லையே,ஏன்?' என்று ஏங்கினாள்.

படுத்தவள், கண்களை இறுக மூடிக்கொண்டாள். மனதைக் கட்டுப்படுத்தினாள். நுரை மெத்தைகூட கல் மெத்தை போல இம்சித்தது. எப்படியோ அவள் ஒருவிதமாய் தூக்கத்தில் ஆழ்ந்தபோது நேரம் நள்ளிரவைத் தாண்டி விட்டது.

மறுநாள்.. வெளியே செல்ல மனமின்றி 'தலைவலி' என்று அறையிலேயே தங்கிவிட்டாள், வித்யா.

அவளைக் கூர்ந்து பார்த்த கவுதம், அவளது சிவந்திருந்த கண்களையும் வீங்கியிருந்த இமைகளையும், முகத்தையும் கண்டு, ஓரளவு புரிந்துகொண்டான்.

'ஓ.. இவள் அழுதிருக்கிறாள்... இரவெல்லாம் இவள் வேதனையில் கண்ணீர்விட்டிருக்க, நான் சுகமாய் உறங்கி இருக்கிறேன்.'

அந்த நினைப்பில் அவனுக்கு இதயம் வலித்தது. அவளைத் தோளில் சாய்த்துக்கொண்டு அவளது



கண்ணீரைத் துடைக்கும் உரிமை இருந்தாலும் உள்ளம் தயங்கியது.

காய், தானாகக் கனிய வேண்டுமே தவிர தடியால் அடித்துக் கனிய வைக்க முடியாது. கனி மட்டுமா? பெண் மனதும்தான். அதுவாக மலர வேண்டும்.

வித்யாவின் மனம், பூட்டி வைத்த பெட்டகம் போல இன்னும் இறுகியே கிடக்கிறது..

'அந்தப் பூட்டு கழன்று.. மனப்பெட்டகம் திறந்து.. தன்னை ஏற்றுக்கொள்ளும்படி அவள் பேசும்வரை தன் கரங்களை அடக்கி வைத்திருக்க வேண்டும்' பெருமூச்சு விட்டான், அவன்.

அவளை மேலும் தொந்தரவு செய்ய மனமின்றி, அவளுக்கு காலை உணவு ஏற்பாடு செய்துவிட்டு வெளியே சென்றான்.

குளித்துவிட்டு வந்த வித்யா, உணவுக்குப் பின் சின்னத் திரையை இயக்கினாள். கண்கள் ஏதோ ஒரு தொடரை உற்றுப் பார்த்துக் கொண்டிருக்க... மனம் எங்கெங்கோ அலைபாய்ந்து கொண்டிருந்தது.

அடுத்து வந்த காட்சிகள், கல்லூரியின் உல்லாசமான நாட்களை காட்டியது. கவலையற்ற அந்த வாழ்க்கையை அவளும் அனுபவித்திருக்கிறாள்... பட்டாம் பூச்சியாய் சிறகடித்துத் திரிந்த காலம்! கவலைகளை சந்தித்திராத பருவம்! சிட்டுகளாய் வலம் வந்த அந்த இனிய நாட்களின் இன்பம் திரும்பி வருமா...?

பாட்டும் கூத்துமாய்.. வேடிக்கை விளையாட்டாய்... குதித்துக் கொப்பளித்த அந்த தித்திக்கும் நாட்கள், வாழ்க்கையின் வசந்தம் அல்லவா?

உள்ளிடப்பேசி ஒலித்தது. வித்யா, எடுத்தாள். ''மேடம்.. உங்களுக்காக ஒருவர் வரவேற்பு கூடத்தில் காத்திருக்கிறார்'' வரவேற்பு பெண்ணின் குரல் சொல்லியது.

குழம்பினாள், வித்யா.

'என்னையா? என்னைப் பார்க்க வந்திருப்பது யார்? நான் இங்கிருப்பது யாருக்குத் தெரியும்?'

'ஒருவேளை கவுதமின் நண்பனது சகோதரியாக இருக்கலாம். ஏதேனும் தகவலோ, பொருளோ அனுப்ப வேண்டி வந்திருக்கிறாள் போலும்.'

அவர்களது உபசரிப்பு நினைவுக்கு வந்தது. காக்க வைப்பது தப்பு என்று நினைத்து, விரைந்தாள். கீழே இறங்கி வந்ததும் கண்களை சுழற்றிப் பார்த்தாள்.

எந்தப் பெண்ணும் கண்ணில் படவில்லை. மாறாக, ரகுவரன் பொங்கும் புன்சிரிப்புடன் எழுந்தான்.

அவனைப் பார்த்து, நிலைகுலைந்து நின்றாள், வித்யா.

## 8



இப்போது ரகுவரனைச் சந்திப்போம் என்று சத்தியமாக நினைத்துப் பார்க்கவில்லை, வித்யா.

அவனை எதேச்சையாய் மல்லேசுவரத்தில் சந்தித்ததே எதிர்பார்க்காதது தான். அத்தோடு முடிந்தது என்றுதான் நினைத்தாள், அவள். ஆனால், இப்போது எப்படி இங்கு?

தான் தங்கி இருந்த ஒட்டலை எப்படி கண்டுபிடித்தான் என்று குழம்பினாள்.

அவளது நினைவு ஒட்டத்தை அப்படியே அறிந்தவன் போல பேசினான், ரகுவரன்.



''ரொம்ப எளிது. காரின் பின்னால் ஒட்டலின் பெயர் இருந்தது. அதை கவனித்தேன். வந்தேன். அவ்வளவுதான்'' தோள்களைக் குலுக்கியவாறு சொன்னான்.

இப்போது என்ன செய்வது? இங்கேயே பேசி அனுப்பி விடுவதா? இல்லை அறைக்கு அழைத்துப் போவதா? கவுதம் என்னதான் பரந்த உள்ளம் கொண்டவனாக இருந்தாலும், தன் மனைவி, மாஜி கணவனை அறைக்குள் அழைத்து வைத்துப் பேசினால் ஒப்புக்கொள்வானா?

செய்வது அறியாமல் தவித்து நின்றாள், வித்யா.

இப்போது அவளது தவிப்பை உணராதவன் போல பேசினான், ரகுவரன்.

''என்ன வித்யா.. என்னுடன் பேசக்கூடாது என்று கட்டுப்பாடா?''

''அப்படி ஒன்றும் இல்லை..'' சமாளித்துக் கொண்டு சொன்னாள், அவள்.

''பின்னே.. ஒரு 'அலோ'கூட சொல்லவில்லையே.. ரொம்ப நாளைக்கு அப்புறம் சந்திக்கிறோம். என்ன, ஏதுன்னு விசாரிக்க மாட்டாயா?''

அவனுடைய இந்தப் பேச்சு அவளுக்கு வியப்பைத் தந்தது.

தன்னை வெறுத்து ஒதுங்கியவன்.. தனது உறவே வேண்டாம் என்று துண்டித்தவன்.. இப்போது தேடிவந்து பேசுவது என்பது.. இரவில் கண்ட கனவின் தொடர்ச்சி போல அல்லவா இருக்கிறது.

''என்ன வித்யா?''

''திடீரென்று வந்திருக்கிறீர்களே.. அந்தத் திகைப்புதான்.. வாருங்கள்.''

அறைக்குள் அழைத்துச் சென்று சோபாவில் அமரச் செய்தாள். உள்ளிடப் பேசியை எடுத்து காபிக்கு 'ஆர்டர்' செய்தாள்.

கண்களால் அந்த அறையை அளந்துகொண்டிருந்தான், ரகுவரன்.

நட்சத்திர ஓட்டல் ஆயிற்றே.. வசதியைப் பற்றிச் சொல்ல வேண்டுமா என்ன? ஏறக்குறைய தனி வீடு போல அத்தனை வசதிகளுடன் இருந்தது. அந்த அறை.

குளுகுளு வசதி, டி.வி., சோபா, பெரிய கட்டில், அதன் மேல் நுரைமெத்தை..

'ஒரு காலத்தில் தனக்கு மனைவியாய் இருந்தவள் இப்போது இன்னொருவனின் மனைவியாய் இந்தக் கட்டிலில்.. வாழ்க்கையே வினோதம்தான்!' நினைத்தான், ரகுவரன்.

அவனது கண்கள், கட்டில் மீது தாவுவது கண்டு முகம் சுளித்தாள், வித்யா. அவனது மனம் என்னென்ன நினைக்கிறதோ...?

''பரவாயில்லை வித்யா... பணக்காரக் கணவனைப் பெற்றுவிட்டாய்.. ஏதோ லண்டனில் இருப்பதாய் கேள்விப் பட்டேன். காதல் திருமணமா?''

பதில் சொல்லவில்லை அவள். பதில் சொல்லவும் பிடிக்கவில்லை.

அவன் ஒரு மாதிரியாகச் சிரித்தான்.

''உன் கணவனுக்கு நம் கதை எல்லாம் தெரியுமா? என்ன சொன்னார் அவர்?''

'எல்லாமே' என்ற வார்த்தைக்கு அவன் கொடுத்த அழுத்தம், அவன் எதை உணர்த்துகிறான் என்று புரிந்து கொள்ள முடிந்தது.



தனக்குள் எழுந்த ஆத்திரத்தை, சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள், வித்யா. விதியின் விளையாட்டால் முதன் முதலில் தனக்குத் தாலிக்கட்டியவன் என்பதால் எது வேண்டுமானாலும் பேசுவதா? நல்லவேளையாய் அவனது கேள்விக்கு தப்பிக்கும் வழி கிடைத்தது.

அழைப்புமணி ஓசை கேட்டது. விரைந்து சென்று திறந்தாள். காபி வந்தது.

ரகுவரனைக் கேள்விக்குறியுடன் பார்த்தாள், வித்யா.

''சர்க்கரை போடலாமா?''

''என்ன வித்யா.. மறந்துபோய் விட்டாயா? நீதானே எனக்கு காபி கலந்து தருவே? ச்சே! நாலு ஆண்டு இடைவெளி இல்லே... அதான் நினைவில் இல்லை..''

''சர்க்கரை'' மீண்டும் அழுத்திக் கேட்டாள்.

''கொஞ்சம் குறைவாக..''

அவள் தந்த காபியை வாங்கிக் குடித்தான். கண்கள் அவளையே துளைப்பது போல பார்த்தன. தன்மேல் ஏதோ ஊறுவது போல உணர்ந்தாள், வித்யா. 'என்ன பார்வை இது? உடலை உறிஞ்சுவது போல.ச்சே!'

தன்னை குறுகுறுவென்று அவன் பார்க்கமாட்டானா என்று ஏங்கி நின்ற காலம் ஒன்று.. இப்போது இந்த விழுங்கும் பார்வையைக் கண்டு அவள் உடலும், உள்ளமும் கூசிப்போனாள்.

ரகுவரனின் சிந்தனை வேறாக இருந்தது. வித்யாவின் மெருகு ஏறிய வனப்பு மேனி அவனை வாட்டி வதைத்தது.

'இந்த அழகையா வெறுத்து ஒதுக்கினேன்? இந்த செழுமையையா கண்கொண்டு பாராமல், பாதியில் விலக்கினேன்' தன்னையே கடிந்து கொண்டான்.

ஆனால், திருமணத்தின் போது ஒடிசலான தோற்றத்துடன் இருந்தாள், வித்யா. அதுவும் 'கொழு கொழு' என்றிருந்த ஷோபாவின் முன்னே அவள். ஒட்டடைக்குச்சியாகத் தெரிந்தாள். அப்போது அவளுக்கு வயது பத்தொன்பது தான்.

இப்போது இளமைப் பூரிப்பில் தளதளவென்று இருக்கிறாள். லண்டன் வாசம் வேறு அவளது நிறத்தையும் செழுமையையும் கூட்டி இருந்தது.

கதிரவனின் கதிர் பட்டு தகதகத்த தங்கமாய் மினு மினுத்தது அவளது மேனி.

அங்கங்கள் அழகாய் அமையப்பெற்று, பொற்சிலை போல் இருந்த அவளைப் பார்த்துப் பார்த்து பெருமூச்சு விட்டான், ரகுவரன்.

''வித்யா! நீ எவ்வளவு அழகாய் இருக்கிறாய் தெரியுமா? ஒரு காலத்தில் நீ என் மனைவி என்று நினைக்கும்போது மனமெல்லாம் பூரிக்கிறது, வித்யா.''

ஏனோ அந்தப் பேச்சை கேட்கவும் பிடிக்கவில்லை. பேச்சை மாற்றினாள், வித்யா.

''உங்கள் குடும்பத்தில் எல்லோரும் நலமா?''

''உங்கள்'' என்ற வார்த்தைக்கு முக்கியம் தந்து கேட்டாள்.

அதாவது 'நான் வேறு.. நீ வேறு' என்று சொல்லாமல் சொல்வது போல!

அதை அவன் உணர்ந்தானா என்று தெரியாது. ''அப்பா போய் சேர்ந்தாச்சு.. அம்மா என்னோடு இல்லை.''

''உங்க மனைவி?''



''ஷோபாவுக்கு உடல்நலம் சரியில்லை. அன்றைக்கு பார்த்திருப்பாயே? உடம்பு ஒடுங்கி, தளர்ந்துபோய்.. பலவீனமாகிவிட்டாள். ரொம்ப நாள் வாழ்வது சிரமம்னு டாக்டர் சொல்லிவிட்டார்.''

அவனது குரலில் சிறிதும் வருத்தம் இல்லை.. ஒரு வேளை உணர்வுகள் மரத்துப்போய்விட்டதோ என்னவோ?

''குழந்தைகள்?''

''இரண்டு. மூத்தது ஆண். சின்னது பெண். கைக்குழந்தை.''

ஆறுதலாய் சொன்னாள்,அவள். ''வருத்தப்படாதீர்கள், கடவுள் கை விட மாட்டார். ஷோபாவுக்கு எதுவும் நேராது.''

''ப்ச்சு.. பொய்யான நம்பிக்கையில் வாழ்க்கை இல்லை, வித்யா. ஷோபா, மிஞ்சிப்போனால் இன்னும் இரண்டு ஆண்டுதான் இருப்பாள். அதைவிடு, வித்யா. உன் கணவர் எப்படி?''

''ரொம்ப நல்லவர். என்னை விரும்பி மணந்தவர். என்னை மிகவும் நேசிக்கிறார்.''

வெளிப்படை வார்த்தைகள் இவை என்றாலும், மனதில் குரல் முணுமுணுத்தது. 'நான்தான் இன்னும் அவரைக் கணவராய் நினைக்கவும் தயங்குகிறேன். அவரிடம் இருந்து எட்டியே இருக்கிறேன்.'

''ஏன்.. வித்யா.. என்னை நீ எப்போதாவது நினைப்பது உண்டா?''

அவள் திகைத்துப் போனாள்.

அந்தக் கேள்வியை அவள் எதிர்பார்க்கவில்லை. என்ன பதில் சொல்ல முடியும்!

அவன் கீறிவிட்ட புண் இன்னும் ஆறாமல் எரிச்சல் ஊட்டிக்கொண்டிருப்பதைச் சொல்லுவதா? அந்த வேதனையில் இன்னும் சகஜநிலைக்கு வர இயலாமல் தவித்துக் கொண்டிருப்பதைச் சொல்லுவதா? இரவும் பகலும் பழைய நினைவுகள் ஆட்கொண்டு, காற்றில் அகப்பட்ட காகிதம்போல அல்லாடுவதைச் சொல்லுவதா? அதனால் கவுதமிடமிருந்து இன்னும் விலகியே இருப்பதைச் சொல்லுவதா?

'உன்னுடன் வாழ்ந்ததை மறக்க முடியாமல் தவித்துத் தானே கவுதமைவிட்டு தள்ளி வாழ்கிறேன்' என்று சொல்ல முடியுமா?

முதல் திருமணம் கெட்டகனவு மாதிரி.. அதிலிருந்து இன்னும் மீளமுடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறேன் என்று கூறிவிட முடியுமா?

அவளது தடுமாற்றத்தைக் கண்டு புன்னகைத்தான், ரகுவரன்.

''ஓ! அப்படியென்றால் என் நினைவு இன்னும் உன் மனதில் அப்படியே இருக்கிறது என்றுதான் அர்த்தம். நான் கொடுத்து வைத்தவன், வித்யா'' என்றான், பூரிப்புடன்.

சட்டென்று நிமிர்ந்தாள், அவள். கொடுத்து வைத்தவன் என்றா சொன்னான். எதற்கு? எந்த விஷயத்தில்?

அவளது கண்களில் தெரிந்த திகைப்பைக் கண்டு சிரித்து விட்டுச் சொன்னான்.

''வித்யா.. நாளை நம் திருமண நாள். நினைவிருக்கிறதா?''

நாளை.. என்ன தேதி.. மார்ச் 2.

''ஆமாம்!'' உள்ளுக்குள் சிரித்தாள்.



அவள் அதை மட்டுமா மறந்தாள்? டிசம்பர் ஆறாம் தேதியையும்தான். இரண்டாம் திருமண நாள்!

''மறுக்கமாட்டாய் என்ற நம்பிக்கையில் உனக்கு ஒரு பரிசு வாங்கிவந்தேன். வாங்கிக்கொள்வாயா வித்யா?''

பாக்கெட்டிலிருந்து சிறு பெட்டியை எடுத்து, திறந்தான். ஒற்றைக்கல் மோதிரம் ஒய்யாரமாய்ப் பளபளத்தது.

''வேண்டாம்... எனக்கு நீங்கள் இனி பரிசு தருவது முறையில்லை'' மறுத்தாள், வித்யா.

''ஏன் கூடாது, வித்யா? ஆறு மாதம் என் தாலியை சுமந்திருக்கிறாய்.. பத்து நாள் என்னோடு மனைவியாய் வாழ்ந்திருக்கிறாய்.. அதுக்கு ஒரு அர்த்தம் இல்லையா? என்னால் உனக்கு எத்தனை வேதனை.. உனக்குத் துரோகம் செய்து விட்டேன் என்று மனசாட்சி உறுத்துகிறது, வித்யா. என்னைக் கணவன் என்று நினைக்க வேண்டாம்.. நல்ல நண்பன் என நினைத்து இதை வாங்கிக்கொள்வாயா? எனக்கும் நிம்மதியாக இருக்கும்.''

அன்று, அவள் கெஞ்சியும் ஏறிட்டுப் பார்க்காதவன் இன்று கெஞ்சிக்கேட்கிறான், ஏன் மறுக்க வேண்டும்?

வேண்டாம். வாங்காதே என்று மனதின் மூலையில் ஒரு குரல் எச்சரித்தாலும், தன்னையும் அறியாமல் அவளது கை நீண்டது.

மோதிரத்தை வாங்கினாள்.

''போட்டுக்கொள் வித்யா'' என்றான்.

அவள், தயக்கமின்றி விரலில் அணிந்துகொண்டாள்.

வெற்றி மதர்ப்பில் அவன் முகம் மலர்ந்தது. 'இன்னும் வித்யா தன்னை நினைக்கிறாள்' என்று உள்ளுக்குள் குதூகலம் கொப்பளித்தது.

இரும்பு நெகிழும்போதுதான் வளைக்க முடியும்.. அவன் சாமர்த்தியமாக அவளை வளைக்க முயன்றான்.

''வித்யா.. நாளை சந்திப்போமா? ஏதாவது நல்ல ஓட்டலில் நான் விருந்து தருகிறேன். வருகிறாயா?'' ரகுவரன் கேட்டதும், திகைப்பாய் விழித்தாள், வித்யா.

''இது கூடாதுதான்.. எப்போதோ சந்திக்கும் ஒரு நல்ல நண்பியை அழைப்பது போல உன்னை அழைக்கிறேன், வித்யா. பிளீஸ்.. மறுக்காதே..''

கடவுளே! இவன் இப்படி பேசும்போது ஏன் என்னால் மறுக்கமுடியாமல் போகிறது? முதல் காதல்.. முதல் முத்தத்தைப் போல முதல் பந்தத்தையும் மறக்கவே முடியாதோ?

இதற்கு ஒப்புக்கொண்டால் கவுதம் என்ன நினைப்பார்? தான் இங்கு வந்ததே பழைய கணவனுடன் ஊர் சுற்றுவதற்காக என்று நினைக்கமாட்டாரா?

பதில் சொல்லத் தெரியாமல் அவள் தத்தளித்தாள்.

''மிஸ்டர் ரகுவரன்.. நாளை வித்யா கண்டிப்பாய் விருந்துக்கு வருவாள்.''

குரல் கேட்டு இருவரும் திரும்பிப் பார்த்தார்கள்.

கவுதம், புன்னகைப் பூத்த முகத்துடன் அறை வாசலில் நின்றிருந்தான்.

9



**கா**லையில் வித்யாவை தனியாக விட்டுச் சென்றதற்கு பரிகாரமாய் அன்றிரவு அவளை அழைத்துக் கொண்டு ஊர் சுற்றவேண்டும் என்ற ஆசையில் இருந்தான், கவுதம்.



அவள், ரகுவரனுடன் ஓட்டல் அறையில் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டு அப்படியே நின்றுவிட்டான்...

ரகுவரன் வந்ததையோ.. தன் மனைவியுடன் பேசுவதையோ தவறாக நினைக்கும் காமாலைக் கண்ணன் அவன் இல்லைதான்...

ஆனால் முன்தினம் எதையோ நினைத்து அழுத வித்யாவின் நினைவுகளை, மறுபடியும் கிளற வந்து விட்டதை நினைத்து மனம் குமைந்தான்.

அதுவும், வித்யா அவனுடன் சுமுகமாகப் பேசுவதைப் பார்த்தபோது.. பொங்கி வரும் பாலில் இரண்டு துளி நீர் விழுந்ததுபோல, அவனுள் நிலவிய குதூகலம் அப்படியே அடங்கிப்போனது.

ஏதோ ஒரு உணர்வு, அவனுக்குள் தீயாய் எழுந்தது... பொறாமையோ..?

தன் மாஜி கணவனுக்கு காபி வரவழைத்துத் தந்து அவனுடன், மனைவி சகஜமாக பேசிக் கொண்டிருப்பதைக் கண்டபோது இயல்பாக பொறாமை வந்தது.

பொறாமை இல்லாவிட்டால் உண்மை காதலாகாதே?

அவனது கண்கள் அவளது மென்மையான விரலில் புதிதாய் குடியேறியிருந்த வெள்ளைக்கல் மோதிரத்தைக் கவனித்து விட்டன.

ரகுவரனின் அன்பளிப்போ.. அதை ஏற்றுக்கொண்டு இருக்கிறாள் என்றால்.. என்ன அர்த்தம்?

அவன் இதயத்தில் சூட்டுக்கோலால் கோடுபோட்டது போல ஒரு வலி..

வித்யாவின் மனதில் என்ன இருக்கிறது... இந்த ஒட்டாத வாழ்க்கையை அவள் வெறுக்கிறாளா?

அந்த நேரத்தில்தான் ரகுவரன், வித்யாவை மறுநாள் பொழுதை தன்னோடு கழிக்குமாறு அழைப்பு விடுத்துக் கொண்டிருந்தான்.

வித்யா தயங்குவதைக் கண்ட கவுதம் ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவனைப் போல ரகுவரனை நோக்கிச் சென்றான்.

''மிஸ்டர் ரகுவரன், நாளை உங்களுடன் வித்யா கண்டிப் பாய் வருவாள்'' என்று உறுதி அளித்தான். அவர்களின் முகங்களில் தெரிந்த வியப்பும் திகைப்பும் அவனது வார்த்தை களைக் கேட்டுதான் என்பதைப் புரிந்துகொண்டான்.

பின்னே.. தன் மனைவியை தாராளமாய் அனுப்பி வைக்கும் கணவனைப் பார்த்து ரகுவரன் திகைக்காமல் என்ன செய்வான்?

ரகுவரனுடன், தன் மனைவி இருப்பதை விகல்பமில் லாமல் ஏற்றுக்கொண்ட கவுதம், ரகுவரனுடன் அவள் சகஜ மாய் பேசுவதைக் கண்டு வியக்காமல் இருக்க முடியுமா..?

அவனை இமயமலையைப் பார்ப்பது போல பெருமை யாய் பார்த்தாள்...

கவுதம் உயர்ந்தவன்.. இவனது மனைவியாக இருப்ப தற்கு நான் கொடுத்து வைத்திருக்க வேண்டும்.

அப்படியென்றால் நான்.. அத்தனை கொடுத்து வைத்தவளா..?

அவளது கண்களில் தெரிந்த மினுமினுப்பைக் கவனித் தான் கவுதம்.. அதை அவன் தவறாக எடைபோட்டான்.

ரகுவரனுடன் அவளை அனுப்ப சம்மதித்ததால் ஏற்பட்ட மகிழ்ச்சியின் வெளிச்சம் அது என நினைத்தான்.

அவளை அனுப்பி வைத்துவிட்டு இங்கு தவிக்கும் இதயத்துடன் காத்திருக்கிறான்.



ரகுவரனும் வித்யாவும், வேறொரு ஓட்டலில் எதிர் எதிராக அமர்ந்திருந்தனர்.

ரகுவரன் வட இந்திய உணவு வகைகளுக்கு 'ஆர்டர்' செய்தான். உணவு வகைகளைத் தேர்ந்தெடுப்பதில் ரகுவரன் தன்னுடன் கலந்து பேசவில்லை என்பதை கவனித்தாள், வித்யா.

கணவன் கவுதமின் நினைவு வந்தது.

'வித்யா... உனக்கு என்ன வேண்டும்?' என்று கேட்டு விட்டு, தருவிப்பான், கவுதம்.

என்ன செய்வது? கவுதம் வளர்ந்த சூழ்நிலையே வேறு... மேலை நாடுகளில் பெண்களை சரிசமமாய் நினைப்பது போல இங்கில்லையே? இங்கு ஆண்களில் தொண்ணூறு சதம் பேர் மனைவி, தனக்கு அடங்கி இருக்க வேண்டும் என்று தானே நினைக்கிறார்கள்.

கவுதம் நினைவு வந்ததும் முந்திய நாள் அவன் பூனையாய் ஓட்டல் அறை வாசலில் வந்து நின்றதும் நினைவுக்கு வந்தது. எப்போது கதவைத் திறந்து வந்தான்? அத்தனை மென்மையாகவா நடந்து வந்திருக்கிறான்.. இல்லை... தரையில் விரிக்கப்பட்டிருந்த சிவப்பு கம்பளம் அவனது காலடியோசையை விழுங்கிவிட்டதா?

அவனது குரலைக் கேட்டதும் ரகுவரன் அதிர்ந்து போனதைக் கண்டாள்.

கவுதம் தன்னைப் பார்த்துவிட்டதைக் கண்டா? இல்லை தன் மனைவியை மாஜி கணவனுடன் அனுப்பத் தயாராய் இருப்பதைக் கண்டா? மொத்தத்தில் ரகுவரன் திகைத்துப் போனான்.

கவுதம் அருகில் வந்த கையை குலுக்கி தன்னை அறிமுகப் படுத்திக்கொண்டான்.

தான், அழகான இராஜகுமாரன் என்று கர்வத்துடன் எண்ணிக்கொண்டிருந்த ரகுவரன், கவுதமின் ஆண்மை கம்பீரத்தைக் கண்டு பிரமித்தான்.

தன்னைவிட உயரத்திலும், உடற்கட்டிலும் மேலாய் இருக்கும் அவனை கண்களால் அளந்த ரகுவரன், மனதுக்குள் வெட்கினான்.

'ஏன் வித்யா... நம் விருந்தாளிக்கு ஏதாவது வர வழைத்துக் கொடுத்தாயா?' என்று விசாரித்தான், கவுதம்.

'ஆயிற்று' என்றாள், வித்யா.

'இருக்கட்டும். வந்து ரொம்ப நேரம் ஆயிற்று போல மிஸ்டர் ரகுவரன்.. இனி குளிர்பானம் சொல்லட்டுமா?'

ரகுவரன் இசைவு தர, உள்ளிடப் பேசியில் பேசினான். சில நிமிடங்களில் உயர்தர விஸ்கியும் சோடாவும் வந்தன. கூடவே சிப்சும், முந்திரி வருவலும்.

லண்டனில் வளர்ந்த கவுதம் அந்த நாகரிக வாழ்வுக்கு ஏற்ப மது அருந்துவதுண்டு. ஆனால், அளவோடுதான்.

'ரகுவரனுக்கு எப்போதிருந்து இந்த பழக்கம்?' என்ற வியப்பு, வித்யாவுக்கு. எல்லாம் கால மாற்றம்தான்.

வித்யா அங்கிருந்து செல்ல விரும்பி, எழுந்தாள்.. நடந்தாள்.

சேலை முகப்பு, செருப்புக்குள் சிக்கி, தடுமாறி கீழே விழப்போனாள்.

அருகில் இருந்த கவுதம் அவளைத் தாங்கிக் கொள்வான் என்று எதிர்பார்த்தான், ரகுவரன். ஊகூம்.. அவன் கையை நீட்டவே இல்லை. சாயப்போன வித்யாவை சட்டென்று தாங்கி நிறுத்தினான், ரகுவரன்.



சுதாரித்துக் கொண்டவள் அவனது பிடியிலிருந்து விடுபட்டு ''நன்றி'' என்றாள்.

''பார்த்து வித்யா.. கவனமாய் அடியெடுத்து வை'' கவுதம் கூற..

ரகுவரன் குழப்பத்துடன் பார்த்தான்.

'ஏன், கவுதம் உடனே செயல்படவில்லை? வித்யா தடு மாறி விழப்போகிறாள் என்றதும் பதைப்புடன் அவளைப் பிடித்து நிறுத்த முயலவில்லை?' அவனது தலைக்குள் ராட்சத வண்டு குடைந்தது.

மறுபடியும் வந்து, அமர்ந்தாள், வித்யா. சோபாவின் மேல் கையை நீட்டியிருந்த கவுதம், அவள் மீது படாமல் சட்டென்று தன் கரத்தை எடுத்துவிட்டதை ரகுவரன் கவனித்தான்.

அவனுள் 'பளிச்'சென்று ஒரு வெளிச்சம் மின்னி, மறைந்தது.

ஆக, கணவன் - மனைவி இடையே நெருக்கம் இல்லை.. பெயருக்கு தம்பதியினர், அவ்வளவே!

வித்யா, இன்னும் கவுதமுக்கு முழுமையான மனைவியாகவில்லை போலும்.. அதுதான் இந்த விலகல்...

'ஒருவேளை.. வித்யா இன்னும் என்னையே நினைத்துக் கொண்டிருக்கிறாளோ..அதுதான் இந்த தாமரை இலைத் தண்ணீராய் வாழ்க்கையோ?'

அந்த எண்ணம் ரகுவரனுக்குள் மின்சாரத்தைப் பாய்ச் சியது. ஏதோ ஒரு நம்பிக்கை எழ, நிமிர்ந்து உட்கார்ந்தான்.

'வித்யாவை தனியாக சந்திக்கப்போகிறோம்.அப்போது அவளுடன் இதமாய்ப்பேசி அவளது மனதை அறிந்து கொள்ள வேண்டும்!' அவனுள் முன்பு தீர்மானம் எழுந்தது.

ஆனால், இப்போது அவளுடன் தனிமையில் இருந்த போது எதைப் பேசுவது, எப்படி ஆரம்பிப்பது என்ற தயக்கம் ஏற்பட்டது.

எதையாவது பேசப்போய் அவள் எழுந்து போய் விட்டால் என்ற பயம் என்ன செய்வது? சாப்பிட்ட பிறகு பேசிப் பார்க்கலாம் என எண்ணினான்.

அதன்படியே, உணவு முடிந்ததும் மெல்ல ஆரம்பித்தான், ரகுவரன். ''ஏன் வித்யா.. சீக்கிரம் நீ திரும்பவேண்டிய அவசியம் இல்லைதானே.. இன்றைக்கு ஒருநாள் மட்டும் என்னோடு பேசிக்கொண்டிரேன்.''

முதலில் தயங்கினாள், வித்யா. அடுத்த நிமிடமே 'ஏன் மறுக்க வேண்டும்? கவுதமே வழி அனுப்பி வைத்திருக் கிறார். எதற்கு அவசரப்பட வேண்டும்' என நினைத்தவள் ''சரி'' என்று சம்மதித்தாள்.

மனசுக்குள் விசிலடித்தான், ரகுவரன்.

''நீ விரும்பினால் என் வீட்டுக்குச் செல்வோம்... அங்குதான் நாம் நிம்மதியாகப் பேசமுடியும்.''

ஷோபா என்னதான் தனக்குப் போட்டியாக வந்தவளாக இருந்தாலும் வாழ்நாளை எண்ணிக்கொண்டிருக்கும் பரிதாப ஜீவன். அவளைப் பார்த்துவிட்டு, அப்படியே தாயை இழக்கப் போகும் அந்த பிஞ்சுகளையும் பார்க்க வித்யாவுக்கு ஆர்வம். அவள் ஒப்புக்கொண்டாள்.

ஆனால், ரகுவரனின் வீட்டுக்கு வித்யா சென்றபோது அங்கே யாரையும் காணாமல் திகைத்துப் போனாள்.



''அவர்களையெல்லாம் எங்கே?'' தனது தவிப்பை வெளிக்காட்டாமல் கேட்டாள்.

''அதானே.. ஆஸ்பத்திரிக்கு போகணும்னு சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஒருவேளை போயிருக்கலாம். பரவாயில்லை.. உள்ளே வாயேன் வித்யா. நீயிருந்த வீடுதானே?''

'அது கடந்த காலத்தில், இப்போது இது என் வீடு இல்லையே' - நினைத்தாள் வித்யா.

''சாவி உங்களிடம் இருக்கிறது.. எப்படி?'' சந்தேகத் துடன் கேட்க..

''இரண்டு சாவி உண்டு. ஒன்று என்னிடம் இருக்கும். எந்த நேரத்தில் ஷோபா ஆஸ்பத்திரிக்குச் செல்வாள் என்று தெரியாதில்லையா? அதான்! சரி, நீ பார்த்துவா வித்யா. சாமான்கள் இறைந்து கிடக்கின்றன. வீடு ஒழுங்குபடுத்தி ரொம்ப நாளாச்சு.''

உண்மையில், வீட்டில் பொருள்கள் தாறுமாறாய்தான் கிடந்தன. எங்கேயும் தூசி.. ஒட்டடை மயம்..

பாவம்! ஷோபா நோயாளி.. குழந்தைகள் வேறு!

கீழே கிடந்த விளையாட்டு சாமான்களையெல்லாம் அலமாரியில் எடுத்து வைத்தாள், வித்யா. சிதறிக்கிடந்த புத்தகங்களை ஒழுங்குபடுத்தினாள்.

அவளையே பார்த்துக்கொண்டிருந்த ரகுவரனுக்கு நெஞ்சு நிரம்பி வழிந்தது..'வித்யா, பழைய வித்யாதான். அவளிடம் எந்த மாற்றமுமில்லை!'

'வித்யா.. எனக்குப் பழைய நினைவுகள் இப்போ மனதில் வருகிறது. நீ இந்த வீட்டை எத்தனை சுத்தமா வச்சிருப்பே..?

தரை, கண்ணாடி மாதிரி மின்னும்.. சுவர் எல்லாம் 'பளிச்' என்று தெரியும்.. அடுப்பும், பாத்திரங்களும் புதுசு மாதிரி பளபளன்னு இருக்கும். இப்போ எல்லாமே போச்சு. என் வாழ்க்கையில் எனக்கு கிடைத்த புதையல் நீ.. கைநழுவ விட்டது என் தப்புன்னு இப்ப உணருகிறேன், வித்யா..'

''ப்ச்சு.. இப்ப எதுக்கு இந்தப் பேச்செல்லாம்.. எல்லாம் முடிந்து போன கதை..''

''இல்லே வித்யா.. ஷோபாவுக்கு இப்படி ஆகும் என்று தெரிந்திருந்தால் நிச்சயமாய் உன்னை தவறவிட்டு இருக்க மாட்டேன்.. என்மனைவியாகவே இங்கே இருந்திருப்பாய்''

வண்ண பென்சில்களை எடுத்து பெட்டியில் அடுக்கிக் கொண்டிருந்த வித்யா தன் செயலை நிறுத்திவிட்டு அவனைப் பார்த்தாள்.

'ஸ்கூட்டரில் இருக்குமே... ஸ்டெப்னி! அது மாதிரி ரகுவரன் என்னை நினைக்கிறானோ?'

''வித்யா..'' அழைத்தான்.

திரும்பினாள்.

''ஒன்று கேட்பேன். ஒளிக்காமல் பதில் சொல்வாயா?''

கண்களில் 'என்ன?' என்ற கேள்விக்குறி தெரிய அவனைப் பார்த்தாள்.

''உனக்கும் கவுதமுக்கும் இடையே உறவு நிலை எப்படி?''

எதுவும் சொல்லாமல் வெறித்துக் கொண்டு நின்றிருந்தாள், வித்யா.

''என்ன அப்படிப் பார்க்கிறாய்? நேற்றே கவனித்தேன். உங்களுக்குள் ஏதோ விரிசல்.. இடைவெளி இருக்கிறது. நீ இன்னும் கவுதமோடு நெருங்கி வாழ ஆரம்பிக்கவில்லை என்று தெரிந்துகொண்டேன். என் ஊகம் சரிதானே?''

''நேரமாகிவிட்டது.. நான் புறப்படுகிறேன். கவுதம் எனக்காகக் காத்திருப்பார்'' புறப்படத் தயாரானாள், அவள்.



சட்டென்று அவளது கரத்தைப் பற்றினான். ''எளிதாய் தப்பிவிட நினைக்கிறாய், வித்யா. சரி, விடு. என் இந்தக் கேள்விக்கு மட்டும் பதில் சொல்லிவிட்டுப் போ... கவுதமுடன் உன்னை நெருங்கவிடாமல் செய்வது எது? சொல் வித்யா! என் நினைவா? என்னுடன் வாழ்ந்தாயே... அந்த பத்து நாள் நிறைவா?'' அவன் கேட்கக் கேட்க...

முகத்தை மூடிக்கொண்டு விம்மினாள், வித்யா.

'அய்யோ.. என் மனநிலையை ஏன் என்னால் சரியாக அறிய இயலவில்லை? எதை நினைத்துக் கலங்குகிறேன்? தெரியவில்லையே..'

ரகுவரனின் உதட்டோரம் புன்னகை மலர்ந்தது. 'வித்யாவின் மனம், இன்னும் என் மனைவி என்ற உணர்வில் அப்படியேதான் இருக்கிறது. அதுதான் இப்படிக் கலங்கித் தவிக்கிறாள்.''

அந்த மகிழ்ச்சியில் வாய் திறந்தான். ''வித்யா.. இங்கே பாரேன்.. உன்னிடம் நான் மனம்விட்டுப் பேசணும்.''

''பிளீஸ்.. வேண்டாம்.. நான் புறப்படுகிறேன். இனி பேச எதுவுமே இல்லை'' சேலைத் தலைப்பால் முகத்தைத் துடைத்துக் கொண்டாள்.

''ஷோபாவைக் கேட்டதாகச் சொல்லுங்கள். பிள்ளைகளைப் பார்க்கமுடியாமல் போனதுதான் எனக்கு வருத்தம்.''

''எப்போது ஊருக்குப் புறப்படுகிறாய்?''

''இன்னும் இரண்டு நாளில்.''

அவ்வளவுதான்... போகும் வழியில் அவளுடன் எதையும் பேசவில்லை!

'ஏதேதோ பேசவேண்டும் என்று நினைத்து, ஆசைப்பட்டு வித்யாவை அழைத்து வந்தது வெறும் வீண்.. கடைசியில் மனம்திறந்து ஏதும் சொல்ல முடியாமலே போய்விட்டதே..

ச்சே! இந்தப் பெண்களின் மனதை சட்டென்று எடை போட முடியவில்லை!'

வித்யாவின் கண்ணீர், என்னை நினைத்தா? அப்படியானால் 'கவுதம் காத்திருப்பார்' என்று ஏன் உடனே புறப்படுகிறாள்?

'அவள் மனதில் என்னதான் இருக்கிறது என்று தெரியவில்லையே? கடலைவிட அதிக ஆழமாக அல்லவா இருக்கிறது இவளின் மனம்!' பெருமூச்சுவிட்டான், ரகுவரன்.

காரணம், அவன் நினைத்தது ஒன்றும் நடக்கவே இல்லை. எப்படியாவது பேசி, வித்யாவின் மனதை இளக வைத்து, தன்னுடன் வாழும்படி செய்ய வேண்டும் என்று எழுந்த அவனது நப்பாசை, அல்ப ஆயுசாய் செத்துவிட்டது.

இரண்டு நாளில் பெங்களூரை விட்டு புறப்படப் போகிறாள். அவளை எப்படித் தடுப்பது?

மூளையைக் கசக்கி, யோசித்தான்.

வித்யா தங்கி இருந்த ஓட்டல் வரை வந்து அவளை விட்டுவிட்டுத் திரும்பிச் சென்றபோது அவன் மனம் நிம்மதியை இழந்து தவித்தது.

வித்யாவை இழப்பதா?

ஏற்கனவே மதியிழந்து, கைக்கு கிட்டிய கனியை அதன் அருமை உணராமல் கைநழுவ விட்டது போதும்.. இன்னொரு சந்தர்ப்பம் இது!

'விடாதே.. எப்படியாவது அவளை வசப்படுத்து' உள்ளம், அவனை உசுப்பி விட்டது.

'ஆமா... வித்யா எனக்குத்தான்... அவள் எனக்கு மட்டுமேதான். நூறு கவுதம் வந்தாலும் அவளை என்னிடம் இருந்து தட்டிக் கொண்டு செல்ல முடியாது' புதுத் தெம்புடன் நடந்தான், ரகுவரன்.



## 10



கவுதம் வெளியே எங்கும் செல்லாமல் ஓட்டலின் அறையிலேயே முடங்கி விட்டான். வித்யா புறப்பட்டுச் சென்ற பின்பு அவளுடைய நினைப்பிலேயே அமர்ந்திருந்தான்.

வேண்டும் என்றே ரகுவரனைச் சந்திக்க தன் மனைவியை அனுப்பி வைத்தான்.

தடுமாறிக் கொண்டிருக்கும் வித்யா, தன் மனதை முழுமையாக உணர வேண்டும் என்றால் ரகுவரனுடன் அவள் பழக வேண்டும்.

அதனால்தான் மனைவியை மாஜி கணவனுடன் அனுப்பினான். எந்தக் கணவனும் உடன்படாத செயல், இது சொல்லப் போனால் விந்தையான வேடிக்கைதான்!

திருமணமாகி இரு ஆண்டு கழிந்தாயிற்று... இதோ நாளை மறுநாள் திருமண நாள்! அது அவளுக்கு நினைவில் இருக்கிறதோ இல்லையோ?

**வி**த்யாவை கவுதம் முதன் முதலாய்ச் சந்தித்தது அவளுடைய பெரியப்பாவின் வீட்டில்தான்.

ரகுவரனின் இரட்டை வாழ்க்கையை அறிந்த கணமே நிலை குலைந்து போன வித்யாவை, பெற்றவர்கள் அழைத்துப் போனார்கள். அவளை கண்ணுக்குள் வைத்துக் காத்தார்கள். மரவட்டையாய் சுருண்டு கிடந்த அவளைக் கொஞ்சம் கொஞ்சமாய் தேற்றி பழைய நிலைக்குக் கொண்டு வருவதற்குள்... அம்மாடி! இரண்டு ஆண்டா!

பட்டாம்பூச்சியாய் வளைய வந்த பெண், சிறகொடிந்த பிள்ளையாய் மூலையில் முடங்கிக் கிடப்பதைக் காணச் சகியாமல் அவளை லண்டனுக்கு அனுப்பி வைத்தார்கள்.

அங்குள்ள பெரியப்பா யோசனைபடிதான் வித்யா, அனுப்பப்பட்டாள். சூழ்நிலை மாறினால் அவளுடைய மனமும் மாறலாமே என்ற எண்ணம்!

ஊகூம்... அவள் மனம் விடாப்பிடியாக இருந்தது. முதல் திருமணம் கொடுத்த மரண அடியில் சுருண்ட இதயம், போகப் போக பழைய நிலைக்கு வந்தாலும், உணர்வுகள் என்னவோ மரத்துப் போயிருந்தன... அதுவும் ஆண்கள் என்றாலே மனம் அலறியது... முகம் சுணங்கியது... இதயம் கசந்தது...

அப்படித்தான் கவுதமைப் பார்த்தபோதும் உள்ளம் சுருங்கி, ஒதுங்கினாள். அவனிடம் பேசவும் மறுத்தாள்.

விமான நிலையத்தில் பெரியப்பாவின் மகனை எதிர்பார்த்த வித்யா, தன்னை அழைத்துப் போகவும் வந்திருப்பது கண்டு, திகைத்தாள்...

'யார் இவன்? இவனை நம்பலாமா?' என்ற தயக்கம்.

பிறகுதான் தெரிந்தது... அந்த வீட்டின் செல்லப்பிள்ளை கவுதம் என்று அவன் பெரும்பாலும் அந்த வீட்டில்தான் பொழுதைக் கழிப்பது!

ஆண்களின் சகவாசத்தையே வெறுத்த வித்யா அவனது பார்வையிலேயே படாமல் ஒதுங்கினாலும் கவுதமின் கண்கள் அவளைத் தேடி அலைந்தன.

வித்யாவின் சோகக் கதையை அறிந்த கவுதம், அவள் மீது பரிதாபப்பட்டான். கலங்கி இருக்கும் அவளது கண்களைப் பார்க்கும்போது அவனுக்கு இதயத்தில் 'சுருக்'கென்றது. அந்தப் பரிதாப உணர்வு, பரிவாகி... அன்பாய் மாறி, காதலாய்ப் பரிணமித்தது.



'பூப்போன்ற இவளுடைய மனதை ஏன் நோக வைத்தாய்... எதற்காக இவளது வாழ்க்கையை சோதனை செய்தாய்... அந்த ராட்சதன் செய்த தப்புக்கு இவள் கண்களில் கண்ணீரா? இந்தப் பூவை, பூவையைத் தூக்கி எறிந்தானே... அந்த அரக்கன்... அவனை...'

அவனுக்கே வியப்பு! திகைப்பு!

'இது என்ன... இவள் வேதனையைச் சகிக்க முடியாமல் ஏதேதோ நினைத்துத் துடிக்கிறேன்... இவள் மீது வந்தது பரிதாபம் மட்டும் இல்லையா? மெல்ல மெல்ல அது அன்பாக மாறி விட்டதா என்ன? பின் ஏன் இவளது துன்பத்தைக் கண்டு என் மனம் தவிக்க வேண்டும்?'

வித்யாவைப் பார்க்கவென்று அடிக்கடி அவளது பெரியப்பா வீட்டுக்குச் சென்றான். அவளுடைய தோளைத் தட்டி, இதமாய்ச் சொல்லி, அவளது கண்ணீரைத் துடைத்து... அவளின் வேதனையை குறைக்கும் உரிமை தனக்கு இருந்தால் எப்படி இருக்கும்?

யோசித்தவன், இனியும் தன்னால் பொறுக்க முடியாது என்று நினைத்தான். பெரியப்பாவிடம் தன் விருப்பத்தைச் சொன்னான். கவுதமின் கடந்த காலத்தையும் நன்கு அறிந்திருந்தார், அந்தப் பெரியவர்...

அவனுடைய வாழ்க்கையிலும் பெரிய இடி தாக்கி இருந்தது. அவன் விரும்பி மணந்த வெள்ளைக்கார மனைவி அவனை, காய்ந்த இலையாக நினைத்துச் சென்று விட்டாள்.

அந்தக் காயம் கொஞ்சம் கொஞ்சமாய் ஆறி... அந்த இடம் வடுவாக ஆனபோதுதான் வித்யாவை அவன் பார்த்தது.

தனக்கு ஏற்பட்ட மனக்காயம்தான் வித்யாவுக்கும் ஏற்பட்டிருக்கிறது... தான்பட்ட வேதனைதான் இப்போது அவளும் பட்டுக் கொண்டிருக்கிறாள் என்று உணர்ந்தான்.

வேதனையில் தவிக்கும் இரு உள்ளங்கள் வாழ்க்கையில் இணைந்தால் பரஸ்பர ஆதரவில், வேதனையை மறந்து விடலாம் என்று நினைத்தான்...

அவனது விருப்பத்தை அறிந்ததும் அளவிடமுடியாத ஆனந்தம், பெரியப்பாவுக்கு. இருண்டு போன வித்யாவின் வாழ்க்கை மீண்டும் வெளிச்சம் காணப்போகிறது என்ற மகிழ்ச்சி. துவண்டுபோன பூங்கொடிக்கு நிழல் தரும் நல்ல மரம் வாய்த்துவிட்ட திருப்தி, அவருக்கு.

ஆனால், வித்யா ஒப்புக்கொள்ள மறுத்தாள்... 'இனி திருமணம் வேண்டவே வேண்டாம்' என்று கதறினாள்... திருமணம் என்ற வார்த்தையே அவளுக்கு எட்டிக் காயாய் கசந்தது.

'இந்த உலகில் எல்லா ஆடவருமே சுயநலவாதிகள்... சந்தர்ப்பவாதிகள்... பச்சோந்திகள்... மரம் விட்டு மரம் தாவும் குரங்குகள்'... இன்னும் என்னென்னவோ, நினைத்தாள்.

ஆனால், பெரியவர்கள் கேட்க வேண்டுமே...

அவளுக்கு என்று ஒரு துணை அவசியம் வேண்டும்... 'முள்வேலி என்றாலும் அது காவலுக்கு அவசியம்' என்றெல்லாம் கூறி அவளை வற்புறுத்தி சம்மதிக்க வைத்தனர்.

மறு திருமணம், உறுதியாகி விட்டது. திருமணச் சேதியைச் சொன்னதும் கெட்ட கனவைக் கண்டதுபோல அலறினாள், வித்யா.



ஒருமுறை ஏறினால்தான் தாலிக்கு மதிப்பு. என் கழுத்தில் இன்னொருமுறை ஏறுகிறதே? புதிய ஆண்மகனின் கரம் படப் போகிறதே... நான் என்ன பாவம் செய்தேன்? விம்மலுடன் வந்த அழுகையை கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

'ஆடம்பரம்... அநாவசியம், எதற்கு?' என்று கவுதம் உறுதியாய்ச் சொல்லிவிட்டான்.

அவளது மனநிலையை உணர்ந்து இரண்டு நாள் கழித்து திருமணம் நடந்தது, மிக எளிமையாக!

இரண்டாவது தாலி அவளது கழுத்தில் ஏறியது.

கவுதமின் கரம், முதன் முதலாய் அவளது கையைப் பற்றியபோது மனம் உடலும் கூசிப் போனது...

ஒரு பெண்ணின் மேனியில் ஒருவனின் ஸ்பரிசம் மட்டுமே பட வேண்டும் என்பது பாரதப் பண்பாடு...

ஆனால் நான்...? பெண் இனத்துக்கு விதி விலக்கு... இது, இரண்டாவது கரம்... இரண்டாவது ஸ்பரிசம்! அவளுக்கு மேனி சிலிர்க்கவில்லை... மின்சார அலை, இழையோட வில்லை... மாறாய், ஏதோ தப்பு செய்தது போல உடம்பெல்லாம் ஊசி முனைகள் ஆழமாய்க் குத்தின... அக்கினி குண்டத்தில் விழுந்தது போல நெஞ்சம் முழுக்கத் தகிப்பு!

இந்த புதுப் பந்தத்தை உதறிவிட்டு எங்கேயாவது ஓடிவிட வேண்டும் போல ஆவேசம் வந்தது... எங்கே போவது... எங்கே போனாலும் என் தலைவிதி மாறிவிடுமா என்ன...?

பெரியவர்களின் விருப்பப்படி மறுதிருமணம் முடிந்தாகி விட்டது... அவர்களுக்குப் பொறுப்பு தீர்ந்த நிம்மதி. என் மனம் படும்பாடு எங்கே புரியப்போகிறது?

ஏற்கனவே ஒருவனை நம்பி மோசம்போன பெண்ணின் உள்ளம், கவுதமை நம்ப யோசித்தது. அவனை நல்லவன் என்று நினைக்க மறுத்தது. ரகுவரனும் இப்படித்தானே தோற்றம் தந்தான்... நம்பினேனே? இவனும் நல்லவன் என்று எப்படி நம்புவது... உள்ளுக்குள் புழுங்கினாள், வித்யா.

தனி அறையில் மனம் குமைந்து நின்ற மனைவியைப் பார்த்துக் கேட்டான், கவுதம்.

''உனக்கு இதில் விருப்பம் இல்லையா, வித்யா?''

''ஒரு திருமணம் கொடுத்த அடியிலிருந்து இன்னும் மீள முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறேன். என்னால் எப்படி மகிழ்வோடு இன்னொரு திருமணத்துக்கு இசைய முடியும்?''

ஒரு நிமிடம் அவளையே பார்த்தான்.

''ஏன் வித்யா... ஒரு ஆண் தவறாக நடந்தால் எல்லா ஆண்களும் அப்படித்தான் என்று நினைக்கிறாயா? நான் பெண்மையைப் போற்றுபவன், பெண் மனதை மதிப்பவன். என்னை நம்பலாம், வித்யா...'' என்று அமைதிக் குரலில் சொன்னான்.

''அப்படியென்றால் முதல் மனைவி உங்களை விட்டு ஏன் ஓடினாள்?''

வார்த்தைகள், சவுக்கடியாகலாம் என்பது இதுதானோ...? வலியில் அவன் முகம் சுருங்கியது.

''உனக்கு என் கடந்த காலத்தைப் பற்றி எதுவரை தெரியும்?''

''முழுசாக எதுவும் தெரியாது... மேநாட்டு மனைவி... காதல் திருமணம்... ஓராண்டுகூட சேர்ந்து வாழவில்லை, உங்களை விட்டுப் பிரிந்து விட்டாள்... இவ்வளவுதான்.''



''அவ்வளவுதானே தெரியும்... அவள் ஏற்கனவே ஒரு ஆங்கிலேயனைக் காதலித்தாள் என்று தெரியுமா?''

''ஊகூம்...''

''அவன் வேற்று நாட்டுக்குப் போனதால் என் பக்கம் திரும்பினாள்.... அவளது நட்பை காதல் என்று தவறாய் நினைத்து அவளை மணம் செய்து கொண்டேன். அது உனக்குத் தெரியுமா...?''

'இல்லை' என்பதுபோல தலையசைத்தாள், வித்யா.

''அவன் திரும்பி வந்து அவளைச் சந்தித்தான். அது வரைக்கும் அவளுக்குக் கணவனாகத் தெரிந்த நான் அந்நியனாகிப் போனேன் அதாவது தெரியுமா... தெரியாது இல்லையா? கடைசியாய் இதையும் தெரிந்துகொள், வித்யா. காதலன்தான் வேண்டும் என்று சொல்லி என்னிடம் இருந்து விவாகரத்து வாங்கிச் சென்று விட்டாள், அவள்.

உன் கதையும் என் கதையும் ஒன்றுதான்... இரண்டு பேர் மனதிலும் ஆறாக் காயம் பட்ட மாதிரி நம் முதல் திருமணம் அமைந்து விட்டது. அந்தக் காயத்துக்குப் பூசும் அருமருந்து மாதிரி இந்தத் திருமணத்தை வரவேற்றேன்... நீயோ தெனாலி ராமனின் பூனை, பாலைக் கண்டு பயந்தது மாதிரி திருமணம் என்றாலே அஞ்சி ஒதுங்கினாய்.''

''சாரி... நான்...'' அவள் பேச முயன்றபோது அவளது தோளை அணைத்துச் சொன்னான்.

''வேண்டாம் வித்யா... நடந்து முடிந்த விஷயத்தை இருவரும் மறந்து விடலாம்... கடந்த காலம் இனிமையாக இருந்தால் அதை அசைப் போட்டு மகிழலாம்... நம்முடைய இறந்த காலம் ரொம்பக் கசப்பானது... அந்த நினைவுகளை

நம் மனதிலிருந்து சுத்தமாகத் துடைத்து எறிந்து விடுவது தான் நல்லது. புதிய வாழ்க்கையை இருவரும் ஆரம் பிப்போம்.''

அவனது கரம் தன் மீது பட்டதை அவளால் தாங்க முடியவில்லை... ஏதோ, உடலில் பூரான் ஊறுவது போல அருவருத்து உதறினாள்.

அவன் தனது கரத்தை விலக்கிக் கொண்டு அவளை உற்றுப் பார்த்தான்.

''வேண்டாம்... என்னைத் தொடாதீர்கள்... ப்ளீஸ்... எனக்குப் பிடிக்கவில்லை'' வார்த்தைகளைத் திணறியவாறு, சொன்னாள்.

அவன் ஏதும் பேசவில்லை... சில விநாடிகள் நகர்ந்தது.

''ஏன் வித்யா... ஏன் பிடிக்கவில்லை...?''

''....''

''உன் மனதில் இன்னும் உன் முன்னாள் கணவன் இருக்கிறான்... அதனால்தான் என்னையும், என் அணைப் பையும் உன்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை... அப்படித்தானே? அவனது நினைவை உன் மனசிலிருந்து இன்னும் அழிக்க முடியாமல் தவிக்கிறாய்..?''

அவள் கண்களிலிருந்து நீர் பொங்கி வழிந்தது. 'ஆம்' என்று தலை மட்டும் அசைந்தது.

அவளது கண்ணீரைத் துடைக்க, அவனது கைகள் துடித்தன... ஆனால், வலுக்கட்டாயமாக நிறுத்திக் கொண்டான்.

அவள் மனதில் ஏதோ சொல்ல முடியாத வேதனை... தவிப்பு... வித்யாவின் கண்கள் பெரிதாய் விரிந்து 'ப்ளீஸ் என்னை புரிந்து கொள்ளுங்களேன்' என்று கெஞ்சின.



ஆம்! அவன் ஆண் பிள்ளை... வெகு எளிதாய் மனதில் விழுந்த காயத்தை ஆற்றிக் கொண்டான்.

'பெண் மனம், பூமனம்... அது, மென்மையானது, அனிச்சம் பூப்போல! முகர்ந்தாலே வாடிவிடுமே அனிச்சம்... மென்மையான பெண் மனமும் எளிதில் நைந்துவிடும்.

அவ்வளவு சீக்கிரம் அவளது மனம் மாறும் என்று எதிர் பார்ப்பதும் தவறுதான்.

காத்திருக்க வேண்டும்... அவள் மாறும்வரை வெகு பொறுமையுடன் காத்திருக்க வேண்டும்.

நாட்களோ... மாதங்களோ... இல்லை ஆண்டுகளோ... அவளுக்காகத் தவமிருந்த மாதிரி காத்திருப்பேன்.

அதிலும் ஒரு சுகம்தான்...

ஒரு பெண்ணின் மனதை வெல்வதில்தான் ஆணின் பெருமை இருக்கிறது...

நான் முதல் திருமணத்தில் இழந்த பெருமையை வித்யா வின் காதலைப் பெறுவதில்தான் மீட்க வேண்டும்...

நிச்சயம் அது நடக்கும்?

அவனது நினைவோட்டத்தை அறியாமல் அவனது மவுனத்தைத் தவறாக நினைத்தாள், வித்யா.

இந்தத் திருமணமும் தோல்வி அடைந்ததை நினைத்து மறுகுகிறான்... 'எதற்காக ஒப்புக் கொண்டோம்' என்று யோசிக்கிறான் போலும், என்று நினைத்தாள்.

''கவுதம்... நீங்கள் பெண் மனதை மதிப்பவன் என்றீர்கள்... பெண்ணின் விருப்பத்தையும் மதிப்பீர்கள் இல்லையா? என் மனதின்...''

தன் கை அசைவினால் வித்யாவின் பேச்சை நிறுத்தினான், கவுதம்.

''கவலையே வேண்டாம், வித்யா. நீயாக என்னை கணவனாக ஏற்றுக் கொள்ளும் வரை இந்தக் கரங்கள் உன்னைத் தீண்டாது. உன் மனம் மாறும்வரைக் காத்திருப்பேன். ஒருவேளை உன் மனம் என்னைக் கணவனாக ஏற்காமலே போனாலும் உனக்கு ஒரு நல்ல நண்பனாக இருக்க சம்மதிப்பாய் தானே?''

தன் முன்னே, உருவத்தால் உயர்ந்த மனிதனாக நின்ற கவுதம் தன் பண்பினாலும் உயர்ந்து போனதை உணர்ந்தாள். நம்ப முடியாமல் அவனை கண்கள் விரியப் பார்த்தாள்... ரகுவரனைப் போன்ற ஆடவனைச் சந்தித்த அவள் இப்படி ஒரு நல்லவன் இருக்க முடியுமா என்று வியந்து போனாள்.

இவனை முதலிலேயே சந்தித்திருக்கக் கூடாதா என்ற ஏக்கம் உண்டானது...

''சரி... போய்த் தூங்கு வித்யா... உனக்கும் களைப்பாக இருக்கும்...''

தலையணையும் போர்வையும் எடுத்துக் கொண்டு சோபாவை நோக்கிச் சென்றவனை ''ஒரு நிமிடம்'' என்று நிறுத்தினாள், வித்யா.

புருவங்கள் உயரத் திரும்பிப் பார்த்தான், அவன்.

''ஏன்... ஏன் கவுதம்... எத்தனையோ பெண்கள் உங்களை மணக்கத் தயாராக இருக்கும்போது என்னை மணந்து கொண்டு உங்கள் வாழ்க்கையைப் பாழாக்கிக் கொண்டீர்கள்?'' வித்யா கேட்கவும்....



''எத்தனையோ பெண்கள் இருக்கலாம்.... அவர்கள் அனைவரும் வித்யா ஆக முடியாது. நான் விரும்பியது உன்னைத்தான்...'' என்றான், அவன்... நிதானமாக.

''ஆனால்... என்னால் முடியவில்லையே கவுதம்... நேற்று ஒரு மனம்... இன்றைக்கு வேறு மனம் என்று நினைக்க முடியவில்லையே? என்ன செய்வேன்?'' கண்களில் நீர் மல்கச் சொன்னாள், அவள்.

''நீ இப்போது என் மனைவி... அது போதும், வித்யா... உன் மனம் ஒரு நாள் மாறும்... என் மீது காதல் கனியும் என்ற நம்பிக்கையுடன் காத்திருப்பேன்...'' சிரித்தான். அது உள்ளத்திலிருந்து வந்த மகிழ்ச்சி சிரிப்பாய்த் தெரியவில்லை... விரக்தியால்... நிராசையால் வந்த சிரிப்பாக இருக்கலாம்.

**அ**வன் காத்திருந்தான், பொறுமையாக! இரண்டு ஆண்டு ஓடி மறைந்த பிறகும் நம்பிக்கையுடன் காத்திருந்தான்.

அவன் இந்தியாவுக்குப் போய் வரலாம் என்றதும் அவள் வாய் சட்டென்று 'பெங்களூர் போகலாமா?' என்று கேட்க... ஏன்... எதற்கு என்று கேளாமல் சம்மதித்தான்.

பெங்களூரில் ரகுவரனை அவள் சந்திப்பாள் என்பது அவன் எதிர்பார்க்காதது. ரகுவரனது சந்திப்பை விரும்புவாள் என்பதும் அவன் நினைக்காததுதான். வேண்டுமென்றே ரகுவரனுடன் தன் மனைவியை அனுப்பி வைத்தான், கவுதம். அவள் தன் உள்ளத்தைத் தெளிவாக உணர நல்ல சந்தர்ப்பம், இது என நினைத்தான்.

ஒரு வகையில் இதுவும் அக்கினிப் பரிட்சைதான்... இராமன் தன் சீதைக்கு வைத்தது போல! ஆனால், கொஞ்சம் வித்தியாசம்.

இராவணனிடமிருந்து மீட்டு வந்து அக்கினிப் பரிட்சை செய்தான், இராமன்... 'என் சீதை தூய்மையானவள்' என்று உலகம் உணரட்டும் என்று...

இங்கு ரகுவரனுடன் அனுப்பி வைத்திருக்கிறான்... 'என் வித்யா தன்னை உணரட்டும்' என்று...

அவனது கண்கள், நேரத்தைப் பார்த்தன...

மணி ஆறரை!

ரகுவரனுடன் இருப்பதால் வித்யாவுக்கு நேரம் போவதே தெரியாமல் போய்விட்டதோ?

கண்களை மூடிக் கொண்டான். வித்யாவின் வரவுக்காக அவன் மனம் ஏங்கிக் கொண்டிருந்தது.

'வந்துவிடு வித்யா... வந்துவிடு வித்யா' இதயம் பிரார்த்தித்தது.

'நேற்று ரகுவரன் மட்டும் வராதிருந்தால்... இன்றைய நாள் இன்பமாகக் கழிந்திருக்குமே?' சோர்வாய் பெருமூச்சு விட்டான், கவுதம். அது, அவனை நெருப்பாய்ச் சுட்டது.

## 11



'கிளிக்!'

அறைக் கதவு திறந்த ஒலி...

விழித்தான், கவுதம். எதிரே வித்யா... அவனைப் பார்த்துப் புன்னகைத்தாள்... அது இளங்கீற்று புன்னகை?

''சாரி... தாமதமாகிவிட்டது... எனக்காகவா காத்துக் கொண்டிருக்கிறீர்கள்?''

'இரண்டு ஆண்டாக உனக்காகக் காத்திருக்கிறேனே... சில மணித்துளிகள் காத்திருப்பதில் என்ன பெரிய



சிரமம்!' சொல்ல நினைத்து மனதுள் அடக்கிக் கொண்டான்.

வேண்டாம்! அவள் எந்த மனநிலையில் வந்திருக்கிறாளோ...? கண்கள் ஏன் சிவந்திருக்கின்றன... இமைகள் லேசாய் வீங்கி... எதற்கோ அழுதிருக்கிறாள்!

அவனுக்குள், முதல் முறையாக ரகுவரன் மீது சொல்ல முடியாத எரிச்சலும் கோபமும் வந்தன.

என் வித்யாவை அழ வைக்க இவன் யார்?

அடுத்த கணமே யோசித்தான்!

ஒருவேளை... அவனை விட்டுப் பிரிய மனமில்லாமல் அழுதிருக்கிறாளோ...?

நெஞ்சு கனத்துப் போனது...

வித்யாவை மெல்ல மெல்ல இழந்து கொண்டிருக்கிறேனோ...? இனி அவளது அன்பைப் பெறவே வழி இல்லையோ? கேள்விகள் அவனுள் குடைந்தன.

அவளது காதலுக்கு ரகுவரன் தகுதியானவன் என்று சொல்ல முடியாதே!

அப்படியே ரகுவரனுடன் இருக்க விரும்புவதாகச் சொல்லி விட்டால்... அவளை வலுக்கட்டாயமாய் இழுத்துக் கொண்டு செல்வதும் நாகரீகம் இல்லையே?

வித்யா வெளிப்படையாய் சொல்லும் வரை இப்படித்தான் குழம்பித் தவிக்க நேரிடும்... எத்தகைய பதிலுக்கும் மனம் தயாராக இருக்க வேண்டும்...

என் உள்ளமும் அடிமேல் அடிவாங்கி உரமேறி போயிருக்கிறது... எத்தகைய இடியையும் தாங்கிக் கொள்ளும்.

தனக்கு மனைவி ராசியே இல்லை போலிருக்கிறது. வழிய வழிய என் காதலைத் தரவும் காத்திருக்கிறேன்... அதை அவள் புரிந்து கொள்ளவில்லையே...?

உதாசீனப்படுத்தியவனை நினைத்து ஓடும் இவளை என்ன சொல்வது...?

எண்ணங்களின் சுழற்சி முடிந்து, அவன் கவனம் திரும்பிய போது மணி பத்துக்கும் மேல் ஆகிவிட்டது. வித்யாவைத் தேடி கண்கள் பாய்ந்தன.

அங்கே... படுக்கையில் தன்னை மறந்து உறங்கிக் கொண்டிருந்தாள், வித்யா.

அவளுக்குப் போர்த்தி விட்டு, அவனும் படுத்துக் கொண்டான். தூக்கம் வந்தால்தானே! ஊகூம்...

அதுகூட அவனிடம் நெருங்கி வரத் தயங்கியது... அவன் தொட்டு, தாலி கட்டிய வித்யாவைப் போல!

திடீரென அவளுக்கு விழிப்பு வந்தது. கணவனைப் பார்த்தாள். சோபாவில் கால் நீட்டி அவன் படுத்து விட்டதைக் கண்டு, வாயில் எழுந்த வார்த்தைகளை விழுங்கிக் கொண்டாள்.

அவனுடைய உயரத்துக்கு சோபாவின் நீளம் போதாது தான்.

'பாவம்... இரவெல்லாம் எப்படித் தூங்கப் போகிறானோ?' என்று பெண்மனம் இரங்கியது. அடுத்த கணமே, 'இது, அவனாக விரும்பி ஏற்றுக் கொண்ட வாழ்க்கை தானே... அனுபவிக்கட்டும்' என்று அவள் மனம் முரண்டு பிடித்தது.



## 12



'பெங்களூரை முழுமையாகச் சுற்றிப் பார்க்கவில்லையே என்ற மனக் குறையுடன் லண்டன் திரும்பக் கூடாது' என்று நினைத்தான், கவுதம்.

நாளை, எப்படி கழியப் போகிறதோ? இன்று ஆனந்தமாய்க் கழிக்க வேண்டும். கவுதமின் கொள்கை அது. அதனால் வித்யாவை அழைத்துக் கொண்டு வெளியில் புறப்பட்டு விட்டான்.

தன்னை மறந்து... தன்னை அலைக்கழிக்கும் எண்ணங்களை மறந்து, ஒவ்வொன்றையும் ரசித்தாள், வித்யா. அவளுடைய மகிழ்ச்சியைக் கண்டு கவுதமும் மகிழ்ந்து போனான்.

நீண்ட நாளுக்குப் பின், இல்லை... முதன் முறையாக அவள் முகத்தில் பூரண மலர்ச்சியும், சிரிப்பும் பூத்தன. கவுதமின் நெஞ்சு விம்மியது.

கடைசியாய் உயரமான சிவன் தோற்றம்! பிரம்மாண்டமான அந்தச் சிலையின் முன்னால் கட்டெறும்பு போல நின்றபோது மனசுக்குள் பிரமிப்பு! அப்பப்பா! என்ன அழகு... சிவனின் முகத்தில் என்ன ஒரு வசீகரம்?'

தன் பிரமிப்பைக் காட்டும் வழி அறியாமல் அவனது கையைப் பற்றினாள், வித்யா!

அவன் திரும்பிப் பார்த்தான்.

அவளே அருகில் வந்து தொட்டிருக்கிறாள்... அவனுள் அலை அலையாய், மின்சார அதிர்வாய் ஏதோ பரவுகிறது.

சிலையினின்று தன் பார்வையை விலக்கி அவனைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

''ரொம்ப அழகு'' என்றாள்.

நிலவின் ஒளி வெள்ளத்தில்... பனிமலை அமைப்பின் பின்னணியில், வெளிர் மின்னொளிக் குளியலில், மோன நிலையில் அமர்ந்திருக்கும் ஈசுவரனின் தோற்றம் உண்மையிலேயே அழகுதான்.

கூடவே, வசீகரமாய் - கண்களுக்கு விருந்தாய் இருந்தது, வித்யாவின் அழகு.

கண்களை விரித்து... முகம் மலர்ந்து... குழந்தையாய் குதூகலத்துடன் ரசித்துக் கொண்டிருந்த வித்யா, அந்த இரவு நேரத்தில் வனதேவதையாகத் தெரிந்தாள்.

இரவின் சாகசமா? இல்லை, இடத்தின் தன்மையா? நெஞ்சு வியந்து, மூச்சு வேகமாய் வெளிவந்தது அவனுக்கு.

''ம்.... ரொம்ப அழகுதான்'' இப்போது அவன், சிலையைப் பார்க்கவில்லை. அவளது முகத்தை ரசித்தவாறு சொன்னான். அவனது கரிய கண்கள், தாமரை மலரை மொய்க்கும் கருவண்டுகளைப் போல அவளது முகத்தை மொய்த்தன.

வித்யாவின் விழிகள், அந்தப் பார்வையிலிருந்து தப்ப முடியாமல் தவித்தன. இமைக்காமல் பார்த்தன. அந்த சங்கமத்தில் சுற்றுப்புறச் சூழ்நிலையை மறந்து போனார்கள்.

அந்த இடத்தில் இருந்த மனிதர்கள் கற்பூரமாய் காற்றில் கரைந்து மாயமாகிப் போய்... அங்கே அவர்கள் இருவர் மட்டுமே நிற்பது போல ஒரு பிரமை!

அவளை அப்படியே வாரி அணைத்து தன் இதயக் காதலை உணர்த்த வேண்டும் போல அவனுள் துடிப்பு எழுந்தது.



அவள் முகத்தை இரு கைகளில் ஏந்தி, குனிந்து இமைகளில்... இதழ்களில் முத்தமிட வேண்டும் போல் தவிப்பு உண்டானது...

பற்களைக் கடித்துக் கொண்டு அடக்கிக் கொண்டான்.

அவனையே மெய்மறந்து பார்த்துக் கொண்டிருந்த வித்யா, தன் நினைவுக்கு வர, சட்டென்று கையை விலக்கிக் கொண்டாள்... கண்களைத் தாழ்த்தினாள்... ஆனாலும் அவனது பார்வையை அவளால் மறக்க முடியவில்லை.

'என்ன இது? தனக்குள் என்ன நிகழ்ந்தது?' சிவனைப் பார்த்தாள்... அவர் குறும்பாய் புன்னகைப்பது போல அவளுக்குப் பட்டது. 'எதைப் பார்த்து இந்தக் குறுஞ் சிரிப்பு?' மனம் கேட்டது.

அந்த நிலையில் ஒன்றை மட்டும் தெளிவாக உணர்ந்து கொண்டாள்.

கவுதம் தன் இதயத்தில் சிம்மாசனம் போட்டு அமர்ந் திருக்கிறான்... அதன்பின் ரகுவரனின் நினைவுகள் எல்லாம் வெறும் மாயை.

ரகுவரனின் நினைவில் ஏங்கித் தவிக்கிறோம் என்று நினைத்தது பேதமை... உண்மையில் கவுதமை விட்டுத் தன்னால் ஒரு நாள் கூடப் பிரிந்திருக்க முடியாது என்பதை அந்த கணத்தில் நன்றாகத் தெரிந்து கொண்டாள், வித்யா.

தன் மனதை தனக்கு நன்றாகப் புரிய வைத்த அந்த பரம் பொருளுக்கு நன்றியுரைத்தாள்.

நாளை திருமண நாள்... கவுதமின் மனைவி என்ற உரிமையைப் பெற்ற நன்னாள்.

நல்லவேளை... அதற்கு முன்னாலேயே அவன் மீதிருக்கும் காதலை உணர்ந்தது நல்லதாயிற்று.

என் மனம் அடைந்த மாற்றத்தை நாளை அவரிடம் தெரியப்படுத்த வேண்டும். இந்த இரண்டு ஆண்டாக விரலாலும் என்னைத் தொடாத அவருக்குத் திருமண நாளில் அன்பளிப்பாய் என்னையே தர வேண்டும்... அந்த நினைவால் எழுந்த மகிழ்ச்சியால் வித்யாவின் கன்னங்கள் செம்மைப் பூசிக் கொண்டன... கண்கள் மின்மினிப் பூச்சிகளாய் மினுமினுத்தன.

புதிதாய் உணர்ந்த உண்மையை உள்ளப் பேழையில் பூட்டி வைத்து ஒரு நாளைக் கழிப்பது என்பது அவளுக்குச் சிரமமாகத்தான் இருந்தது.

வழி முழுக்க தன் அன்புக் கணவனை கடைக் கண்ணால் பார்த்துக் கொண்டு வந்தாள். அவளுள் பட்டாம்பூச்சி சிறகடித்துப் பறந்தது.

இரவெல்லாம் ஒத்திகை... 'அவனிடம் எப்போது சொல்ல வேண்டும்... எப்படித் தொடங்க வேண்டும்...?'

அந்த ஆர்வத்தில் தூக்கம் வர வெகுநேரமாகிப் போனது.

## 13



பறவைகளின் 'கீச்.... கீச்..' சத்தத்தில் கண் விழித்தாள். வித்யா இன்றைக்குத் திருமண நாள். தன் வாழ்வின் வசந்த நாள்.... தன் காதல் இரகசியத்தை கணவனிடம் கூறி, திணற வைக்கப் போகும் நாள்... அவனது அணைப்பில் சரணடையப் போகும் நாள்.



அந்த ஆனந்தத்தில், குளித்து முடித்தாள். பேராசையுடன் கணவனைக் காண வந்த, வித்யா திடுக்கிட்டாள்.

படுக்கைக் காலி...! 'எங்கே அவர்... குளியல் அறையிலும் எந்தச் சத்தமும் வரவில்லையே?' கண்களைச் சுழற்ற... இரவு விளக்கின் அருகில் வெள்ளைக் காகிதம் மடித்து வைக்கப்பட்டிருப்பது பார்வையில் பட்டது. எடுத்தாள், பிரித்துப் படித்தாள்.

**'இனிய காலை நேரம் என்னைக் கட்டி இழுக்கிறது. வெளியில் 'வாக்கிங்' போய் வருகிறேன்...**

**கவுதம்.'**

படித்தவள், சிரித்துக் கொண்டே இருந்தாள்.

'கணவன் வருவதற்குள் இன்னும் அலங்கரித்துக் கொண்டு காத்திருக்க வேண்டும். இன்றைக்கு வாழ்வின் முக்கியமான நாள். இந்த நாள் முழுக்க இருவரும் சிரித்துக் கொண்டு மகிழ்ச்சியாய் இருக்க வேண்டும்' நினைத்த நேரத்தில், கைவிரலில் கிடந்த மோதிரம் கண்ணில் பட்டது.

ரகுவரன் தந்தது. 'கடவுளே... இதை ஏன் வாங்கினேன். ச்சே! இனி அந்த ரகுவரனைப் பற்றி நினைக்கவும் கூடாது. அவனை நினைவூட்டும் எந்தப் பொருளும் என்னிடம் இருக்கவும் கூடாது. இதை அவனுக்கே திருப்பி அனுப்பி விட வேண்டும்' குழப்பத்திற்கு தீர்வு கண்ட நிம்மதி, அவளை தித்திக்க வைத்தது.

திருமணமான புதிதில் கவுதம் ஆசையாய் வாங்கித் தந்த சேலை அப்படியே பெட்டியில் இருந்தது நினைவுக்கு வந்தது.

இன்றைக்கு அதைக் கட்டிக் கொள்ளலாமே...

பெட்டியைத் திறந்து சேலையை எடுத்தாள். இளம் மஞ்சள் நிறத்தில் சின்னச் சின்னதாய் சித்திரப் பூக்கள் பூத்திருந்தன.

அன்றைய மனநிலையில் அதை உடுத்தவில்லை... பெரிதாய்ப் பொருட்படுத்தவும் இல்லை. இன்று அதைக் கையில் வைத்துக் கொண்டு தடவினாள். அந்த சேலையினுள் கணவனின் இதயம் இருப்பது போல நினைத்து ஏங்கினாள்.

அழகாய் உடுத்தி, ஒய்யாரமாய் ஒப்பனை செய்து கணவனின் வரவுக்காகக் காத்திருந்தாள்.

கண்ணாடியில் தன்னைப் பார்த்தபோது அவளுக்கு திருப்தி ஏற்பட்டது.

கவுதமின் கம்பீர அழகுதான் பூரணமாகப் பொருத்தமானவள் என்ற பெருமிதம் உண்டானது.

'அலோ... என் இனிய கவுதம் அவர்களே... என் நேசக் கணவரே! இன்றைக்கு என்னைப் பார்த்து அப்படியே கிறங்கப் போகிறீர்கள்.'

கைக் கடிகாரத்தைப் பார்த்தாள்... மணி எட்டரை!

உதட்டைப் பிதுக்கினாள்... நேரம் என்ன நொண்டியாட்டம் ஆடுகிறதா... ப்ச்சு!

பொறுமை இழந்து, ஜன்னலின் திரைச்சீலையை ஒதுக்கிவிட்டு, வேடிக்கைப் பார்த்தாள்.

அழைப்பு மணிச் சத்தம் கேட்டது. இதோ வந்தாயிற்று...

ஓடிப்போய் கதவைத் திறந்தவளுக்கு திகைப்பும் வியப்பும்! அங்கே நின்றவள், ஷோபா... ரகுவரனின் மனைவி...



''நான் உள்ளே வரலாமா, வித்யா?'' தயங்கிய குரலில் ஷோபா கேட்டதும் திகைப்பிலிருந்து மீண்டாள், வித்யா...

சுதாரித்துக் கொண்டு ''வாருங்கள்'' என்று வரவேற்றாள்.

## 14



ஒரு காலத்தில் தனக்குப் போட்டியாக வந்தவள்... தன் வாழ்க்கையைப் பங்கு போட்டுக் கொண்டவள் என்ற கோபமும் எரிச்சலும் ஷோபா மீது வந்தது என்னவோ உண்மைதான்.

இப்போது, தன் முன் வந்து நின்ற ஷோபாவைப் பார்த்து வித்யாவின் மனம் பரிதாபப்பட்டது.

வாழ்நாளை எண்ணிக் கொண்டிருக்கும் இவளை எதிரியாய் நினைப்பது தவறு... ரகுவரனின் திருவிளையாடலுக்கு இவள் என்ன செய்வாள்... பாவம்!

முதலில் ரகுவரனின் காதலி அவள். அதன் பிறகுதான் மனைவி என்ற உறவு தனக்கு ஏற்பட்டது. பார்க்கப் போனால் இடையில் வந்தவள் நான்தான்.

''உங்களிடம் ஒரு முக்கியமான விஷயம் பேச வேண்டும்'' ஷோபா, சொன்னாள்.

''என்னிடமா... அப்படியென்ன விஷயம்.''

''வந்து...'' கண்கள், தயக்கமாய் சுற்றிப் பார்க்க...

''பரவாயில்லை சொல்லுங்கள், ஷோபா... இங்கு என்னைத் தவிர யாரும் இல்லை...''

''நீங்கள், அவரை சந்தித்தீர்கள் என்று தெரிந்தது. அது சம்பந்தமாய் பேசத்தான் வந்தேன், வித்யா... உங்களிடம்

கெஞ்சிக் கேட்கிறேன், எனக்கு ஒரு உதவி வேண்டும். செய்வீர்களா?''

''உதவியா... என்ன உதவி... லண்டனிலிருந்து மருந்து ஏதாவது வாங்கி அனுப்ப வேண்டுமா? கட்டாயம் செய்கிறேன்.''

''சேச்சே... அதெல்லாம் இல்லே. நான் கேட்க வந்தது வேறு, வித்யா... வந்து...''

''தயங்காமல் சொல்லுங்கள்.''

''நீங்கள் மறுபடியும் ரகுவரனுடன் சேர்ந்து வாழணும்... என் குழந்தைகளுக்குத் தாயாக இருந்து அன்பு காட்டணும் செய்வீங்களா வித்யா...?''

அதிர்ச்சி! மின்னல் தாக்கியது போல அதிர்ச்சி!!

ரகுவரனையா... மறுபடியுமா...?

வித்யா விழித்தாள்!

''நான் இன்னும் எத்தனை நாட்கள் உயிருடன் இருப்பேன் என்று தெரியாது. நான் இறந்த பிறகு என் குழந்தைகளை வைத்துக் கொண்டு அவர் தவிக்கக்கூடாது... அவரையும் குழந்தைகளையும் அநாதையாக விட்டு விட்டுப் போனால் என் நெஞ்சு வேகாது, வித்யா... ரகுவரனுக்கு நல்ல துணை வேண்டும்... என் பிள்ளைகளுக்கு ஒரு நல்ல தாய் வேண்டும்... உங்களை விட்டால் அதுக்கு வேறு யாரும் இல்லை!!

''.........''

''அன்று உங்களை விரட்டினேன். இன்று உதவி கேட்டு நிற்கிறேன். இதுதான் விதியின் விளையாட்டு என்பது'' சிரித்தாள், ஷோபா. அதில் சோகம் தெரிந்தது.



'என்ன பதில் சொல்வது?' புரியாமல் நின்றாள், வித்யா...

''என்ன யோசிக்கிறீர்கள், வித்யா. இது நான் மட்டும் எடுத்த முடிவு இல்லை. ரகுவரனின் விருப்பமும் இதுதான்... உண்மையைச் சொல்லப் போனால், அவர் சொல்லிதான் நான் வந்தேன்... 'வித்யாவுக்கு நான் செய்த துரோகம்தான் உன்னை மரணக் குழியில் தள்ளிவிட்டது. நான் செய்த பாவத்தை உணருகிறேன். ஷோபா... அதற்கு பரிகாரமாய் வித்யாவை ஏற்றுக் கொள்வதுதான் சரியானது. அவளை அழைக்க எனக்குத் தகுதியில்லை... நீ போய் அழைத்தால் மனம் இளகி நிச்சயம் வருவாள்... நம் பிஞ்சுக் குழந்தை களுக்காக நீ இதைச் செய்யணும், ஷோபா!' என்றார் அவர்... அவர் சொல்வதும் உண்மை என்று நினைத்து நானே உங்களைத் தேடி வந்து விட்டேன்...''

விடாமல் பேசி விட்டதால் அவளுக்கு மூச்சு இரைத்தது.

தண்ணீர் கொண்டு வந்து தந்தாள், வித்யா.

அவளையே பார்த்துக் கொண்டிருந்த வித்யாவுக்கு, ஷோபாவின் மேலிருந்த பரிதாபம் மேலும் கூடியது...

''நான் ஏதாவது தப்பாப் பேசிட்டேனா'' வித்யாவின் முகமாற்றத்தைக் கண்டு பயந்து போய் கேட்டாள், ஷோபா.

''இல்லை ஷோபா... நீங்கள் எதுவும் தப்பாகப் பேச வில்லை. ஆனா நடக்க முடியாததைப் பற்றிப் பேசினீர்கள்.''

''நடக்க முடியாததா... நீங்க மனம் வைத்தால் நிச்சயம் நடக்கும். நீங்கதான், அவரோட முதல் மனைவி...''

''அது நான்கு ஆண்டுக்கு முன்னால்... இப்போ நான் இன்னொருவரின் மனைவி... ரகுவரன், அதைச் சொல்ல வில்லையா?''

''சொன்னார், அதையும் சொன்னார்... இன்னொன்றையும் சொன்னார்...''

''என்ன?''

''உங்களுக்குள் சுமுகமான நிலை இல்லைன்னார்... இன்னும் உங்க மனசில் அவர்தான் இருக்கிறார் இல்லையா, வித்யா... நானும் பெண்தான். பெண்ணோட மனசு பெண்ணுக்குத்தான் புரியும்... பிடிக்காதவரோடு ஏன் வாழணும்...

உங்களுக்கு முழு உரிமை இருக்கு. இந்தப் போலி வாழ்க்கையை உதறிவிட்டு வாங்க வித்யா... உங்களுக்காக ஒரு குடும்பம் கைநீட்டிக் கொண்டு காத்திருக்கிறது... நீங்க விட்டுக் கொடுத்த வாழ்க்கையை இப்போ உங்களுக்கே திருப்பித் தருகிறேன்'' சொல்லும்போது ஷோபாவின் கண்களில், நீர்த் திவலைகள் துளிர்த்தன...

அது, அன்புக் கணவனையும்... ஆருயிர் குழந்தை களையும் பிரியப்போகும் வேதனைக் கண்ணீர்!

''மன்னிக்கணும் ஷோபா... நீங்கள் நினைப்பது ரொம்ப தப்பு... நான் பழைய வாழ்க்கையை மறந்து, புது வாழ்க்கையைத் தொடங்கி இருக்கிறேன். போலி வாழ்க்கை வாழ்கிறேன் என்று... யார் சொன்னது? நிச்சயமாக இல்லை.''

''அப்போ... அவர் சொன்னது...''

''என்ன சொன்னார்?''

''நீங்க சந்தோஷமா இல்லையாம். 'வித்யா இப்போ முள் மீது இருப்பது போல வாழ்கிறாள்' என்றார்.''

''ஓ! அய்யா அந்த எண்ணத்தில் அனுப்பி வைத்தா ராக்கும். அதுதானே பார்த்தேன்.''



'ஓநாய் அழுததாம்... ஆட்டுகுட்டி நனைகிறது' என்று... அது மாதிரிதான் இது. முதலில் என்னைப் பேச்சால் வளைக்க எண்ணம்... அது பலிக்காததால் இப்போது மனைவி விடு தூது!

'ரகுவரன் இங்கு வந்த நேரத்தில் நான் குழம்பியதும்... கவுதமும் நானும் தள்ளி நின்றதும் அவனுக்கு ஏதுவாகிப் போனது...

இல்லற சுகத்துக்கு உதவாதவளாகிப் போன ஷோபா இப்போது உயிருடன் இருக்கும்போதே இன்னொருத்திக்கு வலைவீச்சு! மிருகம்! மனித மிருகம்... நல்லவேளை அவனிடமிருந்து தப்பித்தேன்' வித்யா நினைக்க...

ஷோபா இன்னும் பேசிக் கொண்டிருந்தாள்.

''இதோ பாருங்கள், ஷோபா... நீங்கள் நினைப்பது போல எதுவும் இல்லை. போய் உங்கள் கணவரிடம் சொல்லுங்கள். கன்னா பின்னா என்று கற்பனைகளை வளர்த்துக் கொண்டு காத்திருக்க வேண்டாம்... உடைந்த கண்ணாடியும் திரிந்து போன பால் மாதிரிதான் எங்களுக்குள் நடந்த கல்யாணம்... இனி, அந்த பந்தத்தில் பயனில்லை... இப்போது, நான் கவுதமை நன்றாகப் புரிந்து கொண்டேன்... என்னைப் பற்றி யாருக்கும் கவலை வேண்டாம். எனக்கு ரகுவரன் செய்தது கூடத் துரோகம் இல்லை... ஒரு வகையில் நன்மைதான்னு சொல்லுங்கள் ஷோபா.''

ஷோபாவின் முகத்தில் வாட்டம் தெரிந்தது.

அவள் சோர்வாய் புறப்பட்டாள்.

திடீரென தொலைபேசி குரல் எழுப்பியது. ஓடிச்சென்று எடுத்தாள், வித்யா.

''அலோ...''

எதிர்முனையில் கவுதமின் குரலை எதிர்பார்த்துப் பேசிய வித்யாவுக்கு முகம் மாறியது... உற்சாகமும் மாயமானது.

பேசியவன், ரகுவரன்!

அந்த நேரத்தில் அவனது குரலைக் கேட்டபோது அவளுக்குப் பற்றிக் கொண்டு வந்தது...

என்னவாம் அவனுக்கு...

''வித்யா... ஷோபா அங்கு வந்தாளா?''

''ஏன்... அனுப்பி வைத்தது நீங்கள்தானே. உங்களுக்குத் தெரியாதா?'' வெடுக்' என்று சொன்னாள்.

''ஆமாம் வித்யா... அனுப்பி வைத்தது நான்தான்... அதை விடு, வித்யா... இப்ப நாம நேரில் சந்திக்கிறோம். உடனே நீ இங்கே... என் வீட்டுக்கு வருகிறாய்...''

அப்போது 'கிளிக்' என்ற சத்தத்துடன் கதவு திறந்தது.

அங்கே, கவுதம்.

## 15



காலணியைக் கழட்டிக் கொண்டிருந்த கவுதம் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். அவள் முகத்தில் தெரிந்த எரிச்சலைக் கண்டு வேறு விதமாய் நினைத்தான்.

'ரகுவரனைச் சந்திக்கத் தயாராய் இருக்கிறாள்... அங்கு ரகுவரனுக்குப் பொறுமையில்லை போலும்.'

எதுவும் பேசாமல் இருந்தவனிடம் சொன்னாள்.



''ரகுவரன்தான் போனில்...''

''தெரியும்.''

''என்னை வரச் சொன்னார்... ஏதோ சொல்ல வேண்டுமாம்.''

அவள் முடிப்பதற்குள் அவன் சொன்னான்.

''போய் வா. அவன் உனக்காகத்தானே காத்திருக்கிறான்...''

'சுர்' என்று கோபம் வந்தது அவளுக்கு. 'இந்த ஆண்களே இப்படித்தானோ... விருப்பமில்லாத என்னை வரச் சொல்லி வற்புறுத்தும் ரகுவரன்... 'போய் வா' என்று விரட்டாத குறையாய் அனுப்பும் கவுதம்...

'பெண்ணோட மென்மையான உணர்வுகளை இவர்கள் எப்போது புரிந்து கொள்ளப் போகிறார்கள். அடுத்தவர் மனதின் விருப்பு வெறுப்புகளை அறிந்து கொள்ளாத ஜடங்களா இவர்கள்...?

'சேச்சே! இதில் கவுதமைக் குறை கூற முடியாது. அவருக்கு எப்படி என்னை... என் உள்ளத்தைப் பற்றித் தெரியும்... பேழையில் பூட்டிவைத்த புதையலாய் என் காதலை ஒளித்து வைத்தது நான்தானே. நான் வெளிப்படுத்தினால்தானே அவருக்குத் தெரியும்...'

'இல்லை... நான் உங்களுடன்தான் இருப்பேன்' என்று சொல்ல நினைத்து வாய் திறந்தவள், குளியல் அறைக்குள் கணவன் செல்வதைக் கண்டு பேச்சிழந்தாள்.

''பட்''டென்று மூடப்பட்ட கதவை வெறித்துப் பார்த்தாள்...

'நீங்கள் என்னைப் புரிந்து கொள்ளவேயில்லையே கவுதம்!'

அவளது கண்களில் இருந்து கண்ணீர் தாரையாக இறங்கியது.

மனசுக்குள் பொருமினாள். வெயிலில் காயும் புழுவாய் துடித்துப் போனாள்.

என்ன சொல்லிவிட்டுப் போய்விட்டார்... 'என் மனம் ரகுவரன் வசமாம்... இருவரும் சேர்ந்து வாழ வாழ்த்துக் களாம்... இவர் ஏதோ என் மனதை முழுவதும் அறிந்த மாதிரி!'

'இதற்கெல்லாம் அந்த ரகுவரன்தான் காரணம்... அவனை... இனி பார்க்கவே கூடாது!' முடிவு எடுத்த போது தொலைபேசி சிணுங்கியது. வேண்டா வெறுப்புடன் எடுத்தாள்.

மீண்டும் அவன்தானோ... முகத்தை சுளித்தவாறே ''அலோ'' என்றாள். திரும்பவும் ஏதாவது பிதற்றினால் முகத்தில் அறைந்தாற்போல பதில் கொடுக்கத் தயாராக இருந்தாள்.

ஆனால் பேசியது அவனில்லை... ஷோபா!!

''வித்யா... என் மருந்து சீட்டையும் மாத்திரைகளையும் உங்கள் அறையில் மறந்து வைத்துவிட்டு வந்து விட்டேன். இங்கே வந்த பின்புதான் நினைவுக்கு வந்தது. வெறும் மாத்திரைகள் என்றால் பரவாயில்லை. மருந்து சீட்டு கண்டிப்பாய் வேணும். என்னால் வர முடியவில்லை. தயவு செய்து அதைக் கொண்டு வர முடியுமா? உங்களுக்கு தொந்தரவு தருவதற்கு மன்னிக்கவும். வேறு வழியில்லாமல் தான் உங்களைக் கேட்கிறேன். சார்... வித்யா...''

அப்போதுதான் கவனித்தாள், வித்யா... சோபாவின் மூலையில் ஒரு பை கிடந்தது...



வித்யா, ரிசீவரை கீழே வைத்துவிட்டு எடுத்துப் பார்த் தாள். சிறிதும், பெரிதுமாய் மாத்திரைகள்.

'அடபாவமே! மாத்திரை விற்கும் விலையில் அதை விட்டுச் சென்றிருக்கிறாள்.... இதையும், அப்படியே இந்த மோதிரத்தையும் தந்துவிட்டு வருவதுதான் நல்லது...'

ரிசீவரை எடுத்துப் பேசினாள், வித்யா.

''எங்கே இருக்கிறீர்கள் ஷோபா, சொல்லுங்கள்... அங்கே வருகிறேன்'' வேறு வழியின்றிச் சம்மதித்தாள்.

கடிகாரத்தைப் பார்த்தாள். மணி, ஏழு ஐம்பது!

கவுதம் இன்னும் குளித்துக் கொண்டிருப்பது தெரிந்தது. நீர் பொழியும் ஓசை தெளிவாகக் கேட்டது. குளித்து முடித்து வெளிவர நேரமாகும் போல் தெரிந்தது. 'காத்திருக்க வேண்டாம். சீக்கிரமாய்ப் போய் திரும்ப வேண்டும்.'

ஒரு காகிதத்தை எடுத்து அவசரமாய் எழுதினாள். விளக்கமாக எழுத நேரம் இல்லாமல் வெகு சுருக்கமாக முடித்தாள்.

**'நான் ரகுவரன் வீட்டுக்குப் போகிறேன்... வந்ததும் உங்களுடன் பேச வேண்டும்... என் மனதை நான் தெளி வாய் உணர்ந்து விட்டதைப் பேச வேண்டும்... வந்த பின்பு சொல்கிறேன்... காத்திருங்கள். அவசரத்தில் கோர்வையாய் எழுத வரவில்லை... வித்யா.'**

அவன் புரிந்து கொள்வான் என்ற நம்பிக்கையுடன் புறப்பட்டாள். மறக்காமல், ரகுவரன் தந்த மோதிரத்தை எடுத்துக் கொண்டாள். வாடகைக் காரை அமர்த்தி, மல்லேசுவரம் சென்றாள்.

பூத்தூறலாய் விழுந்த குளிர்ந்த நீரின் பொழிவில், குளியலறையில் தன்னை மறந்து நின்றான், கவுதம். கொதித்த அவன் உள்ளம் மெல்ல மெல்லக் குளிர்ந்தது.

'கடைசியில் என் அன்பு தோற்றுவிட்டதே... வித்யாவின் காதலை வெல்ல முடியாமல் போனதே...?'

தாயின் வருடலாய் இதமாய் விழுந்த நீரில் எத்தனை நிமிட நேரம் நின்றானோ தெரியாது.

மனம் சமாதானப்பட்டதும் வெளியே வந்தான்.

தலையைத் துவட்டியவாறு மனைவியைத் தேடினான். அவள், கண்ணில் படவில்லை...

'பால்கனியில் நின்று வெளியே வேடிக்கைப் பார்க் கிறாளோ, என்னவோ?' நினைத்தபடி கண்ணாடி முன் நின்று, தலை சீவத் தொடங்கினான். அப்போது அந்தக் கடிதம், கண்ணில் பட்டது.

எடுத்தவன், பிரித்துப் படித்தான்.

மறுபடியும் ரகுவரன் வீட்டுக்கு!

அவனது இதயம் சுக்கு நூறாய் உடைந்து போனது போல உணர்ந்தான். அந்த வேதனையில் அப்படியே, தலை குனிந்து அமர்ந்தான்.

'வித்யாவின் விருப்பத்தை மதித்து இங்கு வந்தோமே... இப்படி அவளில்லாமல் திரும்பிச் செல்வதற்காகவா?' ஏக்கப் பெருமூச்சு விட்டான்.

இன்று திருமண நாள்... மகிழ்வாய் கழிய வேண்டிய நாள்... மகிழ்ச்சியையே பறித்து விட்டதே!

கணவன் - மனைவி என்ற பந்தம் உண்டான நாளில்... அந்த உறவு முறியப் போகிறது... இல்லை; முறிந்தே விட்டது!



ரகுவரனைத் தேடி அவள் போவதென்றால்... அவளால் அவனைப் பிரிந்து வாழ முடியவில்லை என்றுதானே அர்த்தம்! இனி அவளுக்காக உருகிக் காத்திருப்பதில் என்ன பயன்?

இந்த நேரம் ரகுவரனைச் சந்தித்திருப்பாள்... 'இனி உங்களுடன்தான் வாழ்க்கை' என்று சொல்லியிருப்பாளா...? அவனுடன் சிறகுகள் இல்லாமலே வானத்தில் சஞ்சரித்துக் கொண்டிருப்பாளா?

அதெப்படி... அத்தனை உதாசீனம் செய்தவனிடமே ஓர் காலடியில் விழ முடிகிறது...? அதாவது, முதல் கணவன் என்ற பந்தமா?

என்னவோ சொல்வார்களே! 'கல்லானாலும் கணவன்' என்று... அது சரியாகத்தான் இருக்கிறது.

இனி...?

புறப்பட வேண்டியதுதான்... தன் மனைவியை முதல் கணவனுக்குத் தாரை வார்த்து அனுப்ப வேண்டியதுதான்... இனி வாழ்வே வெறுமைதான்...

கனத்த மனதுடன் எழுந்தான்... தன் உடைமைகளை எல்லாம் எடுப்பதில் முனைந்தான்.

## 16



**வ**ழி முழுதும் வித்யாவின் மனம் அசை போட்டுக் கொண்டிருந்தது.

தான் நினைத்தது ஒன்று! நடந்தது வேறு!!

இன்று முழுக்க முழுக்க கவுதமுடன் இருக்க வேண்டும்... ஒரு நிமிடமும்

கூடப் பிரியக்கூடாது... நான் உணர்ந்து விட்டக் காதலை வெளிப்படுத்த வேண்டும். கவுதமின் அன்பு அணைப்பில் என்னை மறக்க வேண்டும்... இந்தத் திருமண நாளை பொன்னாளாக நினைவில் வைத்திருக்கும்படிச் செய்ய வேண்டும்... ஆனால், எல்லாம் தலைகீழ்...

ரகுவரனைப் பார்க்க வேண்டும் என்று தலையெழுத்து! நினைக்கும்போதே முகம், வேதனையாய் சுளித்துக் கொண்டது.

'எல்லாம் என் தப்பு. ரகுவரனைச் சந்தித்தபோதே முகத்தில் அறைந்தாற்போல பேசியிருக்க வேண்டும்... இப்போது மறுகி என்ன பயன்?

மீண்டும் அவன் வீட்டுக்குப் போக வேண்டிய சூழ்நிலை வேறு வந்து விட்டதே. ஷோபா மறக்காமல் மாத்திரையை எடுத்துப் போயிருக்கக் கூடாதா...?' மறுபடி உள்ளுக்குள் நொந்து கொண்டாள்.

காரிலிருந்து அவள் இறங்குவதைக் கண்டு ரகுவரன், முகம் மலர்ந்து போனான்.

'வித்யா ஏமாற்றவில்லை... நான் எதிர்பார்த்தபடி வந்து விட்டாள்.'

''வா... வித்யா... உள்ளே வா...''

இரு கைகளை நீட்டி வரவேற்காத குறையாக அவன் அழைத்தான்.

வீட்டில் வேறு யாரும் இல்லாததைக் கண்டு ''இன்னும் உங்கள் மனைவி வரவில்லையா?'' என்று கேட்டாள், வித்யா.

''ஆஸ்பத்திரியில் நிறைய பரிசோதனைகள்... அத்தனை சீக்கிரம் அனுப்பிவிட மாட்டார்கள்...''



''குழந்தைகள்...''

''வழக்கம்போல் தெரிந்தவர் வீட்டில் விட்டுச் சென்றிருப்பாள். சரி... என்ன சாப்பிடுகிறாய்... வித்யா.''

''எதுவும் வேண்டாம்... இந்த மாத்திரைகளை எங்கள் அறையில் ஷோபா மறந்து வைத்துவிட்டுப் போய் விட்டார்... அதைக் கொடுத்துவிட்டு போகத்தான் வந்தேன்...'' என்றவள், மாத்திரையை வைத்துவிட்டு ''ஷோபாவிடம் சொல்லிவிடுங்கள். நான் வருகிறேன்'' என்று புறப்பட்டாள்.

''உன்னிடம் ஷோபா எதுவும் சொல்லவில்லையா, வித்யா?''

அவள் 'இல்லை' என்பதுபோல் பார்த்தாள்.

''உட்காரு. வித்யா... சொல்கிறேன்...''

''உட்கார்ந்து பேசுவதற்கு நேரமில்லை... அதற்கு அவசியமும் இல்லை...''

''அவசியம் இருக்கிறது, வித்யா...'' என்றவன் நாற்காலி ஒன்றை எடுத்து வந்து போட்டான். அவளை உட்காரச் சொன்னான்...

உட்கார்ந்தாள்.

''வித்யா... நான் உன்னை மணந்தபோது என் மன நிலையே வேறு... அப்போதும் ஷோபாவை காதலித்தது உனக்குத் தெரியும்... அவளைக் கைவிடக்கூடாது என்றுதான் அவளை மணந்து கொண்டேன்...''

பொறுமையிழந்து இடைமறித்தாள், வித்யா.

''பழசெல்லாம் இப்போது எதற்கு?'' கைக்கடிகாரத்தைத் திருப்பிப் பார்த்தாள்..

''நான் சொல்ல வந்தது இதுதான். என் மனைவிக்கு மருத்துவர்கள் கெடு வைத்து விட்டார்கள். அதன் பிறகு நான் தனிமரமாக நிற்க வேண்டும். மனைவி இருந்தும் இப்போது தனிமைதான்.''

''அதனால்...?''

''நீயும் என் நினைவில்தான் தவித்துக் கொண்டு, கவுதமுடன் வாழாமல், விலகி இருக்கிறாய். உன் இளமை பாழாய் போய்க் கொண்டிருக்கிறது. ஷோபாவும் என் விருப்பத்துக்குச் சரி என்று சொல்லி விட்டாள்.''

''அதனால்...'' உதட்டைக் கடித்துக் கொண்டு கோபத்தை அடக்க முயன்றாள், வித்யா.

''என்னுடனே இருந்து விடு, வித்யா... மறுபடியும் ஒரு நல்ல வாழ்க்கையைத் தொடங்குவோம்... உன் வாழ்க்கையைப் பாலைவனமாக ஆக்கியதற்காக நான் வருந்தாத நாளே கிடையாது. மறுபடியும் உன்னை மகிழ்ச்சியுடன் வைத்துக் கொள்ள வேண்டும். அதுதான் என் ஆசை...'' மந்தகாசப் புன்னகையுடன் அவன் சொல்ல... அவளுக்குள் தீ பற்றிக் கொண்டு வந்தது. நினைத்தாலே குமட்டியது.

அவளது மவுனத்தை சம்மதம் என்று நினைத்து அவன் மனம் துள்ளியது. அருகில் வந்தான்.

''வித்யா'' குழைவாய் அழைத்த அவனைப் பார்த்துப் பதறி எழுந்தாள்.

''இத்தனை சொல்லியும் நீ போகப் போகிறாய்... நாம் ஆனந்தமாய் வாழ்ந்த அந்த பத்து நாட்களை நினைத்துப் பார்... அந்த வாழ்க்கையை மீண்டும் அனுபவிக்கலாம், வித்யா... எனக்கு நீ வேண்டும்... திரும்ப வேண்டும்...''

பிதற்றியவாறு அவளை இழுத்து அணைக்க முயன்றான்... அவள் முகத்தோடு தன் முகத்தைப் பதித்தான்.



மலைப்பாம்பு ஒன்று தன்னைச் சுற்றிக் கொண்டதுபோல் பதறி, அவனை உதறினாள், வித்யா. அவனை எரித்து விடுவது போலப் பார்த்தாள்... அவளது கோபத்தை உணரும் நிலையில் அவன் இல்லை. மறுபடியும் அவளைத் தன் பக்கம் இழுக்க முயன்றான்.

''வித்யா... நான் எப்போதும் உன் ரகுவரன்தான்... கவுதம் உனக்கு உகந்தவன் இல்லை. என்னைப் போல அவனால் உனக்கு இன்பம்.''

அப்போதுதான் அவனுக்கு உறைத்தது... அவள் கைநீட்டி அறைந்திருக்கிறாள் என்று...

''கவுதமைப் பற்றிப் பேச உனக்கு அருகதை இல்லை... அவருடைய கால் செருப்புக்குக்கூட நீ சமம் இல்லை. தெரிந்து கொள். நான் இங்கு வந்தது நீ அழைத்ததற்காக இல்லை. எதை எதையோ நினைத்துக் கனவு காணாமல், இருக்கும் வரை ஷோபாவிடம் பூரண அன்பு காட்டு என்று சொல்லத்தான்... இனி உன் முகத்தில் முழிக்கவேமாட்டேன். குட்பை...''

வார்த்தைகளை உமிழ்ந்துவிட்டு நடந்தவள், திடீரென நின்றாள். விரலில் கிடந்த மோதிரத்தைக் கழற்றி அவன்முன் வீசிவிட்டு விரைந்தாள்.

வெளியே ஆட்டோ, ஒன்று வந்து நின்றது.

ஷோபாவும், குழந்தைகளும் இறங்கினார்கள்.

''என்ன வித்யா... புறப்பட்டு விட்டீர்களா? கொஞ்சம் தாமதம் ஆகிவிட்டது. உள்ளே அவர் இருக்கிறார்தானே... பின்னே, கொஞ்சம் பேசிக் கொண்டிருக்கலாமே?'' என்றாள்.

''இல்லை ஷோபா... இப்பவே நேரமாகி விட்டது... கவுதம் காத்துக் கொண்டிருப்பார் வருகிறேன்...''

''சாரி, வித்யா... உங்களுக்குத் தொந்தரவு கொடுத்து விட்டேன்... எல்லாம் என் மறதி... வரவர ஞாபக சக்தி குறைந்து கொண்டே வருகிறது'' சொல்லிவிட்டு முகம் வாடினாள், ஷோபா.

''வருத்தப்படாதீர்கள், ஷோபா... குழந்தைகளின் முகம் பார்த்து அவர்களுக்காகவாவது நீங்கள் அழாமல், உங்கள் பாரத்தையெல்லாம் கடவுளிடம் தள்ளிவிட்டு நிம்மதியாக இருங்கள்...''

''ரொம்ப நன்றி, வித்யா... இதமா நாலு வார்த்தை பேசினால் அதுவே மருந்தைவிட நன்றாக வேலை செய்கிறது... ஆனால் உங்களுக்கு நாழியாகிறது, புறப்படுங்கள்.''

அம்மாவுடன் ஒட்டிக் கொண்டு, புதுமுகமான வித்யாவை வெறித்துக் கொண்டிருந்தன, குழந்தைகள்.

குனிந்து முத்தம் கொடுத்த வித்யா, மழலைகள் இருவரது கையிலும் சில நூறு ரூபாய் நோட்டைத் திணித்தாள். ஷோபா தடுத்தாள்.

''என்ன ஷோபா. என்னை சிநேகிதி என்றீர்கள்... ஒரு சிநேகிதிக்கு இந்த உரிமைகூடவா இல்லை...'' என்று கேட்டாள், வித்யா...

''இருக்கிறது... இருந்தாலும்...''

''அப்போ மறுப்புச் சொல்லக்கூடாது... வரட்டுமா என் செல்வங்களா?''

வித்யா புறப்பட்டதும் வீட்டினுள் நுழைந்தாள், ஷோபா. மோட்டு வளையைப் பார்த்துக் கொண்டிருந்த ரகுவரன், மனைவி உள்ளே வந்ததும் கலவரத்துடன் ஏறிட்டான். ஷோபாவுடன் வித்யா பேசி இருப்பாள். வீட்டில் நடந்ததைச் சொல்லி விட்டாளோ? என்று கலங்கிப் போனான்.



இதே மனைவியைத்தான் அவன் தூது அனுப்பினான். ஆனால், வீட்டுக்கு வந்தவளிடம் முறைதவறி நடந்ததை எந்தப்பெண் சகிப்பாள்?

''என்னங்க... வித்யாவை நீங்க தப்பா எடைப் போட்டுட்டீங்க. அவள் ஒண்ணும் புருஷனோடு விருப்பம் இல்லாமல் வாழவில்லை. அவரோடு மகிழ்ச்சியாகத்தான் இருக்கா. நீங்க சொன்னீங்கன்னு நான் போய் கேட்டுவிட்டு, கூனிக் குறுகிப் போய்விட்டேன். கவுதம் நல்லவராம்... வித்யாவுக்கும் கவுதம் மேலே கொள்ளை அன்பு... இருவரும் சந்தோஷமாக இருக்கிறார்கள்.''

''அவர்களைப் பத்தி இப்போ என்ன பேச்சு? நமக்குத் தேவையில்லாத விஷயம்... அவங்க எப்படி இருந்தா நமக்கென்ன... போய் காபி போடு...'' எரிச்சலுடன் சொன்னான், ரகுவரன்.

'எதுக்கு இவருக்கு மூக்குமேல் கோபம் வருகிறது. இதே வித்யாவுக்கு தூது அனுப்பியவருக்கு இப்போது தேவை இல்லாத கோபம் வருகிறதே? சில நேரம் ஆண்களின் மனதையும்கூடப் புரிந்து கொள்ள முடியவில்லை?'

ஆயாசத்துடன் சென்றாள், ஷோபா...

வித்யா பேசிய வார்த்தைகளால் உள்ளம் சுருங்கிப் போனான், ரகுவரன்.

'கவுதமின் கால்தூசுக்கு... சே!'

அது மட்டுமா... அவள் கொடுத்த பேயறை! கன்னத்தைத் தொட்டுப் பார்த்தான்...

இன்னொருவரின் மனைவி கொடுத்த அடியில் கன்னம் எரிந்து கொண்டிருந்தது... ஒரு ஆண் மகனுக்கு இதைவிட அவமானம் வேறு வேண்டுமா...?

''இந்தாங்க... காபி...'' ஷோபா நீட்டிய தம்ளரை வாங்கி, காபியை உறிஞ்சினான்....

காபியின் சூடு, நாக்கைச் சுட்டது. பெரிதாய் தெரியவில்லை, வித்யா கொடுத்த சூட்டை விட...

17



ஆட்டோ ஒன்று ஆடி, அசைந்து வந்தது. அதை நிறுத்திய வித்யாவின் மனம் கொதித்துக் கொண்டிருந்தது.

ஒரே அறையில், ஏன் ஒரே படுக்கையில் இருந்தாலும் சொன்ன சொல்லுக்காக அவரது விரல் நுனியும் என் மீது படவில்லையே! எத்தனை கண்ணியம்! எத்தனைப் பொறுமையுடன் காத்திருக்கிறார்.

இரண்டு ஆண்டாக என்னைத் தொடாத கவுதம் எங்கே? மனைவி உயிருடன் இருக்கும்போதே இன்னொருத்தியை வளைக்கப் பார்க்கும்... ரகுவரன் எங்கே?

தெய்வமே! இந்த அயோக்கியனை நினைத்தா இரவும் பகலும் உருகி வழிந்தேன்... இவனது கடைக்கண் பார்வைக்கா தவமிருந்தேன்... இவனது அன்புக்காகவா ஏங்கி நின்றேன்.

இவனெல்லாம் மனிதனா... ச்சீ!

இவனை நினைத்து, கண்ணீர் விட்டு, வீணாய் பாழடித்து விட்டோமே, என்னையும் வதைத்து... கவுதமின் மனதையும் சிதைத்து... ஆனந்தமாய் கழிய வேண்டிய நாட்களை அலைக் கழித்தேனே...

தேடிவந்த, என்னை நாடிவந்த சொர்க்கத்தை நரகமாக்கிக் கொண்டேன்.



நானும் கலங்கி, அவரையும் வேதனைப்படுத்தி இம்சித்தேன்... ஆனந்தமாய் கழியவேண்டிய நாட்களை அவலமாய்க் கழியச் செய்தேன்...

இரண்டு ஆண்டு... ஆமாம், இருபத்தி நான்கு மாதம், எழுநூற்று முப்பது நாள்! வீணாகிப் போனதே.

இப்போது வந்த ஞானோதயம் திருமணம் ஆனதும், வந்திருக்கக் கூடாதா? கவுதமுடன் மனம் ஒன்றி வாழ்ந்திருக்கலாமே!

கடந்ததை நினைத்து நினைத்து மறுகினாள், வித்யா...

கவுதமை உதாசீனப்படுத்தியது மட்டுமின்றி... அவன் கூறிய புத்திமதியையும் அல்லவா உதாசீனம் செய்தாள்.

தவறை உணர்ந்தபோது மனம், வாளாய் அறுத்தது. 'கவுதம்... உங்கள் வார்த்தை சத்தியம்... நல்லவேளை நஞ்சிலிருந்து மீண்டு விட்டேன்...'

அவள் மனம் தவித்தது. கவுதமின் தோளில் சாய்ந்து சுமையை இறக்கி வைக்க வேண்டும் என்று.

அவளது அவசரத்துக்கு ஈடுகொடுக்காமல் ஆட்டோ மெதுவாய் ஊர்ந்து செல்வது போலத் தெரிந்தது.

கவுதமை எப்போது பார்ப்போம்... அவன் மடியில் விழுந்து 'என்னை ஏற்றுக் கொள்ளுங்கள்' என்று கத்தி அழுவோம் என்று துடித்தாள்...

அறைக்குள் வந்தபோது அங்கு சூழ்நிலை ஏதோ சரியில்லை என்று உள் மனம் இடித்தது...

ஆம்... எல்லாப் பொருட்களும் எடுத்து, அழகாய் வைக்கப்பட்டுப் புறப்படத் தயார் நிலையில் இருந்தன... அவற்றைப் பார்த்து செயலற்று நின்றாள், வித்யா.

'கவுதம் எங்கே?' கவலையுடன் பார்த்தாள்.

கவுதம், அவள் கண்ணில் படவேயில்லை... மண்டையைப் பிளப்பது போல தலைவலிக்க, இரு கைகளாலும் இறுகப் பிடித்துக் கொண்டு கட்டிலில் அமர்ந்தாள், வித்யா.

18



தலைக்குள் யாரோ நுழைந்து, உளியால் மண்டையைப் பிளப்பது போலத் தாங்க முடியாத வேதனை. தலைவலி மாத்திரையை விழுங்கினாள்.

காலையில் இருந்து எதுவுமே சாப்பிட வில்லை... சோர்வாய் படுக்கையில் விழுந்தவள், அடித்துப் போட்டதுபோல தூங்கிப் போனாள்.

எத்தனை நேரம் தூங்கினாளோ... அவள் விழித்தபோது இருட்டி இருந்தது.

கவுதம் வந்தபோது மணி ஒன்பது!

அவனது கண்கள் அளவுக்கு அதிகமாக சிவந்திருப் பதைக் கண்டாள்... 'குடித்திருக்கிறானா?'

உள்ளே வந்தவன், வித்யாவைப் பார்த்ததும் போதை இறங்கி, திகைத்தான்.

''வித்யா! நீ எப்போது வந்தாய்?''

''உடனே வந்துவிட்டேனே?''

''அப்போ... ரகுவரன்!'' நெற்றியைத் தேய்த்துக் கொண்டு கேட்டான்.

''என்ன சொல்கிறீர்கள் கவுதம்... எனக்கு எதுவும் புரியவில்லை... நான் வருவதற்குள் பொருட்களை எடுத்து வைத்து விட்டீர்கள். எதற்கு இந்த அவசரம்?''



அவன், விரல்கள் கேசத்தில் அளைய, பெருமூச்சு விட்டான்.

''உன் கடிதத்தைப் பார்த்தேன்.''

''அதுக்கு என்ன?''

''ரகுவரனுடன் சேர்ந்து வாழ முடிவு எடுத்து விட்டாயோ என்று நினைத்தேன். பின்னே ஏன் திரும்பி விட்டாய்? ரகுவரன் மனம் மாறி விட்டானா... மறந்து விட்டானா... இல்லை... அவன் மனைவி ஒப்புக் கொள்ளவில்லையா?''

''கவுதம்... ப்ளீஸ்.''

''நீ எந்த விளக்கமும் சொல்லத் தேவையில்லை. உன் விருப்பத்துக்கு நான் தடையாக இருக்க மாட்டேன். ஆனால் ஒரே கேள்விக்கு மட்டும் பதில் சொல்வாயா, வித்யா. இதைக் கேட்க எனக்கு உரிமை இருக்கிறது என்ற நம்பிக்கையில்தான் உன்னிடம் கேட்கிறேன்.''

''......''

''ஏன் வித்யா... உன்னை ஒதுக்கியவனிடத்திலேயே ஓடிப் போய் சேரத் துடிக்கிறாய்... உனக்கு தன்மானம் எதுவும் இல்லையா?''

''நான் அப்படி இல்லை கவுதம்.''

''இல்லையா... அதுதான் உன் கடிதத்தில் தெளிவாக எழுதி இருக்கிறாயே... 'ரகுவரன் வீட்டுக்குப் போகிறேன்' என்று. அது எப்படி முடிகிறது, வித்யா... உதாசீனப் படுத்தியவனிடமே தஞ்சமா? இந்தப் பெண்ணின் மனதில் இருப்பதைப் புரிந்துகொள்ளப் படைத்தவனாலும் முடியாது போலும்'' சலித்த குரலில், பேசினான்.

''உண்மைதான், உங்களாலும் என்னைப் புரிந்துகொள்ள முடியவில்லையே?''

''நான் நன்றாகப் புரிந்து கொண்டு விட்டேன், வித்யா... உன்னை என் கண்ணுக்குள் வைத்துக் கொள்ள ஆசைப் பட்டாலும் நீ அவனது காலில் விழுந்து கிடக்க விரும்புகிறாய்... உன்னை மகாராணியாய் நடத்த நான் ஆசைப்பட்டால் அவன் வீட்டு வேலைக்காரியாய் இருக்கத்தான் உனக்கு விருப்பம்...'' சோபாவில் சாய்ந்து, தளர்வாய் கண்களை மூடிக் கொண்டான்.

''எனக்கு யாரும் வேண்டாம்... என் கவுதம்தான் வேண்டும்.'' அவள் பலமாய் சொன்னதும் சட்டென்று விழித்து நிமிர்ந்தான்.

விளையாடுகிறாளா... சீண்டிப் பார்க்கிறாளா...?

''வேண்டாம், வித்யா... என் உணர்ச்சிகளோடு சதுரங்கம் ஆடாதே! நான் பட்டதுபோதும் இனியும் ஏமாற்றத்தை என்னால் தாங்க முடியாது'' முகம் சிவக்க அவன் சொல்ல...

''இது பொய் இல்லை கவுதம்... மெய். காலம் கடந்து நான் உணர்ந்து கொண்ட உன்னதமான உண்மை. நான் உங்களை... உங்களை மட்டுமே நேசிக்கிறேன்...'' கடைசி வார்த்தைகளை அழுத்திச் சொன்னாள்.

கவுதம், அதை நம்ப மறுப்பது போல் கலக்கமாய் விழித்துக் கொண்டிருந்தான்.

## 19



''நான் உங்களை நெஞ்சார நேசிக்கிறேன்'' என்றாள், வித்யா.

கவுதம், அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''எனக்கு இவ்வளவுதான் தெரியும்... வேறு மொழிகள் தெரியாது... தெரிந்தால் அதிலிலும்



சொல்லி இருப்பேன்'' முகத்தைப் பரிதாபமாய் வைத்துக் கொண்டு அவள் சொன்னதும், தன் காதுகளையே நம்ப முடியாமல் வியப்புடன் நின்றான், கவுதம்.

'வித்யா சொல்வதெல்லாம் உண்மையா? நான் எதையோ நினைத்து... மனதைக் குழப்பிக் கொண்டிருந்தேனே?'

இப்போது அவனுக்குள் பூரிப்பு. அவனது இதயம் காதலால் நிறைந்து வழிந்தது. மெல்லச் சிரித்தான்... வெறும் புன்னகையில் தொடங்கி, பெரும் சிரிப்பாய் மாறியது. அவளும் சிரித்தாள்.

''நீ சொல்வதெல்லாம் நிஜமா, வித்யா? நான் கனவு காண்கிறேனோ என்று பிரமையாகக்கூட இருக்கிறது. இரு... கிள்ளிப் பார்த்துக் கொள்கிறேன். ஆ... வலிக்கிறது! நிஜம்தான்.''

''இன்றைக்குத் திருமண நாளில் உங்களிடம் சொல்லி திகைக்க வைக்க வேண்டும் என்று திட்டம் போட்டு வைத்திருந்தேன். அந்த ராஸ்கல் ரகுவரனின் நினைவு எனக்குள் முடிந்துவிட்டது. அப்படியே ரகுவரனின் மோதிரத்தையும் திருப்பித் தந்துவிட்டு வந்துவிட்டேன். என் மனதில் இனி எப்போதும் உங்கள் நினைப்புதான் இருக்கும்.''

வித்யா, பேசி முடித்துவிட்டு கணவனைப் பார்த்தாள். அவன், பதில் பேசாமல் கைகளைக் கட்டிக் கொண்டு இருந்தான்.

'ஏன் இன்னும் அவன் இறுகியே இருக்கிறான். இத்தனையும் சொன்னதும் அவன் ஆனந்தமாய் அணைப்பான். தன் அன்பைப் பொழிவான் என்றெல்லாம் கற்பனை பண்ணி இருந்தேனே. இவன் இன்னும் அசையாமல் கல்லாய் நிற்கிறானே?' அவனை ஏக்கத்துடன் பார்த்தாள், வித்யா.

20



வெளியே 'சட சட'வென்று சத்தம். பலமாய் மழை பெய்கிறது.

ஜன்னல் வழியே 'சில்'லென்று காற்று வீசியது. காற்றுடன் கலந்து வந்த மண் வாசனை, அவனது நாசியினுள் நுழைந்தது. அறையெங்கும் இனிமையாகப் பரவியது.

அவன் அருகில் வந்தாள், வித்யா.

''இன்னுமா தயக்கம் கவுதம்.. ப்ளீஸ்... என்னைப் புரிந்து கொள்ளுங்களேன், கவுதம்...''

கண்களில் நீர் பெருக அவள் சொன்னதும் துடித்துப் போனான், கவுதம்.

''என் இதயமும் சதையால் ஆனதுதான், வித்யா... இரும்பினால் ஆனது இல்லை. நான் செய்திருக்கும் சத்தியம்... உனக்குக் கொடுத்திருக்கும் வாக்கு என்னைக் கட்டி வைத்திருக்கிறது.''

''வாக்கா... புரியவில்லையே?''

''நினைவில்லையா?''

யோசித்தவள், உதட்டைப் பிதுக்கினாள், ''ஊகூம்...''

''நீயாக என்னை ஏற்கும் வரை உன்னைத் தொட மாட்டேன் என்ற சத்தியம்... எப்படி மீறுவேன்?''

அவளுக்குப் புரிந்தது. குறும்புப் புன்னகையுடன் அவனை நெருங்கி நின்றாள்... அவன் தோளில் சாய்ந்தாள்.

பூச்செண்டு போல அவளது மென்மையான மேனி தன் மீது பட்டதும் அவனுள் மின்சாரம் பாய்ந்தது. ரோஜா மாலை போல அவளது கரங்கள் பின்னி, அவனது கழுத்தில் விழுந்தன.

அவளது இயற்கை மணமும் செயற்கை நறுமணமும் கலந்து அவனைக் கிறங்க வைத்தது.



அவனது பெருமூச்சு சூடாய்ப்பட்டது.

முகத்தை நிமிர்த்தி, அவனைப் பார்த்தாள்.

''போதுமா கவுதம்... நானே வந்து உங்களைத் தொட்டு அணைத்துவிட்டேன்... இன்னும் என்னவாம்?'' சிணுங்குவது போல அவள் சொன்னாள்.

''ஊகூம்... இது போதாது... இன்னும்...''

அவளது முகம் சிவந்தது. ''இன்னுமா...?''

அவனது இதயத்தின் 'லப்டப்' சத்தம் தெளிவாகக் கேட்டது. அதற்கு சுருதியாக அவளது இதய ஒலியும்!

''என்ன... பதிலே இல்லை, வித்யா?'' பரிகாசத்துடன் கேட்டான்.

அவள், பார்வையைத் தாழ்த்தினாள்...

''எல்லாவற்றிலும் 'பெண்கள் முதலில்' என்று சொல்கிறார்களே... இதற்கு இல்லையா?''

''அதுதான் வந்து ஆசையாய் அணைத்தாயிற்றே... போதாதா?''

''நான் சொல்வது இதை...'' என்று தன் உதடுகளைத் தொட்டுக் காட்டினான்...

அவள் வெட்கத்துடன் பார்க்க ''இரு... என் காதலை வெளிக்காட்டி உன்னைத் திணற வைக்கிறேன் பார்'' என்று அவளை இறுக அணைத்துக் கொண்டான்.

அந்த அணைப்பின் தாக்கத்தில் தன் ஒவ்வொரு அணுவும் அதிர்வதை அவளால் உணர முடிந்தது.

''அய்யோ... என்னால் மூச்சுவிட முடியவில்லை'' திணறினாள்.

''என் அன்பில் பாதியைத்தான் காட்டி இருக்கேன். அதற்குள் முடியவில்லையா... சரிதான்.''

''பாதியா... அம்மாடி! இனி என்னால் தாங்க முடியாது.''

''பின்னே... இரண்டு ஆண்டாய் காத்திருந்த காதல் ஆயிற்றே... சும்மாவா?''

''பழைய நினைவுகள் எதுவும் வேண்டாம்... அந்தக் கசப்பான நினைவுகளை இனி நினைக்கவே கூடாது.''

''இப்ப என்ன.... நீயும் நானும் இப்போதுதான் சந்தித்திருக்கிறோம்... கண்டதும் காதல் மலர்ந்து திருமணம் முடிந்து விட்டது. இனி முதலிரவு. அப்படி நினைத்து மகிழ்ச்சியாக வாழ்க்கையைத் தொடங்குவோம், வித்யா...''

''அப்போ நாம புதுமணத் தம்பதிகள்... தேனிலவுக்கு...''

''லண்டனுக்கே போகலாம்.''

''அவளது கண்களில் சம்மதமும், முகத்தில் புன்னகையும் மலர்ந்தன.

''இனி உன் முகத்தில் கவலை ரேகையோ, கண்களில் வேதனைக் கீற்றுகளோ தெரியக்கூடாது... என் வித்யா எப்போதும் இப்படி மலர்ந்த முகத்துடன் இருப்பதைத்தான் நான் பார்க்க வேண்டும்.''

அவனது பரவச வார்த்தைகளில் நெகிழ்ந்து, உருகினாள், வித்யா.

'இந்த அன்பையா உதாசீனப்படுத்தி ஒதுக்கினேன்?'

தனக்காக... தன் மகிழ்ச்சிக்காக எதையும் செய்யக் காத்திருக்கும் நல்ல கணவனைத் தனக்கு அளித்த தெய்வத்துக்கு மனதுக்குள் மீண்டும் மீண்டும் நன்றி சொன்னாள்.. இதயம் கனத்தால் மட்டுமல்ல... கனிந்தாலும் கண்களில் நீர் கசியும். அவளுக்குள் இப்போது கண்ணீர்.

''கவுதம்...''



''மூச்... இனி இப்போது பேசக்கூடாது... பேச வேண்டிய நேரம் முடிந்து விட்டது.''

குனிந்தான்... முத்தமிட்டான். அவள் கண்களை மூடிக் கொண்டாள்.

முத்தமிட்ட அவன் உதடுகளில் சூடாய் ஈரம் பட்டது. பதறினான், அவன். ''வித்யா...'' என்றான்.

அவள் சிரித்தாள். ''இந்தக் கண்ணீருக்கு மகிழ்ச்சி என்று அர்த்தம்.''

''இல்லை வித்யா... இனி உன் விழிகளில் எதற்காகவும் கண்ணீர் வரக்கூடாது. இரு... துடைத்து விடுகிறேன்'' அவன் சொல்ல...

தன் கைக்குட்டையை நீட்டினாள், வித்யா. ''வேண்டாம்... என்னிடம் இதைவிட மென்மையான கைக்குட்டை இருக்கிறது'' என்றவன், நிதானமாய் துடைத்தான்... தன் உதடுகளால்! மறுபடியும்... மறுபடியும்... ஒற்றியெடுத்தான்.

வித்யா கண்களை மூடி, அதை ரசித்தாள். வெளியில் அடைமழை! பிரவாகமாய் பெய்தது. அந்த மழையில் நிலமகள் சிலிர்த்துப் போனாள்.

இங்கே... வித்யாவும்தான்! கணவனின் அன்பு மழையில் உள்ளமும் உடலும் சிலிர்த்து பூங்கொடியாய் அவனுடன் இணைந்து நின்றாள்.

இனி, பொன்மயமாய் மலரப் போகும் உறுதியுடன்... பூவாய் சிரிக்கப் போகும் ஆனந்தத்துடன்... தேனாய் இனிக்கப் போகும் மகிழ்ச்சியுடன் நேரம், மெல்ல மெல்ல நகர்ந்தது.

அந்த இளம் தம்பதிகளைக் கடக்க முடியாமல் தத் தளித்தது. மாலைக் காற்று...! இல்லை, மழைக்காற்று..!

# நாளை வா நிலா

## 1

**மா**விலைத் தோரணமும், மலர் அலங்காரமும் கொண்டு அந்த கல்யாணச் சத்திரம் களையுடன் விளங்கியது.

மணமகள் தேவிகா... மணமகன் ஆனந்தன்... மலர் அலங்காரத்தில் புதுமணமக்களின் பெயர்கள் சிரித்தன.

கல்யாண வைபவங்களில் மட்டுமே சந்திக்க முடிகின்ற உறவினர்கள் கிடைத்த இரண்டொரு நாட்களையும் வீணாக்காமல் சளசளவென்று பேசிக் கொண்டிருந்தனர்.

மணமேடையும் தேர் போல அலங்கரிக்கப்பட்டு இருந்தது. மணமகளின் வரவுக்காக மணமேடை காத்துக் கொண் டிருந்தது.

மணமகள் தேவிகா அறையினுள் நெளிந்து கொண்டு இருந்தாள். அவளுடைய பெரிம்மாவின் பெண் சுமதி அவளுக்குச் சேலையை அணிவித்துக் கொண்டிருந்தாள்.



''நெளியாதடீ.... பாரு... கொசுவம் வரவில்லை... இப்படியே தாமதம் செய்தால் ஆனந்தன் இங்கேயே வந்து தாலிகட்டிவிடுவார்'' என்று கேலியாய் சொன்னாள்.

''கூசுதக்கா... ''

''கூசுதா...? ஆமாம்... நான் தொட்டால் கூசத்தான் செய்யும்... உன் அவர் தொடுவார் பாரு... அப்போ...''

''அய்யே... என்னக்கா... '' வெட்கத்தில் முகம் சிவந்து போனாள் தேவிகா.

''அட... பொண்ணுக்கு வெட்கத்தைப் பாரு... உம்... பார்க்கலாம்.... இன்னும் எத்தனை நாளைக்கு என்று...'' பதிலுக்குப் பரிகாசம் செய்தாள் சுமதி.

''போக்கா...'' இன்னும் நாணிக்கோணிக் கொண்டவளை சிறு தட்டு தட்டி சேலையின் தலைப்பை சரிபண்ணினாள்.

''அலங்காரம் ஆச்சாடீ... சீக்கிரம் அழைத்துவா..'' சுமதியின் தாய் வந்து அவசரப்படுத்திவிட்டுச் சென்றாள்.

தயாராய் இருந்த ரோஜா மாலையை தேவிகாவின் கழுத்தில் போட்டுவிட்டு அவளை அப்படியும் இப்படியு மாய் திருப்பிப் பார்த்து அவளது அழகை ரசித்தவள் தன் கண்ணிலிருந்த மையைத் தொட்டு தேவிகாவின் கன் னத்தில் சிறு பொட்டிட்டாள்.

''ம்ம்... இப்போ போகலாம் வா...''

அவசரமாய் நடக்க ஆரம்பித்தவளை நிறுத்தி, ''ஏய்... நீ மணப்பெண்ணாக்கும். அழகாய். ஒயிலாய், நிதானமாய் நடந்து செல்லணும்.. ஓடற ஓட்டத்தைப் பார்த்தால் பறந்து போய் ஆனந்தனிடம் 'ம்ம்... தாலியைக் கட்டுங்கள்' என்று

கழுத்தை நீட்டுவாய் போலிருக்கே... இன்னிக்கு ஒரு நாளம்மா... எங்கப் பேச்சுக்கும் கட்டுப்பட்டு இருக்கணும். நாளையிலிருந்து நாங்கள் எல்லோரும் யாரோ... என் புருஷன்தான் எனக்கு மட்டும்தான் என்று பாட ஆரம் பித்துவிடுவாய்...''

சுமதியின் கேலிப் பேச்சை ரசித்துக் கொண்டே தேவிகா நடந்தாள்.

நடக்க நடக்க மணமேடை தள்ளிச் செல்கிறதோ என்று அவளுக்குத் தோன்றியது.

பின்னலிடும் கால்களைச் சிரமப்பட்டு பிரித்து எட்டு வைத்தாள்.

அனைவரும் தன்னையே உற்றுப் பார்த்துக் கொண் டிருப்பது அவளுக்கு என்னவோ செய்தது.

திருமணம் என்றால் சும்மாவா?..? அந்த நிகழ்ச்சியின் நாயகி அவள் அல்லவா?

பார்வை அம்புகளின் தாக்குதல் அவளை நிலை குலையச் செய்தாலும் சுமதியின் கைத்தாங்கலில் சமாளித்து நடந்து வந்தாள்.

ஒருவழியாய் மணமேடையை அடைந்து வலமாய் சுற்றி வந்து மணைமீது அமர்ந்ததும் 'அப்பாடா?' என்று இருந்தது.

பக்கத்தில் மணமகன் கோலத்தில்... பட்டு வேட்டி பட்டு சட்டையில் ஆனந்தன் கம்பீரமாய்த் தெரிந்தான்.

அவனது முகத்தில் என்ன உணர்ச்சி... என்ன பாவம் இழையோடி இருக்கும்... சந்தோஷத்தின் அறிகுறியா?



இல்லை பயத்துடன் கூடிய பரபரப்பா... தன்னைப் போலவே...

ஓரக்கண்ணால் பார்க்கவும் வெட்கம்... நிமிர்ந்து எங்கே அவனைப் பார்ப்பது?

சுமதி இடையை நிமிண்டினாள்.

''இன்னும் தள்ளி உட்காரேன்... இல்லாவிட்டால் மாப் பிள்ளைக்கு ஏமாற்றம்!''

இன்னும் தலையைக் குனிந்து கொண்டு நகர்ந்தாள். சடங்குகள் வரிசைக் கிரமத்தில் நடந்தன.

கெட்டி மேளத்தின் முழக்கத்தில் நாதசுவர ஓசையுடன் மலர்களும் மஞ்சள் அரிசியும் மழையாய் மாற ஆனந்தன் தேவிகாவின் சங்குக் கழுத்தில் தாலியைக் கட்டினான்.

குனிந்த பார்வையில் தெரிந்த மஞ்சள் சரடும் அதில் அழகாய் மின்னும் தாலியும் கண்டு தேவிகா உள்ளமும் உடம்பும் சிலிர்த்துப் போனாள்.

தான் இனி ஆனந்தனின் மனைவி...அவனுக்கே உரிமை யானவள். நினைக்கவே நாக்கில்பட்ட வெல்லமாய் இனித்தது.

இதுவரைக்கும் குமாரி என்று அழைக்கப்பட்டவள் ஒரே ஒரு மஞ்சள் சரடினால் திருமதியாக்கப்பட்ட அதிசயம்... இனி கல்யாணமானவள் என்ற மதிப்பும் மரியாதையும் தனக்கு வரும்.

'சுமங்கலி' என்ற அந்தஸ்தும் தனக்கு வந்துவிட்டது. ஒரு தாலிக்கு எத்தனை மதிப்பு...?

தனக்கே இத்தனை கிறக்கமும் கிளுகிளுப்பும் என்றால் இதைக் கட்டியவனுக்கு..?

தன்னைப் போலவே அவனது உள்ளமும் துள்ளுமா? மனைவியாய் உரிமைகொண்ட பெருமையில் விம்முமா?

அவனது முகத்தை ஏறிட்டுப் பார்க்கக் கொள்ளை ஆசை தான். ஆனால் நாணம் தடுக்கிறதே.

நிமிர்ந்து பார்த்தால் தன் கண்கள் அவனது கண்களுடன் கலக்கும்... கலந்து என்ன பேசும்? அவனது மனதில் மானசீகமாய் ஒரு ஓட்டம்.

'என்னுடையவள் நீ...' அவன் பார்வை சொல்லும்.

'ஆமாம், நான் உங்களுக்கே சொந்தம்' பதிலாய் அவளது விழிகள்.

'இனி இந்த உலகில் உன்னைத்தவிர எனக்கு யாரும் இல்லை... கண்ணே...'

'எனக்கும் நீங்கள்தான் சகலமும்.... நீங்களே என் உயிர்.'

'இனி காலம் முழுவதும் இரு உடலில் ஒருயிர் என வாழ்வோம்.'

''என்னடி... இப்பவே மயங்கிப் போய்விட்டாயா... இந்த அட்சதையைப் பிடி... உன் அவர் தலையில் கொட்டு'' சுமதியின் குரல் அவளை விழிக்கச் செய்தது.

இருகைகளிலும் அட்சதையை அள்ளி, சிவந்த முகத்துடன் நிமிர்ந்து கொஞ்சமாய் எம்பி நின்று அவன் தலை மீது சொரிந்தாள்.

அவன் முகத்தை அப்போதுதான் பார்க்க முடிந்தது. பார்த்தவள் உள்ளம் அதிர்ந்துபோனாள். அவன் முகத்தில்



ஆனந்தத்தின் குறி இல்லையே... பதிலாய் முகம் இறுகிப் போய்... கண்கள் சிவந்து போய்... ஏதோ மாற்றம் தெரிந்தது.

ஏன்? ஏன்... கேள்விகள் மனதில் குடைந்தது. ஒரு கணம்தான். அடுத்து சுற்றியும் இருந்தவர்களின் கேளிப் பேச்சினில் தன்னை மறந்து போனாள்.

## 2

**வா**ழ்த்துக் கூற வருபவர்களுக்கெல்லாம் புன்னகைப் புரிந்து வாய் வலித்துப் போனது தேவிகாவிற்கு.

வரவேற்பு நடந்து கொண்டிருந்தது. காலையில் திருமணத்திற்கு வர இயலாதவர்கள் மாலை வரவேற்புக்கு வந்திருந்தனர்.

இருபக்கத்து உறவுகள்... நண்பர்... நண்பிகள்... அக்கம் பக்கத்தினர்... தெரிந்த முகங்கள்... பட்டியல் நீண்டிருந்தது.

தன் உறவினர்களையும் நண்பர்களையும் மனைவிக்கு அறிமுகம் செய்தான் ஆனந்தன்.

அவளும் தன் பக்கத்தினரை அறிமுகம் செய்து வைத்தாள்.

யாரோ வயதான ஒரு அம்மாள் 'அழகான... பொருத்தமான ஜோடிதான்'என்று புகழ்ந்துவிட்டுச் சென்றாள்.

அதைக் கேட்டு தேவிகா பக்கம் பார்வையை ஓட்டினான்....

அப்போதுதான் அவளை முழுக்கப் பார்த்தான். அவளது அழகு கண்டு திகைத்தான்.

கருநீலத்தில் சரிகை இழையோடிய காஞ்சிபுரம் பட்டுச் சேலையும் அதற்கு ஏற்ற சரிகைக்கரையிருக்கும் பட்டு ரவிக்கையும் அணிந்திருந்தாள். அழகுச் சிலையென நின்றிருந்தாள்.

அழகு நிலையத்திற்குச் சென்று மணமகளுக்கு என்று செய்யும் பிரத்தியேகமான அலங்காரத்தை செய்து கொண்டு வந்திருந்தாள்.

முகவடிவிற்கு ஏற்றதாய் தூக்கிப் போடப்பட்ட கொண்டை... அதில் சிறுசிறு வெண்ணிற முத்துக்கள் இரவு வானில் மின்னும் விண்மீன்களைப் போல... சின்னஞ்சிறு கிரீடம் சொருகப்பட்டு அவளை இளவரசியாய் காட்டியது.

அளவான முக ஒப்பனை. உடம்பில் அணிந்திருந்த நகைகள் அவளது முகப் பளபளப்பிற்கு போட்டிப் போட முயன்று தோற்றுப் போனது. அழகுப் பெட்டகமாய் தன்னருகில் நிற்கும் மனைவியை பார்த்தபோது கண்களில் பெருமிதம் தெரிந்தது. அதுவும் ஒரு வினாடிதான். உடனே அது மறைந்து சினம் குடியேறியது. தேவிகாவும் அதைக் கவனித்தாள். அவளுள் குழப்பம். திருமணத்திற்குமுன் இருந்த ஆனந்தன் வேறேயா? ஒரு நாளும் முகம் சுளிக்க வில்லையே...

ஏன் இப்போது இந்த மாற்றம்?

ஏதாவது திருமணத்தில் குறை கண்டானா? ஒருவேளை தன் வீட்டினர் மரியாதை காட்டத் தவறினாரா?

அப்படியும் தெரியவில்லையே.



அப்பாதான் பெருமையாய் வந்து தாயிடம் சொன்னாரே... அதுவும் நன்றாக நினைவிருக்கிறதே.

"மாப்பிள்ளை வீட்டார் அசந்து போய்விட்டார்கள். செல்லம். இந்த மாதிரி ஏற்பாடுகளை எந்த திருமணத்திலும் கண்டதில்லை. என்று வாய்க்கு வாய் பேச்சு..." என்றாரே

பின் எதில் குறை?

கேட்கவேண்டும்... தனிமையில்... முதலிரவில் நாசூக்காய் பேசித் தெரிந்து கொள்ள வேண்டும்... ஏதாவது இருந்தால் அதற்கு மன்னிப்பும் கேட்டுக் கொள்ள வேண்டும்.

அவளுள் தீர்மானம் உண்டானது.

வரிசையாய் வந்தவர்கள் அவர்களை வாழ்த்திவிட்டு, கையில் திருமணப் பரிசை வைத்துவிட்டுப் போட்டோ விற்கும், வீடியோவிற்கும் போஸ் கொடுத்துவிட்டு மேடை யிறங்கிய வண்ணம். இருந்தனர்.

ஒருவாறாய் கூட்டம் குறைந்து மணமக்கள் 'அப்பாடா' என்று அமர்ந்து கொண்டனர். ஒலிப்பெருக்கியிலிருந்து எஸ்.பி.பி. அவர்கள் காதல் கீதத்தைப் பாடி மனதை நெகிழ வைத்துக் கொண்டிருந்தார்.

புகைப்படக்காரரும் வீடியோ எடுப்பவரும் மணமக் களை விதவிதமாய் படம் எடுத்தனர். ஒருவழியாய் எல்லாம் முடிந்து மேடையை விட்டு இறங்கும்போது மணி ஒன்பதரை.

பட்டாளமாய் உறவினர்கள் சுற்றி நின்று கேலி செய்ய, ஒருவருக்கு ஒருவர் ஊட்டிவிட்டு சாப்பிட்டு முடித்தபோது மணி பத்து.

''நல்லா சாப்பிடுங்கள் இரண்டு பேரும். முதலிரவை நினைத்துக் கொண்டு கொறிக்கவேண்டாம்'' என்று குறும்புடன் யாரோ பேச 'கொல்' என்று சிரிப்பு அலை எழுந்தது.

தேவிகாவின் தந்தை அங்கு வந்தார். மாப்பிள்ளையின் காதில் கிசுகிசுத்தார்.

''மாப்பிள்ளை... சாந்தி முகூர்த்தம் சத்திரத்திலா... நம் வீட்டில் வைத்துக் கொள்ளலாமா?''

''எங்கும் வேண்டாம்... இன்றைக்கு வேண்டாம்'' அடங்கியக் குரலில் உறுதி தெறிக்க சொன்னான் ஆனந்தன்.

மாமனாருடன் காதால் கேட்டவர்களும் திகைத்தனர்.

முதலிரவு வேண்டாமா? இது என்ன பேத்தல்? தேவிகாவும் அதிர்ச்சியுடன் பார்த்தாள்.

அவளுக்கும் ஏமாற்றம்தான்... தனிமையில் அவனிடம் பேசணும். அவனுடைய கோபத்திற்குக் காரணம் அறிய வேண்டும் என்று நினைத்தாள்.

அதனால் மட்டுமா ஏமாற்றம்...?

இல்லை... இல்லை... யாரும் இல்லாத தனிமையில் தன்னிடம் அன்பாய் பேசுவான்.

'கண்ணே' என்று கனிமொழி பேசுவான். 'அன்பே' என்று அணைப்பான். 'உயிரே ' என்று உருகி நிற்பான். 'முத்தே' என்று முத்தமிடுவான். இதுபோல கற்பனைகள் செய்து வைத்திருந்தாள் பாவம்.

அத்தனையும் மண்ணைக் கவ்விய ஏமாற்றம்தான்.



''என்ன மாப்பிள்ளை... நீங்கள் சொல்லுவது...?'' பெற்றவர் வயிறு கலங்க கேட்டார்.

''இன்றைக்கு வேண்டாம் என்றேன். இந்த சடங்குகள்... சம்பிரதாயங்கள் எல்லாம் எதற்கு..? ஏற்கனவே கொடைக் கானலில் அறையை முன்பதிவு பண்ணிவிட்டேன். உங்களுக்கு மறுப்பு ஏதும் இல்லையே...''

வயிற்றைப் பிசைந்து எழுந்த கலக்கம் மறைய சொன்னார் பெரியவர். ''ச்சேச்சே... அதெல்லாம் ஏதும் இல்லை... உங்கள் விருப்பப்படியே நடக்கட்டும்'' என்று சமாளித்தாலும் உள்ளுக்குள் ஒரு குறைதான் என்று அவரது முகமே காட்டியது.

அங்கிருந்தவர்களில் யாரோ ஒருவர் ''மாமா... உங்கள் மாப்பிள்ளை புத்திசாலிதான். இங்கே நாமெல்லோரும் கரடிகளாய் இருப்போம் என்று தேவிகாவை அழைத்துக் கொண்டு ஓடுகிறார் பாருங்கள்.'' சமயம் பார்த்து பரிகசிக்க அங்கே இறுக்கம் தளர்ந்து சிரிப்பலை எழுந்தது.

''பயப்படவேண்டாம் மாப்பிள்ளை சார்... இனி தேவிகா முழுக்க முழுக்க உங்களுக்குத்தான். நாங்கள் அவளை பங்கு கேட்க மாட்டோம்... இனி நீங்கள் ஆயிற்று... உங்கள் மனைவி ஆயிற்று... நீங்கள் என்ன செய்தாலும் சரி...'' சுமதி குறும்புடன் கூறினாள்.

''அப்படியா... பாருங்களேன்.. இனி எப்படி அவளை ஆட்டி வைக்கப் போகிறேன் என்று...'' பதிலுக்குப் பயமுறுத்துவது போல் ஆனந்தன் சொல்ல...

''எப்படி... ஆட்ரா.. ராமா... அட்ரா... ராமான்னா!'' மறுபடியும் ஒரு கிண்டல் குரல்.

''அப்போ உங்க வீட்டுப் பெண் குரங்குன்னு ஒப்புக் கொள்கிறார்.. ஆனந்தன் விடாமல் சொன்னான்.

''பரவாயில்லையே... ஏதும் தெரியாத அப்பாவி போல இருந்தவர். தேவிகாவின் கழுத்தில் தாலிக்கட்டியவுடன் வாய்ப்பேச்சு மன்னராகி விட்டாரே... அதிசயம்தான்.'' சிரிப்பும் பரிகாசமுமாய் வார்த்தையாடல் நடந்து ஒரு விதமாய் முடிந்தபோது மணி பதினொன்று.

மாமானாரிடம் காலையில் கொடைக்கானல் புறப்பட வேண்டும் என்று சொல்லிவிட்டு சென்றான் ஆனந்தன். அவன் செல்வதை வெறித்து விட்டு தன் அறையை நோக்கி சென்றபோது தேவிகாவின் மனம் கனத்துப் போயிருந்தது. தன் உறவினர்கள் இருவரையும் இணைத்து கேலி செய்ததில் கிளுகிளுப்பு ஏற்பட்டது நிஜம். தனிமையில் அந்த கிளு கிளுப்புமறைந்து போய் அதற்குப் பதிலாய் ஏதோ இனம் புரியாத பயம் கவ்வியது.

அது எதனால் என்று அவளுக்கே புரியவில்லை.

## 3

கொடைக்கானல்!

குளுகுளு மலை...

இறைவனால் உருவாக்கப்பட்ட அழகான இடங்கள் எத்தனையோ...

தேனிலவு காணவரும் இளம் தம்பதிகளுக்கென்று பார்த்துப் படைத்த இடமோ இது...?



பச்சைபசேல் என்று பார்க்கும் இடங்களில் எல்லாம் மரகதக் கம்பளமாய் பசுமையை விரித்துப் போட்டு ஆசை யாய் கரங்களை நீட்டி வரவேற்கும் இயற்கை அழகு...

'உங்களுக்காகவே எல்லாம்' என்று புன்னகைப்பூக்கும் இயற்கை அரசி.

கொல்லென்று மலர்களைக் கொத்துக்களாய் மலர்ந்து மணம் வீசச்செய்து மனதை கிளுக்கச் செய்கிறாள்.

மரங்களிலிருந்து விழும் பனித்துளிகள், பன்னீர்த் துளிகள் என புது மணமக்களை சிலிர்க்கச் செய்ய... வண்டுகளை வசியம் செய்யும் சிறுதேன் காட்டி நீங்களும் இப்படி இருங்களேன் என்று குறும்பு காட்டும் அழகு தனிதான்.

சிகரத்தைத் தொட்டுச் செல்லும் பஞ்ச மேகங்கள் ஏதோ வாழ்வின் ரகசியத்தை அவசரமாய் சொல்லிவிட்டு நகர்வது போல் விரைந்து கொண்டு இருந்தன.

அதுவெல்லாம் சரிதான்.

இத்தனை அழகெல்லாம் கொட்டிக் கிடந்தாலும் இவற்றை எல்லாம் கவனிக்கும் மனநிலையிலா இருக்கிறார்கள் அந்த புது இணைகள்.

அவர்களது உலகமே தனிதான். அந்த அழகிய மவுன உலகத்தில் வேறு எந்த உயிரும் இல்லை போல்தான்.

கணவன் கண்களுக்கு மனைவி மட்டும்... மனைவியின் க்ண்களுக்கு கணவன் மட்டுமே...

பின்னே...?

அவர்களுக்காக பூத்து... பொலிந்து காத்திருக்கும் இயற்கை அழகியை அணு அணுவாய் ரசிப்பது யார்..? மற்றவர்கள் தான்.

ஏதோ ஒரு மயக்க உலகத்தில் கால் கீழே தொடாமல் மிதந்து கொண்டிருக்கும் தேனிலவும் சிட்டுகளின் நிலை வேறுதான்.

புதுவாழ்க்கையைத் துவங்கும் தம்பதியருக்குத் தனிமை தேவை... யாருடைய குறுக்கீடும்... இடைஞ்சலும் இல்லாத தனிமை... ஒருவரையொருவர் புரிந்து கொள்வது அந்தத் தனிமையில்தான்... அதைத்தான் நாகரிகமாய் அழகாய் தேனிலவு என்று பெயரிட்டனர்.

தேனிலவு ஜோடியென்றால் யார் நெருங்க முடியும்? அவர்களைச் சுற்றி ஒரு வட்டமேயல்லவா சுற்றும். அதனுள் ஒதுங்கிக் கொள்வார்களே...

அதற்குத்தான் தன் கணவனும் கசகசசென்று பட்டாள மாய் ஒட்டிக் கொள்ளும் உறவினர்களை வெட்டிக் கொள்ள இங்கே வந்து விட்டாரோ... ஆள் பெரிய ஆள்தான்... அமுக்கமான... அழுத்தமான மனிதர்தான்.

சில்லென்ற காற்று மேனியைத் தழுவ .. நடுங்கினாள். ஸ்வெட்டரை இழுத்துவிட்டுக் கொண்டாள்.

அவன் தன் தோளில் கைப்போட்டு அணைத்தால் கதகதப்பாய் இருக்குமே... நினைவே உடலில் சூடாய் பரவியது.

ஆனால்... விரலாலும் தன்னைத் தொடவில்லையே... தள்ளிச் செல்கிறார்.

கூச்சத்தினாலோ... ஒரு ஆணுக்குக் கூச்சமா? அதுவும் இந்தக் காலத்திலா? பெண்களே வெட்கம் விட்டு ஆண்



மேல புரளும் போது... இப்படியும் ஒருவர் இருக்கவும் முடியுமா?

ஒருகணம் வியந்தாள். மறுகணம் ச்சே... இருக்காது... அப்படிப்பட்டவர் என்றால் அவரே என்னிடம் வந்து பேசுவாரா... பேசிப் பழகுவாரா... பழகி மணந்து கொள்வாரா? திருமணக் களைப்பும், மனச்சோர்வும் அவரை ஒதுங்கச் செய்திருக்கலாம்... மனதை சமாதானம் செய்து கொண்டாள்.

ஆனந்தனைக் கணவனாய் அடைய மிகவும் கொடுத்து வைத்திருக்க வேண்டும்.

அழகான கணவன்.... படித்த அறிவாளி... அழகும் அறிவும் சேர்ந்திருப்பது பாலுடன் தேன் கலந்தது போல அல்லவா...

ஆண்மகனுக்குரிய கம்பீரத்துடன் தன்னுடன் நடக்கும் அவனைக் கடைக்கண்ணால் பார்த்தாள்.

இவன் தன் கணவன்!

பெருமையுடன் தன் தாலியை எடுத்து அழகு பார்த்து விட்டு ரவிக்கையினுள் செருகினாள்.

தடிமனான அந்த புத்தம்புது மஞ்சள் சரடு பளிச்சென்று தெரிந்தது.

அதுவும், கைகளில் அடுக்கியிருக்கும் வளையல்களும் விரல்களில் செக்கச்சிவந்து காணும் மருதாணிப் பூச்சும் புதுமெருகுடன் பளிச்சிடும் மெட்டியும் மேனியில் தெரியும் மஞ்சள் மினுமினுப்பும் அவளைப் புதுப்பெண் என்று வழிமொழிந்தன. அத்தனையும் ஒரு சாதாரணப் பெண்ணையே அழகியாய் காட்டுமே... உண்மையிலே

எழில் தேவதையான தேவிகாவைப் பற்றிச் சொல்லவே வேண்டாம்.

இயற்கையிலே புதுமையான அவள் இன்னும் அழகும் வனப்பும் கூடி அனைவரின் பார்வையையும் சுண்டி இழுத்தாள்.

ஆனால் அவள் வேண்டியது கணவனின் பார்வை யல்லவா... அவன் பார்வை தன்னைக் குறுகுறுவென்று நோக்காதா... அவன் தன்னைக் கண்களால் அள்ளிப் பருகமாட்டானா? தன் அழகைப் பாராட்டமாட்டானா? ஏங்கினாள் தேவிகா.

அவன் கண்களில் தாபமோ... அவனது உடலில் பரபரப்போ இல்லாததுதான் ஏமாற்றம்.

தாலிசரடைக் கட்டும்போது கூட எங்கே கைபட்டுவிடப் போகிறதோ என்று எச்சரிக்கையுடன் கட்டுவது போல இருந்தது.

அய்யர், தீவலம் வரும்போது கரத்தைப் பிடிக்கச் சொல்லும் போது அவன் தயங்கியவாறு பற்றியதும் கண்டாள்.

அவளுள் வியப்பு... ஏன்?

கதைகளில் படித்திருக்கிறாள்... சினிமாக்களில் பார்த் திருக்கிறாள்.

முதன் முதலாய் மணமகளைத் தொடும் மாப்பிள்ளை துடிக்கும் உணர்வுடன் இருப்பதை... விரல்கள் அழுத் தியும்... குறும்புடன் நெருடியும்... இறுக்கிப் பிடித்தும்...



எதுவும் இல்லையே..? ஏதோ பட்டும் படாமலும் பிடித்தது மட்டுமல்ல... பிடித்த கரமும் பனிப்பாறையாய் 'சில்' என்று இருந்தது.

எதற்கும் ஒரு முடிவு தெரிந்தே ஆகும்.

மாலை மயங்கும் வேளை...இரவு நெருங்கிவந்த வண்ணம் இருந்தது. அதை நினைக்கும் போதே மனதில் ஏதோ சொல்லத் தெரியாத உணர்வு. பயமா... சந்தோஷமா... வெட்கமா... பரபரப்பா... இனம் சொல்லத் தெரியாத புதிய கலவை உணர்ச்சி...

''ஐஸ்கிரீம் வேண்டுமா தேவிகா...'' கணவனின் குரலில் திரும்பினாள்.

''அய்யோ... இந்தக் குளிரில் இதா..? வேண்டவே வேண்டாம்.''

அவன் ருசித்து சாப்பிட்டான்.

எப்படி முடிகிறது. வியப்புடன் பார்த்தாள்.

அவன் சின்னதாய் முறுவல் சிந்தினான். அது அவன் முகத்தின் இறுக்கத்தைத் தளர்த்தியது. இப்படியே சிரித்த முகமாய் இருக்கக் கூடாதா? அதென்ன உம்மண்ணா மூஞ்சி...

அதுவும் அழகான இடத்தில் அழகான இளம் மனைவி உடன் இருக்கிறபோது...!

''என்ன அப்படி வெறித்துப் பார்க்கிறாய்... பற்களா... இல்லை கற்களான்னு யோசிக்கிறாயா? எல்லாம் பழம்தான். ஊட்டி குளிரிலும் பச்சைத் தண்ணீரில் குளியல் செய்வேன் தெரியுமா?''

இன்னும் என்னவெல்லாம்...?

ஏதோ புதியதாய் அவனைப் பார்ப்பது போல அல்லவா தோன்றுகிறது...

அவனைப் பற்றி முழுவதுமாய் அவளுக்குத் தெரியவில்லை. ஆறு மாதப் பழக்கம் என்றால் யார் நம்புவார்கள்..? விசித்திரம்தான்!

ஆறு மாத காலத்தில் அவனைப் பற்றித் தெரிந்து கொண்டது இவ்வளவுதான்.

அவனுக்குத் தாயும் இல்லை. தந்தையும் இல்லை... அனாதை என்றும் சொல்வதற்கில்லை. ஏனென்றால் சொந்தம் என்று சொல்லிக் கொள்ள தாய் மாமன், சித்தப்பா, சித்தி அனைவரும் உண்டு.

எடுத்து வளர்த்தது எல்லாமே தாய்மாமன்தான். சிறகு முளைத்தவுடன் தனியிடம் பார்த்துக் கொண்டு விட்டான்.

ஒரு நல்ல 'கம்பெனி'யில் கைநிறைய சம்பளம்.

அதற்குமேல் அவளுக்குத் தெரியாது... அவனது விருப்புகள்... வெறுப்புகள்... பழக்க வழக்கங்கள்... இலட்சியங்கள்... ஊகூம்... எதுவும் தெரியாது...

''ஏதாவது சாப்பிடுகிறாயா என்ன?''

மறுபடியும் அவன் குரலில் அவளுக்கு விழிப்பு. ஓட்டலில் சமோசாவும், கட்லட்டும் உண்டுவிட்டு தேவிகா மட்டுமே காபி அருந்தியுடன் தம் இருப்பிடத்திற்கு வந்தனர்.

பெரிய ஓட்டல் அது; பெரும்பாலும் தேனிலவுக்கு வரும் தம்பதியினர் தங்கும் ஓட்டல்.



வரவேற்பு பகுதியில் சாவி பெறச் சென்ற போது அங்கிருந்த பெண் புன்னகைத்துவிட்டு அறை சாவியைத் தந்தாள்.

இருவரும் திரும்பியபோது ''மன்னிக்கவும்... உங்களுக்கு 'கூரியரில்' ஏதோ அன்பளிப்பு வந்திருக்கிறது... இந்தாருங்கள்'' என்று கூறி ஒரு அழகான... பளபளக்கும் உறையை உடுத்தியிருக்கும் சின்ன பெட்டியைத் தந்தாள்.

'இங்கேயுமா... யாராக இருக்கும்..?' என்று வியப்பு காட்டி அதைப் பெற்றுக் கொண்ட ஆனந்தன் அதை தன் மனைவியின் கையில் வைத்தான்.

''பிடி தேவிகா... அறைக்குச் சென்று பார்க்கலாம்'' என்று சொல்லி முன் நடந்தவனை உள்ளம் துள்ளத் தொடர்ந்தாள் தேவிகா.

பாவம்... உள்ளே அவளது வாழ்க்கையே உலை வைக்கப் போகும் அணுகுண்டு இருக்கிறது என்பது அறியாது மனதில் குதூகலம் கொப்பளிக்க மாடி ஏறினாள்.

## 4

சில்லென்று சன்னல் வழியே வந்து குளிர் காற்று அறைக்குள் பரவி நின்றது.

கண்ணாடி முன் அமர்ந்து ஈரத்தலையைத் துவட்டிக் கொண்டிருந்த தேவிகாவிற்குக் குளிர் தாளாமல் 'உஸ்ஸ்...' என்றாள். இரண்டு உள்ளங்கைகளையும் தேய்த்து சூடுபண்ணி கன்னங்களில் ஒற்றிக் கொண்டாள்.

காதுகளில் ஜிமிக்கி அழகாய் நடனமிட்டது.

கணவன் எதையோ தேடுவது கண்டு திரும்பி ''என்ன தேடுகிறீர்கள்?'' என்று வினவினாள்.

''சோப்பு... இதோ கிடைத்தது'' கையில் துவாலையுடன் குளியலுக்குப் புறப்பட்டான் அவன். அவளுக்கு ஏதோ புதுமையாய் தெரிந்தது.

ஒரே அறையில் அவளும் அவனும்... தாலி கட்டிய வுடன் அதற்கு உரிமை... இதையே திருமணத்திற்கு முன் செய்ய முடியுமா... யாராவது ஒப்புவார்களா... மனம் ஒப்புமா..?

நேற்று வரை அந்நியன்... இன்று உறவு... பிரியா உறவு.. வாழ்வும் ஒரு விசித்திரம்தான்... பெற்று எடுத்தவர்களும், ஒட்டிப் பிறந்தவர்களும் அந்நியராகிப்போய்... அந்நிய னாய் இருந்தவன் உயிரில் கலந்த உறவாகி... விந்தை!

குளியலுக்குப் போகுமுன் ஆனந்தன் மேசை மீது கிடந்த அந்த புதுப் பரிசைக் கண்டு ''என்ன தேவிகா... பிரித்துப் பார்க்காமல் வைத்திருக்கிறாயே... திறந்து பாரேன்... நம்மைத் துரத்திக் கொண்டு வந்திருப்பது ஆயிற்றே'' என்று சொல்லிவிட்டு சென்றான்.

அப்போது நினைவுக்கு வந்தவளாய் ''ஒரு நிமிடம்... கூந்தலை முடித்துக் கொண்டு வருகிறேன்'' என்று சொன்னாள்.

''அப்படியே செய்... நானும் குளித்து விட்டு வருகிறேன்'' என்றவன் குளியலறைக்குள் நுழைந்தான்.

சிறிது உலர்ந்த கூந்தலை தளர முடிந்துக் கொண்டு அழகான அந்த அன்பளிப்பைத் திறந்தாள்.



கண்களைக் கவரும் பொன்னிற உறையை கிழிக்க மனம் வராமல் நிதானமாய் பார்த்து பிரித்தாள். என்ன அழகாய் செய்திருக்கிறார்கள். யாரோ? அவனா? அவளா...? கலையுணர்வு உடையவர் போலிருக்கிறது.

கண்கள் மேல் ஒட்டியிருந்த சிறு சீட்டு மீது பட்டது.

'தேனிலவு கொண்டாட இருக்கும் புதுமணத் தம்பதியர் களான ஆனந்தன்... தேவிகா ஜோடிக்கு வாழ்த்துக்களுடன் இந்த பரிசு... இனிய ஆரம்பமாய் இருக்கட்டும்.'

அவ்வரிகளைப் படித்தபோது மனதினுள் தென்றல் வீசியது போல ஒரு சுகம்... ஒரு கிளுகிளுப்பு...

ஆனந்தன்...தேவிகா... திருமதி ஆனந்தன்... திரும்பத் திரும்ப உச்சரித்து மகிழ்ந்து போனாள்... நினைவுகள் நெஞ்சில் இனித்தன.

உள்ளே என்னவாய் இருக்கும்..?

இவ்வளவு நேர்த்தியாய்... ஆர்வமாய் கலையுணர்வு மிளிர செய்தவனின் அன்பளிப்பும் அழகாய், ரசிக்கத் தக்கதாய்தான் இருக்கும்.

அந்த எதிர்பார்ப்பில் ஆவலுடன் பிரித்தாள். பொன்னிற உறைக்கு அடுத்து இன்னொரு உறை. போர்த்தியிருந்த அந்த உறையையும் பொறுமையுடன் பிரித்தாள்.

அதை அடுத்து மஞ்சள் நிறத்தில் உறை!!

இது என்ன... ஏழு கடலைத் தாண்டி... ஏழு மலையைத் தாண்டியது போல் ஒரு விளையாட்டு...

ஆனாலும் அவளுள் குறுகுறுப்பு... இத்தனைக்கும் முடிவில் ஏதாவது பேபி பொம்மையோ... அல்லது 'பூப்சி' பால் பாட்டிலோ இருக்கப்போகிறது...

ஆமாம் அப்படித்தான் இருக்கும்... எத்தனையோ திருமணங்களில் குறும்புக்காரர்களின் செயல் இது...

இங்கு தேனிலவு அறைக்கே வந்து விட்டது. முகம் அந்த நினைவில் ரோஜா வர்ணம் கொள்ள அவள் பிரித்துக் கொண்டிருந்தாள்.

'கிர்ரிங்' அழைப்பு மணி ஒலித்தது. போய் கதவைத் திறந்தாள்.

ஓட்டல் பணியாள் இரவு உணவை 'டிரஸி'யில் தள்ளிக் கொண்டு உள்ளே வர அவனுக்கு வழிவிட்டு வந்தாள்.

பணியாள் சென்றபின்பு கதவை மூடிவிட்டு திரும்பும் போது ஆனந்தன் குளித்துவிட்டு வந்திருந்தான்.

பூத்துவாலையால் தலையைத் துவட்டிக் கொண்டு அவன் கேட்டான் ''யாராம் அனுப்பியது?''

''இன்னும் பார்க்கவில்லை... எத்தனை உறைகள் பாருங்களேன்...''

ஒருவழியாய் எட்டிப் பார்த்த சின்னஞ்சிறு அட்டைப் பெட்டியினை ஆவலுடன் கையில் எடுத்தாள்.

அதன் மேல் 'புன்னகையுடன் திறக்கவும்' என்று எழுதி யிருந்தது.

நல்ல குறும்புதான்... அனுப்பியது யார் தெரிய வில்லையே... பெட்டியைச் சுற்றித் தேடிப் பார்த்தாள்...

ம்கூம்... பெயர்... விலாசம் ஏதும் கிடையாது.

முகவரி தொலைத்த திருமணப் பரிசு... இல்லை...

முகவரி அனுப்பாத முகமூடி போட்டவன்...



யாரோ... ஏன்? அனுப்பிய பரிசு வெட்கத்திற்குரியதா என்ன? இல்லை... ஆச்சரியப்படுத்த வேண்டும் என்றா...? மண்டையில் குடைச்சல் வந்து...யார் என்று குழம்பிப் பிறகு சொல்லலாம் என்றா?

சிறு குழப்பத்தின் ஊடே 'பின்'னை நீக்கி அதைத் திறந் தாள். அதனுள் ஒரு நீண்ட உறை. பொறுமையே போய் விடும் போலத் தோன்றியது... எடுத்து வீசி எறிந்து விடலாமா என்ற எரிச்சலும். ஏற்பட்டது. இத்தனையும் பிரித்த பின்பு இறுதியைத் தொட வேண்டும் என்ற ஆர்வத்தினால் அந்த உறையைப் பிரித்தாள்.

காகிதங்கள் கண்ணில் பட்டன...

ஓ...! காசோலைதான்!

எடுத்து பிரித்தாள்... அது காசோலையில்லை. காதல் கடிதங்கள்

அவள் கைப்பட தன் முன்னாள் காதலனுக்கு எழுதிய காதல் கடிதங்கள்! அதன் பிரதிகள்! இமைக்காது நின்றாள். காலுக்கு கீழே பூமி பிளந்துவிட்டதோ...! அதனுள் வீழ்ந்து கொண்டிருப்பது போல் எழுந்த உணர்வில் மெய்நடுங் கியது.

''என்ன தேவிகா...? சாப்பிடலாமா?'' என்று அருகில் வந்த ஆனந்தன், அவள் முகம் வெளுத்திருப்பது கண்டு கண்களை விரித்தான்.

தேவிகா தன் காதில் ஏதுமே விழாதது போல பனிச் சிலையாய் உறைந்து நின்றிருந்தாள்!

# 5

சிறகு முளைத்த பறவை வானத்தில் ஆனந்தமாய் பறக்க ஆரம்பித்த வேளையில் எதிர்பாராமல் அந்த சிறகுகள் பிய்ந்து விழுந்தால் அந்த பறவையின் கதி என்ன ஆகுமோ அந்த நிலையில் அப்போது இருந்தாள் தேவிகா.

ஊசி முற்களைப் போலக் குத்திய பழைய நினைவுகளை ஒருவாறாய் துடைத்துப் போட்டுவிட்டு இனிப் புதுவாழ்வு காண்போம் என்று ஆசைக் கனவுகளைக் கண்டு கொண்டிருந்தவளுக்கு பூகம்பம் வெடித்தது போல இருந்தது... வியர்த்து வெலவெலத்து நின்றாள்.

யார் அவன்...? இறந்து போனவனின் நிழலில் இருந்து வதைப்பவன் யாராக இருக்க முடியும்? அவன் கைக்கு இந்த கடிதங்கள் வந்தது எப்படி? தான் முட்டாள்... எழுதிய கடிதங்களை அப்போதே திரும்பப் பெறாமல் போனது முட்டாள்தனம்தான். அவனே போய்விட்டான்... அவனுடன் எல்லாமே அழிந்து போய்விட்டது என்று இருந்தது. மகாமதியீனம். இனி வாழ்வில் வசந்தம் என்று நினைத்து மகிழும் வேளையில் செத்தவனின் எலும்புக்கூடு நின்று மிரட்ட வேண்டுமா?

குழிப் பிள்ளையை எடுத்து இழவு கொண்டாட நினைப்பவனின் நோக்கம் எதுவாய் இருக்கும்? எதற்காக இந்த மிரட்டல்...? ஆனந்தனுக்குத் தெரிந்துவிட்டால்...? அய்யோ... வாழ்க்கை பட்டமரம்தான்.



''ஏய்... தேவிகா... நான் பேசிக் கொண்டே இருக்கிறேன். நீ வெறித்துப் பார்த்துக் கொண்டு இருக்கிறாயே... என்ன ஆச்சு?'' விரலை சொடுக்கி அவளது கவனத்தைத் திருப்பினான்.

எச்சிலை விழுங்கினாள். மலங்க விழித்தாள்.

''அப்படி என்ன உன்னை சிலையாய் நிக்க வைத்த சமாச்சாரம் உள்ளே இருப்பது...?'' கையை நீட்டினான் ஆனந்தன்.

''இது... இது... என்தோழி ஏதோ குறும்புடன் அனுப்பி இருக்கிறாள்... என்னவோ பிதற்றி இருக்கிறாள்... வேண்டாமே...'' கடிதங்களை தன் மார்புடன் அணைத்துக் கொண்டு சொன்னாள்.

அவன் சிரித்தான்... ''எங்கே... படிக்க சுவாரசியமாய் இருக்கும்... நமக்குள்ளே என்ன ரகசியம்... தாயேன்...'' விடாப்பிடியாய் அவன் கேட்டான்.

''தயவு செய்து கேட்காதீர்கள்... இது... வந்து... அந்தரங்கமாய் ஏதோ எழுதி...'' தட்டுத் தடுமாறிப் பேசினாள்.

அவளை ஒரு கணம் உற்று நோக்கிவிட்டு 'சட்'டென்று புன்னகைத்தான்.

''சரி... வா... சாப்பிடலாம்'' என்று கூறிவிட்டு அவன் சென்ற பின்புதான் அவளுக்கு சீராக மூச்சு வந்தது.

''கை கழுவி வருகிறேன்'' ஒரு மூச்சாய் குளியலறைக்குள் ஓடினாள்.

கடிதங்களைப் பிரித்துப் பார்க்கவும் சகிக்காமல் ஆத்திரத்துடன் துண்டு துண்டுகளாய் கிழித்துவிட்டு குப்பைக் கூடையில் வீசியெறிந்தாள்.

கொதித்துக் கொண்டிருந்த உடலும், வெந்துபோன உள்ளமும் குளிரும்படி சில்லென்று நீரை அள்ளி முகத்திற்கு தெளித்துக் கொண்டாள். உதட்டோரம் உப்புகரித்த போதுதான் அழுகிறோம் என்று உணர்ந்தாள்.

அழக்கூடாது... ஆனந்தனுக்கு துளியும் சந்தேகம் வரக்கூடாது என்று நினைத்தாள். அவளையும் மீறி கண்ணீர் பொங்கி வந்தது.

மறுபடியும் முகத்தைக் கழுவிக் கொண்டு வந்து அமர்ந்தவள் கணவனைப் பார்த்து பலவீனமாய் புன்னகைத்தாள்.

அவளது கண்களும் முகமும் கலங்கி வாடி இருப்பது அவன் பார்வையில் பட்டதோ என்று தெரியவில்லை... அவன் எதுவும் பேசாமல் உணவு உண்டான்.

அவன் ஏதாவது கேள்வி கேட்டு துளைப்பானோ என்று தவித்தவளுக்கு அவனது மவுனம் நிம்மதியைத் தந்தது. ஆனால் சந்தோஷத்தைப் பறித்துக் கொண்டது.

எப்படியோ ஆரம்பிக்க வேண்டிய இரவு எப்படியோ திசை திரும்பி விட்டது...

தெளிந்த நீரோடையாய் இருக்கும் மனதுடன் தன் உடல் பொருள் ஆவி அனைத்தையும் அர்ப்பணித்து இன்ப வாழ்க்கையைத் தொடங்க அவள் நினைத்தது. ஆனால் யாரோ எறிந்த கல் மனதை சகதியாய் கலக்கிவிட்டது.

குழப்பமான உள்ளத்துடன் எப்படி ஒன்ற முடியும்?

''ஏன் கொறித்துக் கொண்டிருக்கிறாய் தேவிகா... அப்போதிருந்து பார்க்கிறேன். உள்ளே ஏதோ அரிப்பது



போல் தவிக்கிறாய்... ஏன்?'' ஆனந்தனின் குரலில் திடுக்கிட்டாள்.

அப்போதுதான் அவளுக்குத் தெரிந்தது. தட்டில் இருக்கும் பதார்த்தங்களில் கோலம் போட்டுக் கொண்டிருப்பதை உணர்ந்தாள். அவனும் தன்னை கவனித்துக் கொண்டிருக்கிறான் என்றும் தெரிந்தது. நெஞ்சினுள் ஏதோ ஒரு இரும்பு குண்டு ஏறி அமர்ந்தது போல கனத்தது. தலையில் 'விண்' விண்' என்று வலி பிளந்தது.

எண்ணங்களே சம்மட்டிகளாகிவிட்டதோ... தாளாமல் எழுந்து விட்டாள்.

அவள் செல்வதையேப் பார்த்துக் கொண்டிருந்தான். ஆனந்தன் அவனது கண்களில் முதலில் 'அய்யோ... பாவம்' என்று இரக்கமும் அதைத் தொடர்ந்து சினமும் தெரிந்தது.

எதையும் சொல்லாமல் மென்று விழுங்குகிறாளே... அழுத்தக்காரிதான்... வாய்விட்டு அவள் சொல்ல வேண்டும் என்று பல வழிகளில் முயன்று பார்த்தும் தோல்விதான்.

எழுந்த சினத்தை சிரமப்பட்டு அடக்க வேண்டியதாயிற்று.

கணவனிடமே மறைக்கிறாளா? எத்தனை நாட்கள்..? அதையும் பார்த்துவிடலாம்... அவனுள் சவால் எழுந்தது.

எத்தனையோ நாட்களை வாழ்வில் சந்தித்தாலும் திருமண நாளை மறக்க முடியாது...

முதலிரவும் அப்படித்தான்... அதற்கு முன்பும் சரி, பின்பும் சரி... அந்த இரவுகள் நினைவில் இருக்காமல் போய்விடும்...

முதலிரவு என்பது ஒருவரின் வாழ்வில் மறக்கவே முடியாத இரவாக அமைந்துவிடும்... ஒருவரையொருவர் பேசி, பழகி, புரிந்து கொள்ளவேண்டிய இரவு...

இனிய ராகம் பாடவேண்டிய அந்த இரவில் மனம் ஊமை ராகம் முனக இருவரும் முதுகைக் காட்டிப் படுத்துக் கொண்டிருந்தனர்.

விதானத்தைப் பார்த்துக் கொண்டு படுத்திருந்த ஆனந்தன் அவள் பக்கம் பாராமல் திரும்பிக் கொண்டான். அவனது மனதில் கொந்தளிப்பு... எரிச்சல்...

தேவிகா சுவர்புறம் திரும்பி படுத்திருந்தாள். கண்ணீர் கன்னத்தில் கோலம் போட... 'தெய்வமே ஏன் இந்த சோதனை' என்று உள்ளம் நொந்துகொள்ள... தான்படும் வேதனையை தன் கணவன் பார்த்துவிடக்கூடாதே என்ற தவிப்பும் சேர உறக்கம் வராமல் அவதிப்பட்டாள்.

வானத்தில் வட்டமிட்டுக் கொண்டிருந்த நிலவும் சன்னல் வழியே எட்டிப்பார்த்தது.

ஒட்டி உறவாடும் இளம் தம்பதியினரையேப் பார்த்துப் பழகியப் போன நிலவும் அங்கு நிற்கவும் மனமின்றி விலகிச் சென்றது. முதல் இரவு முள் இரவாய் கழிந்தது.

## 6

மறுநாள்...

எதுவுமே நடக்காதது போல அவளிடம் ஆனந்தன் பேசினான்.



"தேவிகா... சீக்கிரம் புறப்படு... ஒரு சுற்று வெளியே போய் வரலாம்... அறையினுள் அடைந்து கிடப்பது சரியல்ல."

அவளுக்கு அழகை ரசிக்கும் மனநிலையும் இல்லை... இயற்கை அழகெல்லாம் வடிந்து போய் பார்க்கும் இடம் எல்லாம் பூதமாய் பயமுறுத்தியது. ஏதோ ஒரு பேய் நிழல் தன்னைத் தொடர்ந்து வருவது போல ஒரு பீதி...

இரவு முழுவதும் மனதில் நின்ற சுமை மெல்ல தலையினுள் சென்று அமர்ந்து கொண்டு விட்டதுபோல தலையினுள் பாரம் அழுத்தியது.

"எங்கே போகிறோம்?" மெல்ல கணவனை விசாரித்தாள்.

"படகு சவாரி... பூங்கா.. இன்னும் எத்தனையோ இடங்கள்... நிதானமாய் சுற்றி வரலாம்..."

படகில் செல்லும் போது நீரைப் பார்த்து தலைச்சுற்றியது. இறங்கும்வரை மூச்சைப் பிடித்துக் கொண்டிருந்தாள்.

செங்குத்தாய் இருந்த பாறை பக்கம் வந்தபோது கையும் காலும் நடுநடுங்கியது... பாதுகாப்பிற்கு இரும்புக் கைப்பிடி போட்டிருந்தாலும் அதையும் மீறி விழுந்துவிடுவோமோ என்ற அச்சம்.

"என்ன இடம் இது?" நடுக்கத்தை மறைத்துக் கொண்டு கேட்டாள்.

"எத்தனை பேர்கள் இங்கிருந்து குதித்துத் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள் தெரியுமா? பெரும்பாலும் காதலில் தோல்வி... உடம்பு முழுசா கிடைக்காது. காதலில் தோல்வியடைந்த ஆவிகள் இந்த இடத்தில் எத்தனை சுற்றுகின்றனவோ..."

அந்த குளிரிலும் அவளுக்கு வியர்த்தது.

தற்கொலை... ஆத்மா ... ஆவி... கண்களை இருட்டிக் கொண்டு வந்தது.

ஒருவேளை செத்தவன் பேயாய் அலைகிறானோ? பேய் கடிதங்களை அனுப்புமா..? இருக்காது... வேறு யாரோ இருக்கவேண்டும்... அவன் யாரென்று தெரிந்தால் அவன் கால்களில் விழுந்து கேட்டுக் கொள்ளலாம்... என் வாழ்க்கையை நாசமாக்காதே என்று.

தன்னிடம் ஆனந்தன் பேசிக் கொண்டிருப்பதை உணர்ந்தவளாய் தன் கவனத்தைத் திருப்பினாள்.

யாரோ நண்பனின் கதை. ''யாரையோ காதலித்துவிட்டு, அவனுடன் நன்றாய் சுற்றிவிட்டு பின் இவனைக் கைப்பிடித் திருக்கிறாள்... திருமணத்திற்குபின் தெரிந்து கொண்டிருக் கிறான். மனம் அமைதியிழந்து குடிக்க ஆரம்பித்திருக்கிறான்..''

தேவிகா குழம்பிப்போனாள்.. எதற்கு இந்த கதை...? நின்றது தற்கொலை முனை... சொல்வது கெட்டுப்போன கதைகள்... சீரழிந்தவர்களின் வரலாறுகள்... அவன் மனதில் என்ன இருக்கிறது என்று அறியமுடியாமல் துடித்தாள்.

''அவள் எவனையோ காதலித்ததுகூட எனக்கு வருத்த மில்லை... திருமணமாகி குழந்தை உண்டாகியும் என்னிடம் சொல்லாமல் இருந்திருக்கிறாள். அவள் ஒளிக்காமல் சொல்லியிருந்தால் நான் மன்னித்திருப்பேன்... என் நம்பிக்கையை குலைத்துவிட்டாள் ஆனந்த்'' என்று மனம் நொந்து சொன்னான்.

''ஒன்று சொல்கிறேன் தேவிகா... கணவனிடம் ரகசியம் காக்கும் பெண்களை நம்பவே கூடாது. அவர்கள் இருந் தாலும் செத்தாலும் ஒன்றுதான்'' அவன் குரலில் தெரிந்த வெறுப்பு அவளது உள்ளத்தில் உறையச் செய்தது. அவனது வார்த்தைகள் கோடாலியென நெஞ்சை பிளந்தது.



அப்போதே அவனது கால்களில் விழுந்து கதறி நடந்த வற்றை எல்லாம் கொட்டிவிடலாமா என்றுகூடத் தோன்றியது.

ஆனால் அவன் எவ்வாறு ஏற்றுக் கொள்வானோ? நண்பனின் மனைவியை செத்தாலும் நல்லது என்பவன் தன்னுடைய மனைவியை எளிதில் மன்னிப்பானா? 'செத்துத் தொலை' என்று உதறிவிடுவது நிச்சயம்...

என் தலையில் நானே மண்ணையள்ளிப் போட்டுக் கொள்வது கூடாது.

திருமணத்திற்கு முன்பே சொல்லியிருந்தாலும் மன்னித் திருப்பான்... திருமணத்தன்றே மறைக்காமல் கூறியிருந் தாலும் அவனது நம்பிக்கையைப் பெற்றிருக்கலாம்.

இனிமேல் 'ஒளித்ததற்கு மன்னியுங்கள்' என்றாலும் முகம் திருப்பிக் கொள்வது நிச்சயம்.

தவளை தன் வாயால் கெடுவது போல என் வாழ்வை நானே கெடுத்துக் கொள்ளக்கூடாது.

இதுநாள் வரை இருந்தது போல் நடந்ததைக் கெட்ட கனவாய் மறந்துவிட வேண்டும். கெட்டக் கனவிலிருந்து விழித்த பின்பு அதை எத்தனை நேரம் நினைவில் வைத் திருக்க முடியும்?

ஒரு மணி... ஒருநாள்... அவ்வளவுதான்... அதன்பிறகு நினைவிலிருந்து அழிந்துவிடுகிறது... அதுபோலத்தான் இதுவும். அதுவும் அப்படியே நினைவிலிருந்து மறைந்து போகவேண்டும்... பழங்குப்பையென தள்ளிவிட வேண் டும்... தனக்குத்தானே தைரியம் தேடிக் கொண்டாள் அவள்... அந்த தைரியமும், நிம்மதியும் அடுத்த பார்சலை பார்க்கும் வரைதான்... பார்த்தவுடன் பஞ்சாய்ப் பறந்து போனது...

# 7

தேனிலவு முடிந்து புறப்படும் நாள் அன்று. தேனிலவா... இருவருக்கும் தேனாய் இனித்த நிலவா... இல்லவே இல்லை... எட்டியாய் கசந்து எட்டியே நின்ற நிலவு...

ஆனந்தனும் எட்டியே நின்றான். மனைவியின் அருகில் நெருங்கவும் இல்லை.

முதல் நாள் மனம் பதைத்து வாடிப்போய் அவளே ஒதுங்கினாள்.

அவனது ஒதுக்கத்தை உணர்ந்து கொள்ளும் நிலையில் இல்லை.

மறுநாள் ஊரைச் சுற்றி வந்த களைப்பு என்று படுத்தவன் அடித்துப் போட்டாற்போல உறங்கியது கண்டு அவளுக்கு வியப்பு!

ஏதும் பேசாமல் சோபாவில் சுருண்டு போனாள். சுற்றுலாப் பயணிகள் ஈயாய் மொய்த்துக் கொண்டு இருந்ததால் சொன்ன நாளில் அறையை காலி செய்யும்படி நிபந்தனை.

புறப்படும் நேரம்...

எல்லாம் எடுத்து வைத்துக் கொண்டிருந்தபோது 'அது' வந்தது கூரியரில்.

அதே பொன்னிற மேலுறை... அதே கலையுணர்வுடன் 'பேக்கிங்.'

உள்ளே அதே காதல் கடிதங்கள் தான் என்பது சர்வ நிச்சயம்.



வாழ்க்கையே உலைவைக்கும் குண்டுகள்.

கணவனின் கைக்கு அது சென்றுவிடக் கூடாதே என்று ஓடிப் போய் வாங்கிக் கொண்டாள்.

பிரிக்கவும் மனமில்லை. கைகள் நடுங்க தன் கைப் பையினுள் வைத்தாள்.

பார்த்துவிட்டானோ?

"என்ன, தேவிகா... விடாமல் வந்து கொண்டு இருக் கிறதே... அப்படி என்னதான் இருக்கிறது அதனுள்."

மின்சாரம் பாய்ந்ததுபோல உடம்பெங்கும் உதறல்... அதிர்வு... விறைப்பு...

எப்படி தப்பிப்பது...? எப்படி சமாளிப்பது..? கடவுள் தான் வழி காட்டணும்... பொறியில் மாட்டிய எலியின் நிலை...

வழிக்காட்டினார் கடவுள்...

தொலைபேசி மணி ஒலித்தது. வரவேற்பு பிரிவிலிருந்து பெண் பேசினாள்.

கணக்கெல்லாம் சரிபார்த்து வைக்கப்பட்டிருக்கிறது... பணம் கட்ட வரலாம் என்று.

ஆனந்தன் கீழே சென்றான்.

மார்புக் கூட்டிலிருந்து வெளிச்சென்ற உயிர் மறுபடியும் வந்து சேர்ந்து கொண்டது போல தோன்றியது.

இன்னும் எத்தனை நாளுக்கு தாக்குப்பிடிக்க முடியும்... இப்படி செத்து பிழைக்கும் நிலை இன்னும் எத்தனை நாள்..

நித்யகண்டம் பூர்ண ஆயுசு என்பதுபோல... அனுப் புவது யார் என்று தன்னைக் காட்டிக் கொள்ளக் கூடாதா? மனம் ஏங்கி நின்றது.

ஆனந்தன் வருவதற்குள் வந்த கடிதங்களைக் கிழித்துப் போட்டாள்.

வந்தது இரண்டு கடிதங்கள்... இன்னும் எத்தனை கடிதங்கள்... எண்ணிக்கையில்லை.

இனியும் வரும்... வந்துகொண்டே இருக்கும்... நிம்மதியை குலைத்துக் கொண்டே இருக்கும். இப்படியும் ஒரு வாழ்வு... ச்சே...

காதல் தோல்வியடைந்து தன் வாழ்வே நசிந்தபோது அவள் பட்ட வேதனை சொல்ல முடியாது.

ஆனந்தன் அந்தப் புண்ணை மாற்றும் மருந்தாய் வந்தான்... கருகிப் போன வாழ்வு மலராது என்ற நம்பிக்கை யிழந்த தன் வாழ்வும் மலர்ந்தது.

இருந்தும் இருவரும் இணையவில்லையே... இருவரையும் இணையவிடாமல் தடுத்துக் கொண்டிருப்பது எது... எந்த திரை... பனித்திரையாய் விரைவில் மறந்து போகுமா! இல்லை இரும்புத் திரையாய் நிரந்தரமாகிவிடுமா?

காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

மேலும் சில நாட்கள் கண்ணாமூச்சி ஆடிவிட்டு ஓடின.

யார் மீது தவறோ... தெரியவில்லை.

அவள் மனம் நெகிழ்ந்திருக்கும்போது அவன் விறைந்திருப்பதும்... அவனது பார்வையில் இளகல் தெரியும் போது நத்தையாய் அவள் உள்ளம் சுருங்கிக் கொள்வதுமாய் ஒரு ஊமை நாடகம் மேடைக்கு அவசியமில்லாமல் அங்கு அரங்கேற்றமாகியது.

அன்று...

ஆனந்தன் வரும்போதே பரபரப்பாய் வந்தது. அவளுக்கு ஆச்சரியம்.

கண்களும் வளையம் போட்டு எதையோ தேடின.

''ஏதாவது தபால் வந்ததா?''



''இல்லீயே...'' சொன்னாள்.

''வரவில்லையா...'' கண்களில் துளாவல்.

''வரவேண்டும்... ஏன் இல்லை...'' மெல்லியதாய் முணுமுணுத்தாலும் அது அவளது காதில் பட்டது. சொல்லி வைத்தாற்போல அன்று வந்தது.

அந்த அன்பளிப்பு.

இதைத்தான் கேட்டானா... அவனுக்கு எப்படித் தெரியும்... முக்காலும் அறிந்த ஞானியைப் போல அல்லவா கேட்டான்.

அவளது மூளையில் ஒரு மின்னல் வெட்டியது. ஒரு வேளை... அப்படி இருக்குமோ..?

அதை அவன் பிரிக்க முயற்சிப்பதைக் கண்டு பதறிப் போனாள்.

''அய்யோ...வேண்டாம்... பிளீஸ் அதைப் பிரிக்காதீர்கள்'' கத்தினாள்.

அவன் நிமிர்ந்து பார்த்தான். ''ஏன்?'' சொல்ல முடியாது தவித்தாள்.

என்ன சொல்ல முடியும்? 'என் மாஜிக் காதலனுக்கு நான் எழுதிய காதல் கடிதங்கள். மனம் நெக்குருகி கவிதை பிரவாகமாகி வடித்த மடல்கள்' என்று எந்தப் பெண் தன் கணவனிடமே வாய்விட்டு சொல்வாள். மவுனம்தான்.

''நீ சொல்லமாட்டாய் என்று எனக்குத் தெரியும்... உன்னால் பேசமுடியாது... நான் சொல்கிறேன். இது உன்னுடைய காதல் கடிதங்கள்... அப்படித்தானே...''

அவள் விக்கித்து நின்றாள்.

''எனக்கு எப்படித் தெரியும் என்ற திகைப்பா... தவணையாக அவற்றை அனுப்பி வைத்ததே நான்தானே...''

தன்முன் அனைத்தும் தட்டாமலை போல சுழல்வது போலத் தோன்றியது.

சூறாவளிப் புயலில் சிக்கித் துரும்பென ஆகாயத்தில் பறந்து கொண்டிருப்பது போல மயக்கம் வந்தது.

கால்கள் நைந்த துணியாய் துவள அப்படியே அமர்ந்தாள்.

# 8

தேவிகாவால் நம்பமுடியவில்லை... தன் கணவனா ஒளிந்து நின்று வதைத்தது... யார் அவன் என்று குழம்பியதற்கு விடை ஆனந்தன்... அது அதிர்ச்சிதான்.

கண்ணார பலமுறைப் பார்த்திருக்கிறாள். பூனை எலியைப் பிடிக்கும்... பிடித்தவுடன் தின்றுவிடாது. அங்கும் இங்குமாய் தவிக்கச் செய்து, சீண்டி ஓடவைத்து, குற்றுயிரும் குலையுயிருமாய் ஆனப்பின்பு விழுங்கும்.

ஆக தன் கணவனும் தன்னை அப்படித்தான் வதைத்திருக்கிறான்.

அந்த கடிதங்களை அவனே அனுப்பிவைத்து ஒன்றும் அறியாதவனைப்போல நடித்து தன்னை அணு அணுவாய்த் துடிக்கச் செய்து... தினமும் செத்துப் பிழைக்கும்படி வதைத்து...

தான் பட்ட வேதனையைக் கண்டு குரூரத் திருப்தி அடைந்திருக்கிறான். வார்த்தைகளால் துளைத்திருக்கிறான்.

அப்படியென்றால்... அவன் விரும்பி மணக்கவில்லை... பழிவாங்க தன்னை மணந்திருக்கிறான்.... ஆனால் சரவணனுக்காக இவன் ஏன் பழிவாங்க நினைக்க வேண்டும்.... இதற்கும் ஒரு காரணம் நிச்சயம் இருக்கத்தான் இருக்கும்... இருந்தது... அதுவும் அவனது வாய்வழி வந்தது.



''வேண்டும் என்றேதான் நான் செய்தேன்... ஏன் என்று கேட்கிறாயா... என் நண்பனின் தற்கொலைக்கு நீதாண்டி காரணம். வாழ வேண்டிய வயதில் மண்ணில் புதைந்து போகும்படி செய்தாயே அதற்குத்தான்... கத்தையாய் காதல் கடிதம் எழுதிய உனக்கு எதனால் அவன் கசந்துபோனான்... ஒருத்தனுடன் சுத்தியது போதவில்லையா... புதிதாய் ஒருவன் கிடைத்ததால் சரவணனை உதறித் தள்ளிவிட்டாயா..? ஒருவன் போதவில்லையென்றா?''

''அய்யோ... நீங்கள் சொல்வதுபோல் இல்லை... அத்தனையும் பொய்...'' கதறினாள் தேவிகா...

''எதுடீ இல்லை... அவனை காதலித்ததா? அதுதான் கிறுக்கி தள்ளியிருக்கிறாயே... கடிதம் அது சொல்கின்றதே... காதல் என்ன விளையாட்டு என்ற நினைப்பா உனக்கு.''

''ஆனந்த்...''

''வாயை மூடுடீ... ஏதும் பேசாதே... கழுத்தை நெரிப்பேன்... ஆமாம்... உன்னை விரும்பி தாலி கட்டினேன்னு நினைத்தாயா? இல்லைடீ... வஞ்சம் தீர்க்க.. என் நண்பனின் ஆத்மா சாந்தியடைய... உன்னை ஒவ்வொரு நாளும் அணு அணுவாய் வதைத்து பார்த்து ரசிக்கத்தான். உன் தவறை நீ உணரவேண்டாமா..? நான் உனக்கு கட்டியது தூக்குக் கயிறு... தாலி இல்லை...'' கோபத்தில் மூச்சு வாங்கப் பேசினான். ஆனந்தன். அழகான முகமும் கோபத்தில் வக்கிரமாய் தோன்றுமா? அவன் முகம் மாறி இருந்தது. தேவிகாவிற்கு அவனைப் பார்க்கவே பயமாக இருந்தது.

கண்கள் சிவந்துபோனது. மூக்கு நுனி துடித்தது. வாய் கோணி நின்றது... தாடை இறுகி கல்லானது. சாந்தமான ஆனந்தன் மறைந்து போய் பதிலாய் சிங்க முகத்துடன் ஆனந்த் சீறிக் கொண்டிருந்தான். ஒருவேளை இதுதான் உண்மை வடிவமோ இதுநாள் வரை பசுத்தோல் போர்த்தி யிருந்த புலியாய் இருந்திருந்தானோ என்னவோ...

தலையைப் பிடித்துக் கொண்டாள்.

விதிக்கு தன் மீது என்ன கோபம்? இப்படி ஆட்டுவிக்கிறது...

இறந்தவனுடன் இறந்தகாலமும் இறந்துவிட்டது என்று எண்ணியிருந்தாள். ஆனால் பூமியைக் கிழித்து எழுந்த பூதமாய் சந்தேகப் பேய் தோன்ற வேண்டுமா?

இப்போது எதிர்காலமும் உயிரிழந்து போனதே... பரிதாபமாய் அவனைப் பார்த்தாள்.

பொங்கிய சினத்தை அடக்க முயன்று அவன் அங்கும் இங்குமாய் அலைந்துகொண்டு இருந்தான். வலது கையை மடித்து இடது உள்ளங்கையில் தாக்குவதில் இன்னும் அடக்க முடியாது தவிக்கிறான் என்றும் தெரிந்தது.

மெல்ல முனகல் குரலில் சொன்னாள். "தயவுசெய்து என் வார்த்தைகளைக் கேளுங்க.. நான் ஒரு பாவமும் அறி யாதவள். நீங்கள் நினைப்பது போல உங்கள் நண்பர் நல்லவர் இல்லை... அவர்..."

"அறைவேன் நாயே. செய்த தவற்றை திருப்பி அவன் மீதே பழியைப் போடுகிறாயா? ச்சே... நீயும் ஒரு பெண்ணா... பெண்குலத்திற்கே அவமானச் சின்னம். உன்னைப் பார்க்கவும் குமட்டுகிறது..." வார்த்தைகளை அனலாய் கொட்டிவிட்டு வெளியேறினான். வெளியேறு வதற்குமுன் ஒருகணம் நின்றவன். "இனி உனக்கும் எனக்கும் எந்த உறவும் இல்லை. கட்டிய தாலியும்



பெயருக்குத்தான்... உன் கழுத்தை இறுக்கி வரும் சுருக்குக் கயிறு. காலம் முழுவதும் கணவனோட அன்பைக் காணாமல் பெயருக்கு மனைவியாய்... நடைப்பிணமாய் நீ அலையப்போறே... அதைப் பார்த்து என் அருமை நண்பனோட ஆத்மா குளிரப் போகிறது" என்று அமில வார்த்தைகளை உமிழ்ந்து தள்ளிவிட்டு சென்றான்.

அவளையும் கேளாமல் கண்கள் ஊற்றெடுத்தன.

இதயம் வெடித்து விடுவதை போல வலித்தது.

கடவுளே... எல்லாத் திருமணங்களையும் உன் சொர்க் கத்தில் நிச்சயிப்பாயே...ஏன் இந்த திருமணத்தை நரகத் திற்குத் தள்ளிவிட்டாய்? இனி என் வாழ்க்கையில் மலர்ச் சியைக் காணமுடியாதா?

காலம் முழுவதும் கண்ணீர் கதையா? கைகளில் முகம் புதைத்து விம்மி அழத் தொடங்கினாள் தேவிகா.

## 9

**வ**ளையம் வளையமாய் புகை செல்வதை வெறித்துக் கொண்டு. அமர்ந்திருந்தான் ஆனந்தன். காலடியில் குவிந் திருந்த சிகரெட்டின் துண்டுகள் அவனது அலைபாயும் மனதை சுட்டியது.

அவன் மனதில் கடல் கொந்தளித்துக் கொண்டு இருந்தது. புயல் வீசிக் கொண்டிருந்தது. பூகம்பம் வெடித்துக் கொண்டிருந்தது.

அத்தனையும் கடந்தக் கால நினைவுகளின் விளைவு கள்... அந்த நினைவுகள் பவுர்ணமி நிலவைக் கண்ட திரைகளாய் பொங்கி எழுந்தன.

கண்களை மூடிக் கொண்டான்.

இப்போதும் அவனால் மறக்க முடியாமல் தவிர்க்க நேர்ந்தது.

அன்று...

அவன் அலுவலக வேலை சம்பந்தமாய் டெல்லிக்குப் போக வேண்டியிருப்பதை சரவணனிடம் சொல்லிவிட்டு செல்ல வந்தவன். அறையினுள் அவன் கிடந்த கோலத்தைக் கண்டு திடுக்கிட்டுப் போனான்.

சட்டைக் கிழிந்து... படுக்கையில் அலங்கோலமாய் விழுந்து கிடந்தான் சரவணன்.

"என்னவாயிற்று?" என்று பதைத்துக் கேட்ட நண்பனிடம் தன்னைக் காதலித்தவள் அவனுடன் காதலையும் உதறி விட்டு சென்றுவிட்டாள் என்றான் கலங்கி சிவந்த முகத்துடன்.

நொந்து போன உள்ளத்துடன் அவன்பட்ட வேதனையைக் கண்டு பார்த்தேயிராத அந்த காதலி மீது அந்த கணமே எரிச்சலும் கோபமும் ஏற்பட்டது.

டெல்லிக்கு போய் வந்தபின் கவனிக்கலாம் என்று எண்ணி அவனை சமாதானப்படுத்திவிட்டு சென்றான்.

திரும்பி வந்தபோது வரவேற்றது நண்பனின் இறந்த செய்திதான்.

அந்தச் செய்தி அவனை நிலைகுலைய வைத்தது. எத்தனை வருட நட்பு... அந்த நட்பிற்காகவாவது அவன் வாழ்ந்திருக்கக் கூடாதா?

அற்பக் காதலுக்காக அருமருந்தன்ன உயிரை விட்டு விட்டான் மடையன்.

தற்கொலையாம்...

பாவி... விடுதியின் மொட்டைமாடியிலிருந்து விழுந்து உயிர் விட்டிருக்கிறான் அந்த முட்டாள்.



அவனுக்கு ஒரு கடிதமும் வேறு...

அதில் அவளை...அந்த தேவிகாவை பழிக்குப்பழி வாங்கவேண்டும் என்று வேண்டியிருந்தான்.

'அதை நீதான் செய்யணும்.. நம் நட்புக்கு ஒரு அர்த்தம் இருக்கிறது என்றால் நீதான் வஞ்சம் தீர்க்கவேண்டும்... அவளை மணந்துகொண்டு வதைக்கவேண்டும்... அழ அழ விரட்டவேண்டும்... செய்வாயா நண்பா' என்று பரி தாபமாய் முடித்திருந்தாள்.

அதை நினைவிலிருந்து அழிக்க நினைத்தாலும் முடிய வில்லையே... அந்த நினைப்பில் நெஞ்சு அடைத்தது.

மனதில் புயல் ஓய்ந்ததுபோல ஒரு அமைதி அவனுள் ஏற்பட்டது.

'நண்பா... பழிவாங்கிவிட்டேன்... உன் காதலியை அணு அணுவாய் சித்திரவதை செய்ய ஆரம்பித்துவிட்டேன். அவள் கொஞ்சம் கொஞ்சமாய் துடித்து ஒடுங்கவேண்டும். நீ மேலிருந்து அதைப் பார்த்து ஆனந்தம் அடைய வேண்டும். உன்னைக் காப்பாற்ற இயலாமல் போனது... உன் வார்த்தையை நிறைவேற்றிவிட்டேன்... அது போதுமடா எனக்கு...' மானசீகமாய் நண்பனுடன் அவன் பேசினான்.

இப்போது எல்லாமே இலகுவாய்த் தோன்றினாலும் ஆரம்பத்தில் அவன் பட்டப்பாடு... அந்த தேவிகா யார் என்று விசாரித்து... தேடிப் பிடித்து... மெல்ல அவளது பார்வையில் அடிக்கடிப்பட்டு, அவளது கவனத்தைத் திருப்பி... நம்பிக்கையை வளர்த்து... மெல்ல மெல்ல அவளது மனதை வளைத்துப்போட்டு திருமணம் வரைக்கும் வந்தது என்ன சாமானிய செயலா?

அதுவரைக்கும் தனது மேசையில் தூங்கிக் கொண் டிருந்த அந்த கண்றாவி கடிதங்களைக் கண்டு பெருமூச்சு விட்டவனாய்... என்று அவை அவளுக்கு அவளது

நிம்மதிக்கு விஷமாய் மாறப் போகிறது என்று துடித்தவனாய் இருந்தான்

அத்தனையையும் சாதித்துவிட்டான்... அவனது லட்சியம் நிறைவேறிவிட்டது.

நண்பனின் இறுதி ஆசையும் நிறைவேறிவிட்டது. இனி நடந்ததை நினைத்தும் நடக்கப்போவதை எண்ணியும் புழுவாய் துடித்து உயிர் விடப்போகிறாள். தான் நினைத்ததை சாதித்ததற்கு எக்காளமிடவேண்டும் என்று தீர்மானித்திருந்தான். இப்போது அது முடியவில்லை. ஏன் என்றும் தெரியவில்லை. தன் மனமும் அவளுக்காக கசிகின்றதோ... தன் நெஞ்சத்தின் ஒரு முடிச்சிலிருந்து புள்ளியாய் இரக்கம் தலை நீட்டுகின்றதோ...

தலையை உதறிக் கொண்டான். நட்பின் ஆழத்தைவிட வேறு எதுவும் பெரிதல்ல...

எந்தவித உணர்வும் தடைக்கல்லாய் இருக்காது சரவணனின் ஆத்ம சாந்திதான் குறி... அதற்கு அவள் தண்டனை அனுபவித்துதான் ஆகவேண்டும். அதுதான் சரி.

கையைச் சுட்டது சிகரெட். அதை தரையில் எறிந்து காலால் நசுக்கினான். அத்துடன் தன் மனைவியின் மீது அவனையும் அறியாமல் எழுந்த அனுதாபத்தையும் சேர்த்து நசுக்கினான்.

## 10

நரகம் என்பது இப்படித்தான் இருக்குமோ? அங்கு உண்டு என்று சொல்லப்படும் தண்டனை, வேதனை அனைத்துமே மண்ணுலகில் இருந்துவிட்டால் வாழ்வு நரகம்தான். இதைவிட வேறு ஒரு நரகமும் உண்டா என்று தோன்றும். அத்தகைய நரக வாழ்வில் தவித்துக் கொண்டிருந்தாள் தேவிகா.



இந்த வாழ்க்கையும் வேண்டுமா என்ற சலிப்பும் சில வேளைகளில் தோன்றும்.

மனதில் நஞ்சை மறைத்துப் பழகி வஞ்சம் தீர்த்துக் கொள்ள நினைக்கும் கணவன்... அவனது சந்தேகத்தைப் போக்க வழி தெரியாமல் தவிக்கும் தான்...

உண்மையை படபடவென்று கொட்டிவிடலாம் என்று நினைத்தாலும் அவன் நின்று பேசினால்தானே. முகம் கொடுத்து பேசவும் மறுத்தான். முகம் சுறித்துக் கொள்ளும் அவனிடம் என்ன சொல்வது..?

பாழும் உயிரை விட்டு விடலாமா என்ற நினைப்பை அடுத்த கணமே மாற்றிக் கொள்வாள். கூடாது... பழியை சுமந்து கொண்டு சாகக்கூடாது... உண்மை அவளுடன் புதைந்துபோகக் கூடாது... அவனது தவறான எண்ணத்தை போக்க வேண்டும்... அடுத்த வினாடியே உயிர் பிரிந்தாலும் தேவலை.

அவளுள் உறுதி எழுந்தது.

அவனிடம் தானே வலியச் சென்று பேசவேண்டும்... பழக வேண்டும்...

அவன் தன்னை அவமானப்படுத்தினாலும் சரி... கீழாக நினைத்து இழிவாய் பேசினாலும் சரி...

அவனது கவனத்தைப் பெற... அவனது மனதைத் திருப்ப எந்த நிலைக்கும் இறங்கத் தயார். அது பெண்மைக்கு இழுக்குதான்... ஆனாலும் செய்யத்தான் வேண்டும். அதுதான் பெண்ணிற்கு அழகு என்று இலக்கணம் சொல்லிவிட்டு போயிருக்கிறார்களே...!

அன்புக்கு தாய்... அறிவுக்கு மந்திரி... துணைக்குத் தோழி... இன்பத்திற்கு தாசி...

முதல் மூன்றும் சாத்தியமில்லை... அந்த அளவு அவன் அனுமதிக்கமாட்டான் என்பது நிச்சயம். ஆனால் கடைசி நிலையில் இருந்து அவனது உள்ளத்தைக் கிள்ள முயல வேண்டும்... சுமுகமான நிலையில் நடந்ததைச் சொன்னால். அவனது கோபமும் வெறுப்பும் மறையும்...

முடியுமா என்று ஒரு குரல் கேள்வி எழுப்பியது. முடியும். முடியவேண்டும் என்று தன்னம்பிக்கை அக்குரலை அடக்கியது.

அழகாய் தன்னை அலங்கரித்துக் கொண்டு அவனுக்காகக் காத்திருந்தாள்.

இளமஞ்சளில் உடலைத் தழுவும் வழவழப்பான சேலையும், 'சிக்' என்ற சோளியும் உடலின் வரிவடிவங்களை அழகாய் காட்ட... மாலையில் மலர்ந்த மஞ்சள் சாமந்தியாய் சுடர்விட்டாள். நீண்டக் கூந்தலை இளக வாரி, தலைநிறைய 'கம்'மென்று மணம் வீசி மனதை சொக்க வைக்கும் மல்லிகையைச் சூடி இருந்தாள்.

பூவைச் சுமந்திருக்கும் பூங்கொடியென நின்ற அவளைக் கண்டு அப்படியே மலைத்து நின்றான் ஆனந்தன். அந்த நிமிடம் தன் நண்பன்... வஞ்சம்... பழிக்குப்பழி... எல்லாமே மறந்து போனது.

'என் மனைவி இவள்... இந்தப் பேரழகி எனக்கு உரியவள்' என்ற கர்வம் உண்டாயிற்று. அவனையும் அறியாமல் உதட்டின் ஓரம் லேசாய் முறுவல் எட்டிப் பார்த்தது.

அவள் மானசீகமாய் வானத்தில் சிறகடித்தாள். வெற்றி... என் அழகுக்கு... என் முயற்சிக்கு... என் நம்பிக்கைக்கு வெற்றி என்று மனம் குதிநடைப் போட்டது.



அந்த குதூகலத்துடன் மானாய் துள்ளிச் சென்று ஆசையாய் செய்த காரட் அல்வாவையும், ரவா கிச்சடியையும் எடுத்து வைத்தாள்.

வயிறு நிறைந்தால் மனமும் நிறைந்துவிடுகிறது. அவனுடைய மனமும் தளும்பி நிறைந்தது. அவனும் மனிதன் தான்... ரத்தமும் சதையும் கொண்ட மனிதப் பிறவிதான்...

முற்றும் துறந்த துறவிகளும் சித்தம் தடுமாறிய சரித்திரமும் உள்ளதே...

கண் முன்னே கட்டழகுச் சிலையை வைத்துக் கொண்டு கண்மூடிக் கொண்டிருக்க எந்த ஆண் மகனுக்கு சாத்தியம்?

எத்தனை நாள் மனதைக் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள முடியும்?

அவள் மீது வெறுப்பு காட்டி ஒரேயடியாய் ஒதுக்குவதும் சிரமமாகத்தான் இருக்கிறது. தென்னை மரத்தில் ஏறி உச்சி காண இயலும்... வழுக்கு மரத்தில் ஏறி பார்ப்பது சிரமம்தான்.

மனைவியை வெறுப்பது என்பதும் வழுக்கும் மரத்தில் ஏறுவது போல... முழுவதும் ஏறி நிற்கவும் முடியாது... இறங்கவும் மனம் வராது. உச்சியைத் தொட்டுவிட வேண்டும் என்ற ஒரு வேகமாய் செயல்பட்டாலும் வழுக்கச் செய்வது போல அவளிடம் ஏதோ ஒரு பிணைப்பு... அது எதனால்..? கணவன் - மனைவி என்னும் உறவுதானோ...?

பதுமை போல நிற்கும் அவளைக் கண்டபோது வாழ்வில் எதையோ இழந்து கொண்டிருக்கிறோம். அது தொலைந்தால் மறுபடியும் கிடைக்காது என்று நெஞ்சில் நெருடியது.

செத்தவன் போய்விட்டான்... அவனுக்காக இருப்பவர்களை வதைப்பது என்ன நியாயம்? என்று ஆண்மையின் பலவீனம் எதிர்ப்பு தெரிவித்தது.

ச்சீ... த்தூ என்று தள்ளினாலும் நாய்குட்டியாய் வந்து சுற்றும் இவளை ஒதுக்குவது சரியல்ல என்ற மனிதாபி மானம் அதற்கு ஒத்து ஊதியது.

'சரவணா... நீ ஆவியாய் இங்கே எங்கேயாவது சுற்றிக் கொண்டிருந்தால் உன் மனமும் இளகிவிடுமே... உன் காதலை உதறியவள் என்பதைவிட உன்னால் நேசிக்கப் பட்டவள் என்று நினைத்து மன்னிக்க நினைக்கமாட்டாயா? சொல்...' மனதிலுள் புலம்பினான்.

கணவனின் கண்கள் கனிந்து முகம் மலருவது கண்டு மனதில் பனிச்சாரல் அடித்தது... இன்று நிச்சயமாய் சொல்லி யிடலாம்... சொல்லி அவனது நல்லெண்ணத்தையும் பெற்று விடலாம். 'சரவணன்' என்று உருகி வழியும் இவர் அவன் எத்தனை கயவன் என்று அறிந்தால் நண்பன் என்று நினைக்கவும் வெட்கப் படுவார்.

தெய்வமே... நீதான் எனக்குத் துணை... மனம் படபட வென்று அடித்துக் கொள்ள ஆனந்தனின் அறையினுள் அடியெடுத்து வைத்தாள். இதயம் வேகமாய் துடித்தது.

# 11

விசிலடித்தவாறே உல்லாசமாய் உடை மாற்றிக் கொண்டிருந்தான் ஆனந்தன்.

அவன் மனதினுள் மோகினியாட்டம் நடந்து கொண்டு இருந்தது.

இன்றைக்கு எதுவும் நினைக்காமல் மனைவியுடன் சந்தோஷமாய் இருக்கவேண்டும் என்று உடலும் உள்ளமும் பரபரத்துக் கொண்டிருந்தது.



உடம்பின் ஒவ்வொரு அணுவிலும் மின்சாரம் உற்பத்தி யாகிக் கொண்டிருந்தது. நரம்புகளின் மின் ஓட்டம் கண்களில் விளக்கெரிந்தது. இதயம் அவ்வப்போது 'ஷாக்' அடித்தது போல நின்று பின் வேலை செய்தது.

இத்தனை நாட்களில் இல்லாத உணர்வுகளின் வசந்த விழா என்று ஏன் கொண்டாடப்படுகிறது?

இல்லை... தூங்கும் உணர்வுகளை உசுப்பிவிட்டது அவளது சிரத்தையான அலங்கரிப்பா...? மனதினுள் சம்மணம் போட்டு வலுக்கட்டாயமாய் போராட்டம் செய்து கொண்டிருந்த குரோதம். வெறுப்பு, கோபம் ஆகிய உணர்ச்சிகள் எங்கு மாயமாய் மறைந்தன. இதில் என்ன தவறு... இவள் என் மனைவி... எனக்கே சொந்தம்.

இதுநாள்வரை அவளைத் தொடாமல் இருந்ததே அதிசயம்... அதற்கு இன்று முற்றுப்புள்ளி.

ஒரு பெண்ணை பழிவாங்க எத்தனையோ வழிகள் உண்டே! அவளது விருப்புகளை அலட்சியப்படுத்தலாம்... அடிமையைவிட கேவலமாய் நடத்தலாம்... செய்யும் பணிவிடைகளில் குற்றம் கண்டு வார்த்தைகளால் குதறலாம்.

இந்த வழியில் பழிவாங்கவேண்டும் என்பதில்லையே.. அவளை மனைவியாய் ஏற்றுக் கொள்வது... ஆனால் மனைவிக்குரிய கவுரவத்தை... மதிப்பைத் தரக்கூடாது... ஆமாம் அதுதான் சரியான வழி.

நினைவுகளை அசைபோட்டு கொண்டிருந்தவனின் முதுகில் ஏதோ பூச்சுமை சாய்ந்தது போல மெத்தென்ற உணர்வு.

மென்மையான மென்கரங்கள் பின்னாலிருந்து அவனை அணைத்துக் கொண்டன.

வழுவழுப்பான 'சாட்டின்' முகம் முதுகின்மேல் ஒட்டியது தெரிந்தது.

அவனுள் சுரம் 'விர்' என்று ஏறியது. வேகமாய் மூச்சு வாங்கினான். உடல் தீயாய் தகிக்க... அந்த செம்மையில் உள்ளம் பாகாய் மாறியது.

கண்களை மூடி அந்த சுகத்தை ஒருவினாடி அனுபவித்தான்.

அந்த அழுத்தம் இனிய சுமையை மெல்ல இழுத்து முன்புறம் நிறுத்தினான்.

அவளது கண்களில் மிருட்சியுடன் ஏக்கமும் கலந்து தெரிந்தது.

'என்னை ஏற்றுக் கொள்ள மாட்டீர்களா' என்று கேட்கும் பார்வை அவனை என்னவோ செய்ய... 'தேவி' என்று அவளை இறுக அணைத்துக் கொண்டான்.

அவளுள் என்னவோ சிலிர்த்துக் கொண்டு செல்ல அவனது மார்பில் முகம் புதைத்தாள். அவன் மன்னித்து விட்டான் என்று உள்ளம் குதிநடைப் போட்டது.

இந்த நேரத்தில் எதுவும் பேசக் கூடாது.

பானகத்துரும்பாய் சரவணனின் நினைவு வேண்டாம்.

இன்றைக்கு கணவனின் அன்பு வேண்டும். அவனது அணைப்பு வேண்டும்.

அது மட்டும்தான்... வேறு நினைவுகளுக்கு இடம் தரக்கூடாது.

நினைத்தவளை தன் நினைவையே மறக்கும்படிச் செய்தான் ஆனந்தன்.

பெருமூச்சு வேகமாய் வெளிவர குனிந்து அவளது மதிமுகத்தை நிமிர்த்தி முத்தமிட்டான். கண்களில்...



கன்னத்தில்... நெற்றியில்... இதழ்களில்... மாறி மாறி முத்தமிட்டான்.

உடம்பெல்லாம் வியர்த்தது. அவளை அணைத்தவாறு படுக்கையில் சாய்ந்தான்.

"தேவி... தேவிகா... இன்று நமக்கு..."

குபீரென்று மின்சாரம் விசிறி சுழன்றது. மின்சாரத் துண்டிப்பில் நின்று போனது சொல்லாமல் கொள்ளாமல் பாய்ந்த மின்சாரத்தினால் சுழல ஆரம்பித்தது. ஒருவேளை அதற்கும் இவர்களைப் பார்த்து உற்சாகம் வந்துவிட்டதோ என்னவோ.. சில்லென்று காற்று வியர்த்து நின்ற முகம் மீது பட்டு சுகத்தைத் தந்தது. அந்த சுகத்தின் லயிப்பில் கண்களை மூடிக் கொண்டாள்.

ஆனால் அவனிடத்தில் சலனம் ஏதும் இல்லை. விழித்து அவனைப் பார்த்தாள். அவன் பார்வை எங்கேயோ வெறித்து நின்றது.

'எதை?' அவளது பார்வையும் திரும்பியது.

அங்கு... அந்த கடிதங்கள். அவளது இதயத்து ஆசை சிதறியதுபோல அங்கும் இங்குமாய் சிதறிக்கிடந்தன.

இளம் பச்சை நிற காகிதத்தில் எழுதிய கடிதங்கள் எந்த இடுக்கில் ஒளிந்திருந்தாலும் அவளால் கண்டுபிடிக்க முடியும்.

மின்விசிறியின் திடீர் சுழற்சியினால் மேசையின் மேல் இருந்த புத்தகம் திறந்து கடிதங்கள் விடுதலையாகி வெளி வந்திருக்க வேண்டும்.

'ஆனந்த்' கெஞ்சுவதுபோல அழைத்தாள்.

அவன் அவளை உதறினான். "சே... அவனையும் இப்படித்தான் பசப்பி மயக்கினாயா... அவனை ஒருவழிப்

பண்ணிவிட்டாய்... இப்போ நானா? ஒரு நிமிடத்தில் புத்தி பேதலித்து போனேனே..."

வார்த்தைகளை காறித் துப்புவதுபோல் உமிழ்ந்துவிட்டு வெளியேறினான் அவன்.

கூடையளவு நெருப்புத் துண்டுகளை வாரிக் கொட்டிருந் தால் கூட சகித்திருப்பாள். கனல் கங்குகளால் தெறித்த வார்த்தைகள் தந்த வலியை அவளால் தாங்கமுடிய வில்லை.

என்ன பாவம் செய்ததற்கு இந்த பழி... தெய்வத்தின் மனமும் இளகவில்லையே... தன் துயரம் தீராமலே போகுமா?

மனம் இளகி... மனிதனாகி மனைவியாய் ஏற்றுக் கொள்ள இருந்த நேரத்தில் விதி ஏன் சதிசெய்ய வேண்டும்?

நிராசையில் உள்ளம் வெந்து கொப்பளிக்க படுக்கை யில் கவிழ்ந்து விம்மினாள்.

கதறும் இதயம் ஓயும்வரை அழுது கொண்டு இருந்தாள்.

## 12

இயந்திரம் போல இயங்கிக் கொண்டிருந்தாள் தேவிகா. அதுவும் ஒரு அதிசயம்தான். மனம் செத்துவிட்டால் நடைப் பிணம்தானே... மனதோடு ஒய்ந்து போகாமல் உடல் உறுப்புகள் அதனதன் வேலைகளை மறக்காமல் சரியாக செய்து விடுகின்றனவே...

என்றைக்கு ஆனந்தன் அவளை 'மனைவி' என்று அணைத்து பின் எதிரி என உதறிச் சென்றானோ அவளது



உணர்வுகளும் மரத்துப் போய்விட்டன... உணவு கொள் ளாமல் உறக்கம் வராமல்... உற்சாகம் இல்லாமல்... ஏதோ நானும் வாழ்கிறேன் என்ற வாழ்க்கை.

யாருக்காக வாழ்வு..? ஒவ்வொரு மனைவியும் கணவனுக் காகவே வாழ்வது... வாழ்வின் நோக்கமும் அதுவேதான்..

கணவனை இழந்தால் அவனுடன் அனைத்தையும் இழந்தவளாகிறாள்.

ஆனால் கணவன் இருந்தும் இல்லாதவள் என்றால்... அவள் தாலி அணிந்த விதவைதான்.

அக்கம் பக்கம் கவனம் இருக்காது... அலங்காரத்தில் நாட்டமிருக்காது... அனைத்திலும் சிரத்தை குன்றி தனக்குள்ளே குறுகிக் கொள்வாள்.

இந்த உடம்புங்கூட ஒரு சுமை போல தோன்றிவிடு கிறது... அதில் வனப்பும் ஒரு வதைப்புதான்.

'இறைவா... கணவனுக்கு வேண்டாத இந்த அழகை எடுத்துக் கொண்டு பேயுருவை தருவாயா' என்று புனிதவதியால் கேட்டுப் பெற முடிந்தது... அந்த வரம் தனக்கு இல்லையே... கண்களில் ஒளியின்றி... முகத்தில் மலர்ச்சியின்றி மனதில் விரக்தி குடியேற ஏறக்குறைய சன்யாசினியைப்போல வளையவந்தாள்.

உலகில் உள்ள மற்றப் பெண்களைப் போல கணவனுடன் வாழ்ந்து, குழந்தைகளைப் பெற்று, பேரன் பேத்திகளை பார்த்து... அதெல்லாம் அவளது வாழ்க்கையில் நடக்கப் போவதில்லை.

எந்தப் பிறவியில் யாருடைய வாழ்வைக் கெடுத்த பாவமோ இப்படி அலைக்கழிக்கின்றது. விழிகளிலிருந்து சூடான கண்ணீர் திரவம் திராவகமாய் சுட்டது.

ஆனால் மனதில் சுட்ட தகிப்புத்தான் இன்னும் அதிகம்.

மனப் பெட்டகத்தின் அடியில் அமுக்கப்பட்டிருந்த நினைவுச் சரங்கள் அந்த தகிப்பில் எரிமலையாய் வெடித்தபோது அந்த நினைவுகள் உதிரிப் பூக்களாய் சிதறி விழுந்தன.

சரவணன்...

தன் வாழ்விற்கே எமனாய் மாறுவான் என்று அறியா பேதையாய் அன்று அவனை மனதார விரும்பினாள். காதல் தேவன் என்று பூசித்தாள். அதை இப்போது நினைத்துக் கொண்டாலும் தன் மீது கசந்தது.

அன்று அப்படியில்லையே...

இரவு பகலுமாய் அவனைப் பற்றிக் கனவு கண்டாள். காதல் சாம்ராஜ்ஜியத்தில் அவனது இதயராணி என்று இறுமாந்தாள்.

அது அவனது முகத்திரைக் கிழியும் வரை. எட்டு மாதங்கள்...

அம்மாடி... எத்தனை நைச்சியமாய் நடித்தான். நல்லவன் என்று நம்பச் செய்து ஏமாற்றினான். கவிதைகளை காத லுடன் குழைத்து காணிக்கை செலுத்தினான். அதை நிஜம் என்று நம்பி அவனே உலகம் என்று தன் இதயத்தை அர்ப்பணித்தாள். அவனை குடிவைத்த அந்த இதயத்தை கசக்கி எறிந்துவிட வேண்டும் என்று ஆத்திரம் இப்போது வந்தது.

பெண் புத்தி பின்புத்தியாய் அன்று பேதலித்து நின்றதே... அவனுக்கு சரியாக தன் காதலை வடித்து கடிதங்களாய் எழுதினாள்... எத்தனை மடல்கள்!



அவை அனைத்தும் தன் மகிழ்ச்சிக்கே உலை வைக்கப் போகிறது என்று அறியாமல்...

அன்று...

அவனைக் காணச் சென்றபோது அவள் கண்ட காட்சி... அவளை உறையச் செய்தது. அறையில் அவனுடன் அலங்கோலமாய் ஒரு பெண். பார்த்த அளவில் புரிந்தது அவள் ஒரு மாதிரி என்று.

அசட்டையாய் எழுந்து நிதானமாய் தன் ஆடைகளை சரி பண்ணிக் கொண்டு அவனது தலையணைக் கீழ் இருந்த பர்ஸிலிருந்து ஒரு கணிசமானத் தொகையை தனது ரவிக்கைக்குள் தணித்துக் கொண்டு 'அப்புறம் பார்க் கிறேன்'' என்று கண்ணடித்து விட்டுச் சென்றாள்.

தேவிகா அனைத்தையும் பார்த்துவிட்டாள் என்ற அதிர்ச்சி ஒருகணம்தான்... சட்டென்று அதை மறைத்துக் கொண்டு அசிங்கமாய் இளித்தான்.

''தேவிகா... என்ன இது... சொல்லாமல் கொள்ளாமல் திடீரென்று'' திணறியவாறு சமாளித்தான்.

''ஏன் சொல்லியிருந்தால் முன்னேற்பாடாய் எச்சரிக்கை யுடன் இருந்திருப்பீர்களா?'' எரிச்சலுடன் கேட்டாள் தேவிகா.

சட்டென்று உஷாரானான் அவன். ''இதோ பார் தேவி... திருமணம் ஆகிறவரை ஆம்பிளை கொஞ்சம் அப்படியும் இப்படியுமாய் இருப்பது சகஜம். அதைக் கண்டுக் கொள்ளக்கூடாது. திருமணம் ஆனவுடன் பாரேன். நான் தேவிதாசனாய் இருப்பேன்... என்னை நம்பலாம்!''

கேலியாய் சிரித்தாள் அவள்.

''இத்தனையும் கண்ணால் பார்த்தபின்பு எந்த முட்டாள் பெண் உங்களை மணப்பாள்? அதைவிட பாழுங்கிணற்றில் சந்தோஷமாய் குதிக்கலாம். நல்லவேளை... திருமணத்திற்கு முன்னால் உங்களது சாயம் வெளுத்துவிட்டது. அதுக்கு கடவுளுக்கு நன்றி சொல்லணும்... ச்சே...''

ஆத்திரமாய் திரும்பினவளை இழுத்து நிறுத்தினான் அவன்.

''என்னடி ஊர் உலகத்தில் இல்லாத ஒழுக்கக் கேட்டை கண்டு விட்டாய் நீ... கல்யாணத்திற்குப்பின் உனக்கு தெரிந்திருந்தால் என்ன செய்திருப்பாயாம்? தாலியை கழட்டி எறிந்து விட்டுப் போயிருப்பாயா... கல்லானாலும் கணவன் என்று வாய்மூடிக் கிடந்திருப்பாய் இல்லே...'' எகத்தாளமாய் கேட்டான் சரவணன்.

'இப்படிப் பேச வெட்கமாயில்லே உங்களுக்கு? ஒரு பெண்ணை மதிக்கத் தெரியாத உங்களுக்கு கல்யாணமும் ஒருகேடு. நிறத்தை மாற்றிக் கொள்ளும் பச்சோந்தியென்று தெரியாமல் உங்களைக் காதலித்தேன் பாருங்கள்.... என்னைப் பார்த்தால் எனக்கேக் குமட்டுகிறது... இனி என் முகத்தில் விழிக்காதீர்கள்... உங்களுக்கு ஒரு குட்பை... வருகிறேன்'' சினம் பொங்கக் கூறினாள் தேவிகா.

''அடியே... நீ சொன்னவுடன் நான் விட்டுவிட என்னை என்ன மண்டையில் மசாலா இல்லாதவன் என்று நினைச்சியா... உன் வழிக்கு வந்து உன்னை அடையலாம்னு நினைச்சேன். அது நடக்கவில்லை. இப்ப என் வழியில் உன்னை அடையறேன் பார்...'' கொக்கரித்தவாறே அவள் அருகில் வந்தான் சரவணன்.



''என்கிட்டே வராதே... பாவி... என்னைத் தொட்டால் அழிந்து போவாய்'' பின்னால் நகர்ந்தவாறு அலறினாள்.

''எங்கே... எங்கே... அதையும் பார்த்துவிடலாம்'' கோரமாய் சிரித்துக் கொண்டு அவள் கையைப் பிடித்து படுக்கையில் தள்ளினான். அருவெறுப்புடன் ஒரு குதி குதித்து கட்டிலில் இருந்து இறங்கினாள் தேவிகா.

''உன் மீது வைத்த புனிதமான அன்புக்கு இப்போது வருந்துகிறேன்... என் வழியில் நான் போகிறேன்... என்னை விட்டுவிடு... இனி... ஆ...''

அவன் அவளை இழுத்து அணைத்து முத்தமிட முயல... அவள் முகத்தை அங்கும் இங்குமாய் திருப்பி தவிர்க்க முயன்றாள்.

யானை வேட்டையாடும் ஓநாயைப் போல தன்னை பலாத்காரம் செய்ய நினைக்கும் அவனது வெறியைக்கண்டு அவளுக்கு திகைப்பு ஏற்பட்டது.

ஒரு கணம் மலைத்தாள். மறுநிமிடம் எங்கிருந்து அசுரபலம் வந்ததோ...

மனோ பலத்தால் உடலிலிருந்து வடிந்து கொண்டிருக்கும் சக்தியைத் திரட்டி அவனை உதறித் தள்ளினாள். அதை எதிர்பார்க்காத அவன் நிலைகுலைந்து தரையில் விழுந்தான்.

வெறுப்பையெல்லாம் சேர்த்து 'த்தூ' என்று அவன் மீது காறி உமிழ்ந்தவள் அறையை விட்டு மின்னலாய் ஓடினாள்.

அங்கமெல்லாம் நடுங்கியது. இதயம் வாய் வழியாய் வெளிவந்திடுமோ என்று விம்மியெழுந்தது. கண்கள் இருட்டிக் கொண்டு வந்தது. ஏதோ ஒரு சக்தி அவளது

கால்களுக்கு பலத்தைத் தந்து ஓடச் செய்தது. மாடியிலிருந்து வேகத்துடன் இறங்கியவள் யாரோ ஒருவன் ஏறி வருவதையும் கவனிக்காமல் பறந்தாள்.

அந்த சண்டாளனை விட்டு வெகுதூரம் சென்றுவிட வேண்டும் என்ற ஆவேசத்தில் காற்றைவிட கடுகி விரைந்தாள்.

## 13

மலரும் நினைவுகள்... மலரும் நினைவுகளா அவை...?

இறந்தகால நினைவுகள் கசப்பையும் துன்பத்தையும் தந்தால் அதை என்னவென்று சொல்வது? கசப்பு மருந்து அடிநாக்கில் நின்றுவிடுவது போல இந்த கசப்பான நினைவுகளும் அடிமனதில் தங்கிவிட்டிருந்தது.

சரவணனிடம் இருந்து தப்பித்து வந்தவள் அடித்துப் போட்டவள் போல மூன்று நாட்கள் காய்ச்சலில் விழுந்துவிட்டாள்.

மழையும் இல்லை... பனியும்... இல்லையே... தாய்க்கு வியப்பு...

உடலைத் தாக்கினாலா நோய்..? மனம் அடிபட்டாலும் தான்... அது விரைவாக உடலைத் தாக்குமே!

மூன்று நாட்கள் சுரணையின்றி கிடந்தவள் உடல் தேறிய பின்பு முதல் வேலையாய் அவனது நினைவுகளை அழித்தாள். அவனது கடிதங்களை எரித்தாள். அவனது புகைப்படத்தை நெருப்பில் பொசுக்கினாள்.

அத்துடன் சுட்டெரிக்கும் அவனது உருவத்தையும் நினைப்பிலிருந்து நீக்கினாள்.



தன் மனதைக் கழுவி துடைத்து சுத்தம் செய்ய வெகு பிரயாசைப்பட்டாள்.

சுடும் பாலைக் குடித்த பூனை போல 'காதல்' என்றாலே ஒதுங்கியவள் ஆனந்தனின் அமைதியான... பண்பான நடத்தையில்... பேச்சில் மனம் மாறினாள்... திருமணத்திற்கு இசைந்தாள்.

சரவணனின் நண்பன் என்று தெரிந்திருந்தால் நிச்சயம் ஒதுங்கியிருக்கலாம்... எல்லாம் முடிந்து போன கதை... பெருமூச்சு விட்டாள்...

'ரிங்...' டெலிபோன் செல்லமாய் அவளை அழைத்தது. பேசியது ஆனந்தன்... யாரோ நண்பன் வீட்டில் விருந்து என்றான்.

மனைவியை அழைத்து வரும்படி வற்புறுத்தலாம். தயாராகும்படி சொன்னான்.

சலிப்பாய் தயாரானாள்.

மரப்பாச்சி பொம்மையைப்போல உணர்ச்சியின்றி செயல்பட்டாள்.

எளிமையான அலங்காரம்... போதும்... யாருக்காக வேண்டும்..?

கொண்டவனின் கண்கள் மூடியிருக்கிறதே... கூட இருப்பவர்களுக்காகவா...வேண்டாம்...

சாவி கொடுத்த பொம்மையென நடந்துவரும் மனைவியை ஓரக்கண்ணால் கவனித்தான் ஆனந்தன். முகச் சுளிப்புடன் "இதென்ன... நல்லதாய் உடுத்தி வரக்கூடாதா?" என்று கேட்டான்.

மவுனம்.

''ஊருக்கெல்லாம் தம்பட்டமா? மணவாழ்க்கையில் சந்தோஷமில்லை என்று...''

''ஏன்...? நன்றாக உடுத்திக் கொண்டால் மட்டும் குஷியாய் இருப்பதாய் படுமோ... முகம் காட்டி விடுமே... மனைவி என்று அவர்கள் முன் நீங்கள் வழியப்போவதில்லை. நானும் அதைக் கண்டு உருகப் போவதும் கிடையாது. விடுங்கள்'' 'நறுக்'கென்ற பதிலைச் சொன்னாள்.

அதற்குமேல் அவன் பேசினால்தானே...

நண்பனின் குழந்தைக்கு பிறந்த நாள் வைபவம். பட்டும் பகட்டுமாய் வந்த அனைவரின் மத்தியில் மிக எளிமையாய் வந்திருக்கும் அவளைக் கண்டு அனைவரும் கண்களை விரித்தனர்.

''என் மனைவிக்கு எளிமையாய் இருக்கவேண்டும்' சமாளிப்பதற்கு சொன்னான்.

'பொய்... பச்சைப் பொய். வெறுக்கும் கணவனுக்காக நான் போட்டுக் கொண்ட கோலம்' என்று கணவனின் முகத்திரையைக் கிழிக்க முடிந்தால்... முடியாதே... அவளால் மட்டுமல்ல... எந்தப் பெண்ணாலும்தான்... பெண்மையின் பலவீனம் ஆணிற்கு பலம்...

விருந்து நடந்து கொண்டிருந்தது.

தொலைக்காட்சியில் அரைகுறையாய் பெண்கள் அசிங்கமாய் நெளிந்து கொண்டிருந்தார்கள். காண சகிக்காமல் பி.பி.சி.க்கு திருப்பினர்.

பாம்பைப் பற்றிய செய்திப் படம். மின்னலாய் நெளிந்து சென்ற அழகு...



''இதே இருக்கட்டும்... பொது அறிவு தரும்.''

''ஆமாம்... அந்த நெளிசலுக்கு பாம்பின் நெளிவு பிரமாதம்... ரசிக்கலாம்...''

''பாம்பைத் தேடிக் கண்டுபிடித்து... லாவகமாய் எடுத்து... பைகளில் நிரப்புவது... அம்மாடி... எப்படி முடிகிறது..?'' அங்குள்ளவர்களில் ஒருவர் வியப்புடன் பேசினார்.

''அதுவும் ஒரு உயிர். எதற்கு பிடித்து வதைக்க வேண்டும்...?'' பாம்பினத்திற்கு பரிந்து ஒருவர்.

''அதுசரி...விஷத்திற்கு முறிவு விஷம்தான்... அதுவும் மருத்துவத்தில் பாம்பின் விஷம் அத்தியாவசியமாய்ப் படுகிறது என்கிறார்கள். எத்தனையோ சோதனைகளுக்கு பாம்புகள் தேவைப்படுகிறது...''

''ஆனாலும் பாம்பின் நிலை பரிதாபம்தான். அதுவாக சென்று யாரையும் தீண்டுவதில்லை... தன் தற்காப்பிற்காகத்தான் கொத்துகிறது...'' யாரோ ஒருவரின் விளக்கம்.

''ஆமாம்... உண்மைதான். பாம்பிற்குப் பல்லில் நஞ்சு என்றால் மனிதர்களில் எத்தனையோ பேர் உடம்பெல்லாம் நஞ்சாய் இருக்கிறார்களே... அந்த நஞ்சு வெளியே தெரியாமல் கொல்லுகிறது'' இப்போது ஆனந்தன்தான் பேசினான்.

அவனது வார்த்தைகள் தனக்காக என்பதை அறிந்து கொண்டாலும் உதட்டைக் கடித்துக் கொண்டாள்.

உடம்பெல்லாம் விஷம் ஏற்றிக் கொண்டாலும் வெளி நஞ்சு ஏதும் செய்யாது என்றும் அவள் படித்ததுண்டு...

'சிவகாமியின் சபதம்' நாவலில் நாகநந்தி அடிகளைப் போல... கணவனின் வார்த்தைகளில் கலந்திருந்த நஞ்சு மனதை கொத்திக் கொத்தி... அவள் உடம்பை தயார்ப் படுத்தி விட்டிருக்கிறதே... இனி எந்த விஷம் கொல்லும்?

இரவில் உடலும் உள்ளமும் களைத்துப் போய் படுத்த வுடன் உறங்கிப் போனாள்.

கனவில் பெரிய பாம்பு ஒன்று சீறி வந்து அவளை கொத்த வந்தது.

''ஆனந்த்'' அலறுகிறாள்... பாம்பின் தலை ஆனந்தின் முகமாய் மாற அவளைக் கொத்த நெருங்குகிறான்.

''அய்யோ...!'' அலறி விழித்தவள் வியர்வையில் நனைந்து போயிருந்தாள்.

ச்சே... இது என்ன பயங்கர கனவு... உடம்பு நடுங்க தலை யணையில் இன்னும் முகம் புதைத்துக் கொண்டு உறங்க முயன்று முடியாது தவித்தாள். அவளது தவிப்பை அறி யாமல் நிம்மதியாய் உறங்கிக் கொண்டிருந்தான் ஆனந்தன்.

## 14

இயற்கைக்கு என்ன சீற்றமோ...! இடியும் மின்னலுமாய் மழை பொழிந்து கொண்டு இருந்தது.

வீட்டில் தேவிகா மட்டும்... இந்த மழையில் ஆனந்தன் எங்கே இருப்பான்? பாவம்... சிக்கிக் கொண்டிருப்பானோ?

அவளது பெண்மனம் கணவனுக்காக தவித்தது. 'பளீர்' என்ற வெளிச்சத்துடன் மின்னல் வெட்டியது. மனைவியைப் பிரிய சகிக்காத கணவன் போல அதை ஒட்டி இடி முழங்கியது.



காதுகளைப் பொத்திக் கொண்டாள்.

கடவுளே... அவரை எங்கேயாவது பத்திரமாய் நிற்கச் செய்... வேண்டினாள்.

மணி ஆறு... வெளியே இருட்டிக் கொண்டிருந்தது. வெளியே எட்டிப் பார்ப்பதும் உள்ளே செல்வதுமாய் பரிதவித்தாள்.

அவன் என்ன சின்ன பிள்ளையா என்று சமாதானமாய் நினைத்துக் கொண்டாலும் அதையும் மீறி ஏதோ வயிற்றில் பிசைந்தது.

சகதி கலக்கலாய் மழைநீர் சாலையைக் கழுவிக் கொண்டு ஓடியது 'ஓ...' என்ற பேரிரைச்சல். பலத்த மழை சிறுமழையாகி பின் தூறலாய் விழும்போது மணி ஒன்பது. ஆனந்தனைக் காணோம். இதயத்தைக் கையில் பிடித்துக் கொண்டு காத்திருந்தாள்.

தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசக்கூடாதா? மனைவி வேதனையுடன் துடிப்பாளே என்று எண்ணம் இல்லையே... முதலில் மனைவி என்ற எண்ணமே இல்லை.

சிரமத்துடன் நேரம் நகர்ந்தது. கடிகாரத்தின் முள் நொண்டிக் கொண்டிருப்பது போல பிரமை. ஒன்பது இருபதுக்கு தொலைபேசி கிணுகிணுத்தது. ஓடிச் சென்று எடுத்தாள்.

பேசியது ஆனந்தன் இல்லை... ஏமாற்றம். ஏதோ மருத்துவமனையிலிருந்து 'அலோ... திருமதி ஆனந்தன்... நிர்மலா மருத்துவமனையிலிருந்து பேசுகிறோம்... உங்கள்

கணவர் சிறுவிபத்தில் சிக்கி சேர்க்கப்பட்டிருக்கிறார்... பதறவேண்டாம். சீக்கிரம் வரவும்..."

கேட்டதும் உடம்பெல்லாம் ஆடிப்போனது. மருத்துவ மனையின் இருப்பிடத்தைக் கேட்டுக் கொண்டு புறப்பட்டாள்.

வெளியே மழை நின்று போயிருந்தது.

## 15

அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தான் ஆனந்தன்.

அவனுக்காக 'காம்ப்ளான்' கலந்து கொண்டிருந்தாள் தேவிகா.

பாவம்... வயிறு காய்ந்து இருக்கிறான். ஊட்ட வேண்டும் என்று அவசரமாய் செயல்பட்டாள்... அவளும் களைத்துக் காணப்பட்டாள்.

சும்மாவா... மூன்று இரவு... பகல்கள்... முழுக்க அவளே கண்விழித்து கணவனைப் பார்த்துக் கொண்டிருந்ததில் சோர்வு, அசதி.

நல்லவேளையாய் அடி பலமில்லை.

விபத்து என்றதும் ஏதேதோ நினைத்து நடுநடுங்கி ஓடி வந்தாள்...

சிறு விபத்துதான்.

மழைநீர் தேக்கத்தில் குண்டும் குழியுமான பாடாவதி சாலையில் வண்டி தடுமாறி விழுந்ததில் கையில் பலத்த



அடி... நெற்றியில் கல்குத்திக் கிழித்ததில் காயம்.. உதட் டோரம் இரண்டு தையல்... நல்ல வேளையாய் எலும்பு களுக்கு எந்தவித சேதமும் இல்லை.

யாரோ ஒரு புண்ணியவான் அருகில் இருந்த இந்த 'நர்ஸிங் ஹோமில்' சேர்த்துவிட்டு சென்றிருக்கிறார்... மனதினுள் நன்றி சொன்னாள் தேவிகா... இரண்டாம் நாள் தான் நன்றாய் விழித்துப் பார்த்தான் ஆனந்தன்.

தலையில் வெட்டுவது போல வலி... உதடுகளைப் பிரிக்க முடியாமல் இம்சை...

சாடையாய் கேட்டான்... "எங்கு இருக்கிறேன்... உனக்கு யார் சொன்னது....?"

பொறுமையுடன் தன்னை கவனிக்கும் அவளை கூர்ந்து பார்த்தான். மனம் நீர் ஊற்றிய வயலாய் ஆனது... இளகி நின்றது.

பெருந்தன்மை என்பது பெண்ணினத்திற்கு மட்டுமே உரித்தான ஆஸ்தியோ... நஞ்சாய் கக்கினாலும் துடைத்துக் கொண்டு அமுதினை ஊட்டும் பண்பு அவளுக்கு மட்டும் தான் வருமா? இறைவன் தந்த சீதனம் போலும். கற்காலம் தொடங்கி தற்காலம் வரை பெண்ணிற்கு கணவனே கண்கண்ட தெய்வம்.."

அவள் ஒண்டுவது துணைவனின் நிழலில்தான்... அந்த நிழலும் அவளை இம்சித்தாலும் சரி. அவனைக் காட்டிக் கொடுப்பதில்லை... தன்னையே கணவன் சுட்டுப் போட்டாலும் அவனை மன்னித்து அவனது குற்றத்தை தன்னுள்ளே புதைத்துக் கொண்டு அதனுடன் புதைந்து போய்விடுகிறாள்.

மனிதன் தன்னுள் பலமும் சக்தியும் உள்ளவரை தன்னைத் தவிர வேறு எதையும் நினைப்பதில்லை... சக்தியை இழந்து... பலமும் வடிந்து படுக்கையில் கிடக்கும் போதுதான் மனம் தன் நினைவுகளை துவைத்து... அலசி... சலவை செய்து பார்க்க முயலுகிறது.. தன் எண்ணங்களைத் தூய்மையாக்க நினைக்கிறது... அப்போது சுயநலம் அடிப் பட்டுப் போகிறது...

மீண்டும் உடலில் வலுவும் நடமாடும் தெம்பும் ஏறி விட்டால்... பரந்தநோக்கு மாயமாகி மறுபடியும் சுயநலப் பிசாசு குடியேறி விடுகிறது... ஆனந்தனின் நிலையும் அதுபோலத்தான்..

மனைவியை வக்கிரமாய் ஆட்டி வைத்தவன். படுக் கையில் அவளது உதவியை நாடி இருந்த நிலையில் மனம் நெகிழ்ந்தது உண்மை... உடல் பலவீனம் உள்ளதையும் பலவீனமாக்கியது... அவள் மீது இரக்கம் கொள்ளச் செய்தது.

இரக்கம் அன்பின் அடிப்படை உணர்வு. இரக்கத்தி லிருந்து பரிணமிப்பது அன்பு. அந்த் அன்பே காதலாக மாறலாம்... பாசமாக மாறலாம்... பக்தியாகவும் மாறலாம்.

மனைவியை மென்மையாய் அழைத்தான். 'தேவிகா...''

கழுவிவந்த 'பிளாஸ்கை'யும் தம்ளரையும் அலமாரியில் அடுக்கிக் கொண்டிருந்தவள் மெல்ல திரும்பினாள்.

'களைத்திருக்கிறாயே... வீட்டுக்குப் போய் ஓய்வெடுக்கக் கூடாதா?''



தன் காதுகளையே நம்பமுடியவில்லை... கரிசனத்துடன் சொல்வது தன் கணவன் தானா? உள்ளுள் சந்தோஷம் நீர்க்குமிழியாய் வெடித்தது... ஆனால் இது நிரந்தர மில்லை... அவன் இப்போது தன் தயவில்... அசந்து கிடந்த உள்ளம் வேறு எண்ணங்களை நினைத்துப் பார்க்கவும் பலமில்லாமல் கிடக்கிறது. அதனால்தான் இந்த 'அய்யோ... பாவம்...' தனக்கு இந்த உணர்வு தேவையில்லை... வேண் டாம்...

''பரவாயில்லை... இருக்கிறேன்.'' என்று அவனுக்கு பதிலாய் தந்து, டாக்டர் எழுதி தந்திருந்த மருந்து சீட்டினை எடுத்துக் கொண்டு மருத்துவமனை வளாகத்தில் இருந்த மருந்துக் கடைக்குச் சென்றாள்.

மருந்தும், சில்லரையும் பெற்றுக் கொண்டு, சில்லரை சரி யாக இருக்கிறதா என்று எண்ணிக் கொண்டு வந்ததால் எதிரே வந்த இளைஞனை கவனிக்கவில்லை.

''சாரி... மேடம்... கவனிக்கவில்லை...'' அவனே மன் னிப்புக் கேட்டுக் கொண்டான்.

''தவறு என் மீதுதான்... எதிரே பார்க்கவில்லை'' மறுமொழி உரைத்து விட்டு நகர்ந்தாள்.

சிறிது தூரம் வந்திருப்பாள்.

''மேடம்'' அவன்தான்.

'ஏதாவது கீழே போட்டுவிட்டோமோ' புருவச் சுளிப் புடன் திரும்பினாள் அவள்.

''வந்து... நீங்கள் சரவணனுக்குத் தெரிந்தவர்தானே?''

''சுளீர்'' என்று சாட்டையால் விளாசியது போல திகைப்பு... இவன் யார்? சரவணனுக்கு வேண்டியவனா..?

''ஏன் அப்படி பார்க்கிறீர்கள்...? நான் உங்களை நிறைய தடவை பார்த்திருக்கிறேன். அவன் இருந்த விடுதியில் தான் நானிருப்பது. பாவம்... அநியாயமாய் சாவு இல்லையா? சாரி... மனப்புண்ணைக் கிளறிவிட்டேனோ...?'' உண்மையில் வருந்திய குரலில் வினவினான்.

''காலம் என்ற மருந்து எந்த மனப்புண்ணையும் ஆற்றி விடக் கூடியது... என்னுடையதும் ஆறிவிட்டது.''

கழுத்தை அவனது பார்வை நோட்டமிட்டதைக் கண்டாள்.

''உங்களுக்கு மணமாயிற்று இல்லையா... ஆமாம் இங்கே எதற்கு... ஏதாவது உடம்பு சரியில்லையா என்ன?''

''என் கணவருக்கு சிறு விபத்து. இங்குதான் சேர்க்கப்பட் டிருப்பது. இன்னும் இரண்டு நாட்களில் அனுப்பிவிடு வார்கள் என்று நினைக்கிறேன்.''

''நீங்கள்..?'' அவனைக் கேட்டாள்.

''ஆறு மாதத்திற்கு ஒருமுறை இரத்த தானம் தர இங்கு வருகிறேன். அதை ஒரு அறமாய் நினைத்து செய்து வருகிறேன். ஏதோ என்னால் ஆன கைங்கர்யம்... அதில் ஒரு ஆத்ம திருப்தி... வாருங்கள்... நானும் உங்கள் கணவரைப் பார்க்க வருகிறேன்.''

திடுக்கிட்டாள் தேவிகா.

இவனுடனா... சரவணனுக்கு தெரிந்தவன் என்றால் போச்சு... வேதாளம் இப்போதுதான் மரத்திலிருந்து இறங்கி யிருக்கிறது. மறுபடியும் முருங்கை மரம் ஏறிவிட்டால்...?

இவன் ஏதாவது சரவணன் பெயரெடுக்க... கள் குடித்த குரங்கை தேளும் கொட்டியது போல அல்லவா ஆகிவிடும்.



கூடாது... இவனை இங்கேயே தவிர்த்துவிட வேண்டும். தயங்கியவாறு ''நான் வரும்போதுதான் தூங்க ஆரம் பித்தார். நீங்கள் வந்தாலும் பேசமுடியாது. இன்னொருநாள் ஆகட்டுமே'' என்று கூறி சமாளித்தாள்.

நாளை மறுபடியும் அவன் வரமுடியாது என்று பலமான நம்பிக்கையுடன்.

''ஓ... பரவாயில்லை... அப்புறமாய் வருகிறேன்... ஓ... சாரி... என் பெயரைச் சொல்ல மறந்து போனேன்... சத்திய ராஜ் வரட்டுமா?''

ஏதோ பெரிய கண்டத்திலிருந்து தப்பிய நிம்மதியுடன் நடந்தாள்.

# 16

இராமேசுவரம் தாண்டினாலும் சனீசுவரன் தப்பாது என்று சொல்வார்களே... அதுபோல இக்கட்டுகளை முயற்சி செய்து தவிர்த்தாலும் அதுவாய் தேடி வந்து நின்றால் என்ன செய்ய முடியும்? தேவிகாவிற்கும் அதேதான்.

ஒரு வழியாய் அந்த சத்தியராஜை சமாளித்து அனுப்பி வைத்து 'அம்மாடி' என்று பெருமூச்சுவிட்டாள்.

இரு நாட்கள் கழித்து அவன் வந்து நிற்க வேண்டுமா? மனதுள் எரிச்சல் 'சுர்' என்றது. இதென்ன இப்படி ஒரு அன்புத் தொல்லை... இவன் வரவில்லையென்று இங்கு யார் அழுதார்கள்.

இவன் வந்து போன பிறகு என்னென்ன களேபரம் வரப் போகிறதோ ஏதோ வந்தோம் போனோம் என்றில்லாமல்

அசட்டு பிசட்டு என்று அந்த பாவி பெயரைச் சொல்லி வைத்தால் ஆனந்தனுக்கு மறுபடியும் 'சாமி' வந்துவிடுமே...

நடுநடுங்கி நின்றாள் தேவிகா.

''அலோ... உங்களைச் சந்தித்ததில் மிக்க மகிழ்ச்சி.''

ஆனந்தனின் கண்களில் கேள்வி தெரிந்தது. 'யார் இவன்?'

''மேடம் என்னைப் பற்றி சொல்லவில்லையா...? நான் சரவணனுக்குத் தெரிந்தவன். ஒரே விடுதிதான் அறை வாசம் வேறு... சாருக்கு விபத்துன்னு சொன்னாங்க. பரவா யில்லையா... உங்களையும் பார்த்திருக்கேனே... அப் பப்போ சரவணனைப் பார்க்க வருவீர்கள் இல்லையா?'' கலகலவென்ற நீரோடையாய் அவன் வார்த்தைகளைக் கொட்டிக் கொண்டிருந்தான். ஆனந்தனின் முகம் கறுத்துப் போனது.

நெருப்புக் கோழி போல எங்கேயாவது தரையினுள் முகம் புதைத்துக் கொள்ள வேண்டும் போல் இருந்தது. ஓட்டம் பிடிக்க நினைத்தாலும் கால்கள் நகர வேண்டும்! வந்தவன் இன்னும் என்னென்ன உளறி வைக்கப் போகிறானோ... எரியும் கற்பூரமாய் தான் காற்றில் கரைந்து போனால் தேவலையே என்று எண்ணித் துடித்தாள் தேவிகா.

சோதனைமேல் சோதனை... விடிவே கிடையாத வாழ்க்கை... இறைவன் கண்களை இழுத்து மூடிக் கொண்டிருக்கிறான். கேட்கக் கூடாது என்று நினைத்தாலும் காதுகளுக்கு வெட்கம் இல்லையே...

''என்ன செய்வது சார்... யாருக்காவது ரத்தம் தேவைன்னு கேட்டதும் ஓடிப்போய் கொடுத்துவிட்டு வந்தால் சமாதானம்.



இன்னும் சொல்ல வேண்டும் என்றால் எவ்வளவுக்கு ரத்ததானம் செய்கிறோமோ அத்தனைக்கு உடம்புக்கு நல்லதாம்... சொல்கிறார்கள். பாவம் சார் சரவணன்... அவனும் ஆசைப்பட்டு என்னோட வந்தான் ரத்ததானம் என்று... ஆனா இரத்தப் பரிசோதனையில் தெரிய வந்தது அவனுக்கு எய்ட்ஸ் வியாதின்னு... அது அதிர்ச்சிதான்...''

சகிக்காமல் நின்றிருந்த தேவிகா அந்த வார்த்தைகளைக் கேட்டு கண்கள் மலர... உள்ளம் குதிக்கத் திரும்பினாள்.

இந்த செய்தி புதிது! தேவ அமுதமாயிருந்தது அவளுக்கு... உயிரை வாழ வைக்கும் சஞ்சீவினி போல இருந்தது.

இது போதுமே... ஆனந்தனுள் கொக்கரிக்கும் வக்கிரப் பேயை ஓடஓட விரட்டிவிடுமே... வந்தவன் வளவள வென்று பேசினாலும் நன்மையைத்தான் செய்திருக்கிறான். வந்தானே என்று சபித்தது குறித்து வெட்கினாள்.

சரவணன் நன்னடத்தையுடையவன் அல்லன் என்று ஆனந்தன் புரிந்து கொண்டால் போதும்.

''நான் நினைக்கிறேன் சார்... அவன் தற்கொலை செய்து கொண்டதே தனக்கு 'எய்ட்ஸ்' வந்திருப்பது யாருக்கும் தெரியக்கூடாது என்பதால்தான் என்று... காதல் தோல்வின்னு வெளிப்பூச்சு... எப்படியோ அவன் இருந்திருந்தாலும் வாழ்ந்திருக்க முடியாது. இல்லையோ... நீங்க என்ன நினைக்கிறீங்க சார்? தன் முடிவை தானே தேடிக் கொண்டது சரி என்கிறீர்களா?''

ஆனந்தன் பதில் தரவில்லை. ஏதோ யோசனையில் இருந்தான்... சத்தியராஜே தொடர்ந்தான். ''மனுசனுக்கு நல்ல

ஒழுக்கம் இருக்க வேண்டும் சார்... நஞ்சுன்னு தெரிஞ்சும் சாப்பிட்டுப் பார்த்தால் என்ன என்று நினைக்கலாமா? கெட்ட பெண்கள் சகவாசம்... ஆனா பாருங்க சார்... கடைசி வரைக்கும் தன்னை ஒழுக்கமானவனாய் காட்டிக் கொண்டு போய் விட்டதுதான் அவனது சாமர்த்தியம்...''

தனக்கு மட்டுமே தெரிந்த ரகசியம்... அதைச் சொல்ல வேண்டும் என்ற துடிப்பில் சொன்னான் போலும்... எது எப்படியோ... தேவிகாவிற்கு அது திகைப்பாகவும் இருந்தது... நிம்மதியையும் தந்தது.

தன்னை பலாத்காரம் செய்ய நினைத்தானே... அந்த நினைவில் உடம்பு உதறிக் கொண்டது. எத்தனை பெரிய கண்டத்தில் இருந்து தப்பினோம்... நினைக்கும் போதே ஆயிரம் பூரான்களின் ஊரல்... மனதினுள் அருவெறுப்பு...'

இதை ஆனந்தும் தெரிந்து கொண்டாயிற்று... சரவணன் மோசம் என்று இப்போது உணர்ந்திருப்பான் என்பதும் நிச்சயம். அந்த நம்பிக்கையில் சத்தியராஜின் தலை மறைந்ததும் கேட்டாள். ''இப்போதாவது நம்புவீர்களா?''

தீர்க்கமாய் அவளை ஒரு பார்வை பார்த்துவிட்டுப் பின் சொன்னான்... ஒவ்வொரு வார்த்தையாய் அழுத்தி... நிதானமாய்... ''ஆமாம்... இந்த சத்தியராஜை எங்கே பிடித்தாய்...? எவ்வளவு பணம் தந்தாய்...? என் நண்பனுக்கு 'எய்ட்ஸ்' என்று கற்பனைக் குதிரை ஓட்டும் யோசனை உன்னுடையதா? அவனுடையதா?''

அவனது குரலில் ஏளனம்.

அந்த பெரிய ஆஸ்பத்திரிக் கட்டிடம் அப்படியே இடிந்து தன் தலைமேல் விழுவது போல நொறுங்கிப் போனாள் தேவிகா.



## 17

ஆனந்தன் மருத்துவமனையிலிருந்து வந்து ஒரு வாரமும் ஓடிவிட்டது. உதட்டோர காயமும், நெற்றியில் பட்ட காயமும் ஆறிவிட்டிருந்தது.

கைக்கட்டு மட்டும் இன்னும் அவிழ்க்கப்படாமல் இருந்தது.

இப்போதும் மனைவியின் துணை அவனுக்கு மிகவும் அவசியமாயிருந்தது. பொறுமையுடன் தாய்போல பார்த்துப் பார்த்து செய்யும் மனைவியைக் குற்ற உணர்வு குறுகுறுக்கப் பார்த்தான்.

தாய்க்குப் பின் தாரம் என்பதன் முழுப் பொருள் இதில் தானோ...?

பாவம் எத்தனை தூரம் இவளது மனதைக் குத்திக் கிளறினாலும்... வார்த்தைகளால் இழிவுப் படுத்தினாலும் முகச்சுளிப்பின்றி தனது பணிகளைத் தொடருகிறாளே...

இவளைக் கொடுமைப்படுத்துவது செத்த பாம்பை அடிப்பது போல்தான்.

இதற்கு ஒரு முடிவு செய்தாக வேண்டும். இனி சேர்ந்து வாழ்வது என்பது இயலாத ஒன்று. வாழை மறுகுலை தள்ளுவது போல...

நண்பனின் வாழ்வைக் கெடுத்தவள்... அவன் இறப்பிற்கு காரணமானவன் என்ற நினைவு நெஞ்சினுள் கடைசி வரைக்கும் முள்ளாய் குத்த அவளுடன் எப்படி சேர்ந்து வாழ்வது?

விவாகரத்துதான் சிறந்த வழி... ஆமாம்... வெகு விரைவில் அதற்கு ஏற்பாடு செய்தாக வேண்டும்.

ஒப்புவாளா...? செய்வாள்... அவளுக்கும் இந்த நரக வாழ்க்கை போதும் என்று ஆகியிருக்கும். விட்டதடி ஆசை விளாம்பழத்து ஓட்டுடன் என்று இந்த வாழ்க்கையிலிருந்து ஓட்டம் பிடிப்பாள். அவள் வழியில் அவள்... என் வழியில் நான்... இது விஷயமாய் அவளிடம் பேச வேண்டும்... அதுவும் கூடிய சீக்கிரமே...

அவனது கண்கள் தொலைக்காட்சியில் பதிந்திருந்தாலும் மனம் எண்ணங்களை மென்று கொண்டு இருந்தது.

அதே சமயம் தேவிகாவிற்கு அதே விசயம் பற்றி வேறு விதமாய் சிந்தனை...

தனது வாழ்வில் இனி ஒளி இல்லை.... வசந்தம் இல்லை... பகலவனைக் காணாமலே அஸ்தமனம்... இதுதான் தனது விதி என்றால் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

திருமணம் என்பது இறைவனின் கை முடிச்சு, இம்மைக்கும் மறுமைக்கும் இனிவரும் பிறவிகளுக்கும் தொடரும் என்பார்கள். இந்த ஒரு பிறவியில் அலுத்து சலித்துப் போயாயிற்று... அனைத்துப் பிறவியில் வரும் துன்பங்களை ஒட்டு மொத்தமாய் அனுவித்தாயிற்று.

அதனால் மனம் துவண்டு போகவில்லை. மங்கையர் மனம் சூட்சுமமானதுதான். ஆனாலும் எத்தனை துன்பங்கள் வந்தாலும் எதிர்கொள்ளும் சக்தி பெண் மனதிற்கு உண்டு... அதுவும் வரப்பிரசாதம்தான்.

நாணலைப் போல...

மெல்லிய நாணலை பெரும்புயலாலும் வீழ்த்த முடியாது... புயலுக்கும் தோல்விதான்...



வளைந்து கொடுக்கும்... தரையைத் தொடும்... ஆனால் அடியோடு வீழ்ந்து விடாது. மறுபடியும் நிமிர்ந்து விடும்.

பெண்களும் அப்படித்தானே ஆண்களின் கொடுமைக்கு வளைந்து கொடுக்கலாம். அதிகாரத்திற்கு தலை வணங்க முடியும். தன் சகிப்புத்தன்மையால் துன்பங்களைத் துடைத்துப் போட்டு நிமிருவார்கள்.

தேவிகாவும்தான்... நிமிர்ந்தாள்.

அடிபட்டு அடிபட்டு இரும்பு பக்குவம் பெறுவது போல அவள் மனமும் பக்குவ நிலையை எய்தியது. எதற்கும் ஒரு எல்லை உண்டு... அந்த எல்லையைத் தொட்டால் அதற்கு பின் சலனமில்லை. அதுவே முற்றுப் புள்ளி.

அவளது உள்ளம் நிராசையின் எல்லையைத் தொட்டுவிட்டு முற்றுப்புள்ளியென மோன நிலைக்கு ஆட்பட்டது.

இனி ஆனந்தன் 'மனைவி' என்று தன்னை மதிக்காமல் போனாலும், அவன் தன் கணவன் என்றே நினைத்து தன் காலத்தை முடித்துக் கொள்ள வேண்டும்.

ஏதோ கடவுளின் கருணையினால் சரவணனிடம் இருந்து தப்பியாகி விட்டது. நெஞ்சில் வஞ்சம் வைத்து வாயினால் நஞ்சைக் கக்கினாலும் ஆனந்தன் ஒழுக்கம் கெட்டவனல்ல... நடத்தையில் அப்பழுக்கு சொல்ல முடியாது.

கல்லினுள்ளும் தேரை உண்டு... குற்றம் காணில் இல்லை. அவனிடத்தில் குறைகள் இருந்தாலும் என் கணவன் 'சீலன்' என்று பெருமிதத்துடன் சொல்லிக் கொள்ளலாம். அதுபோதும். கடைசிவரை எசமான் அடித்தாலும் வாலாட்டும் நாய் போல இவன் காலடிகளில் தன் வாழ்க்கையை கழிக்க வேண்டும்.

தொலைக்காட்சியில் ஏதோ பழையப் படம் ஓடிக் கொண்டிருந்தது. வில்லன் நாயகியைக் கற்பழிக்க முயன்று கொண்டு இருந்தான்.

'கலீர்' சப்தம் கேட்டு அதிர்ந்து திரும்பினான் ஆனந்தன்.

காபியை கொட்டிவிட்டு தம்ளர் உருண்டு கொண்டு இருந்தது.

தேவிகா தொலைக்காட்சியை வெறித்தாள். அவளது முகம் சிவந்து போயிருந்தது. கண்கள் தெறித்து விடும் போல் விரிந்திருந்தன.

நாயகி புழுவாய்த் துடித்தாள். வில்லன் அவளைப் புரட்டிக் கொண்டு இருந்தான்.

''அணைத்து விடுங்கள்... ப்ளீஸ்... அணையுங்கள்...'' தேவிகா கூறினாள். காற்றில் அறுந்து விழுந்த கொடிபோல உடம்பு துவண்டது. நடுங்கிய கைகளில் முகம் புதைத்து விம்மினாள் அவள்.

இனி கூடாது என்று ஒதுக்கி வைத்த எரிச்சலும் ஆத்திரமும் அவனையும் கேட்காமல் சீறிவந்தது.

''எதற்கு இப்போது அழுகை... ஒரு வேளை இந்தக் கண்ணீருக்கும் ஒரு கதை இருக்கிறதா என்ன?''

நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். கண்கள் சிவந்து போயிருந்தன. கண்ணீரின் ஈரத்தில் கன்னங்கள் பளபளத்தன.

இதழ்கள் துடிக்க ''ஆம் என்றாலும் அதை நீங்கள் நம்பப் போவதில்லை. விடுங்கள். உங்களைப் படைத்தபோது ஆண்டவன் பாறையில் கல்லெடுத்து உங்களது இதயத்தைப் படைத்து விட்டாரோ என்னவோ.. நண்பர் மீது இருக்கும் மூர்க்கத்தனமான நம்பிக்கையில் சிறிதளவு கட்டிய மனைவி மீது இல்லாமல் போனது என் துர்பாக்கியம்தான்'' என்றாள் அவள்.

பின்பு கண்களைத் துடைத்துக் கொண்டு ''நீங்கள் கேட்டாலும் சரி.. காதைப் பொத்திக்கொண்டாலும் சரி.. நடந்ததை சொல்லித்தான் தீருவேன்.'' உறுதியாய் கூறினாள்.

கேட்டுவிட்டு ''அட.. இன்னொரு கட்டுக்கதையாக்கும்'' என்று ஏளனம் செய்தான்.



''ஏன்.. உங்கள் நண்பர் உங்களிடம் கூறியது கட்டியகதையாக இருந்திருக்க முடியாதா?'' வெடுக்கென்று பதில் தந்தாள் தேவிகா. நடந்தவற்றை 'கடகட' என்று சொல்லி முடித்தாள்.

''உடம்பு எல்லாமே நஞ்சாய் இருந்தவர் உங்களது அருமை நண்பர்தான். உங்கள் கண்களுக்கு பழுதாய் தெரிந்தது படமெடுத்த நாகமாய் என் பக்கம் வந்தது. கொத்த வந்து தோற்றுப்போனது.''

''ஓ.. அன்றைக்கு உன்னை நச்சுப்பாம்பு என்றேனே.. அதை என்னிடம் திருப்புகிறாயா.. பாவம் உன் முயற்சி பலிக்காமல் போனது.'' எகத்தாளமாய் சொல்லிவிட்டு சென்றான் அவன். ஏமாற்றம் கவ்விக்கொள்ள அப்படியே நின்றாள் தேவிகா.

# 18

ஆத்திரம் தீர மொட்டை மாடியில் நடந்து தீர்த்தான் ஆனந்தன்.

இளம்பிறை வானத்தில் வெள்ளிக்கம்பியாய் தெரிந்தது. காற்று இதமாய் வீசிக்கொண்டிருந்தது. பறவைகள் மரத்திலிருந்து 'கீச்கீச்' என்று ஒலி எழுப்பின.

அத்தனையையும் ரசிக்கவிடாமல் செய்தது கோபம்... கால்கள் ஓயும்வரை நடந்தான். மெல்ல கோபம் மறைந்தது. ஆத்திரம் குறைந்துபோனது. மனம் சமனப்பட்டது.

மனைவியின் பேச்சிலும் உண்மை இருக்குமோ.. அவன் மனம் கேள்வி போட்டது.

படத்தில் பலாத்காரம் பார்த்துவிட்டு அழுகிறாள் என்றால் ஒருவேளை.. இருக்குமோ...?

இதை எப்படி நம்புவது....? ஒரு நாளும் சரவணன் கெட்டவனாய் தன் கண்களில் பட்டதில்லையே.. இதில் 'எய்ட்ஸ்' என்று வேறு... அந்த சத்தியராஜ் யார்?

அப்படியே அது உண்மை என்றால் சரவணன் தன்னிடம் மறைத்திருக்கமாட்டானே.. உயிர் நண்பனுக்கும் தெரியக் கூடாது என்றா நினைப்பான். கடைசி முறையாய் அவனைப் பார்த்தபோது சட்டை கிழிந்து அலங்கோலமாய் கிடந் தானே.. அவனுக்கு பொறிதட்டியது.

காதலை நிராகரித்தாள் என்றால் அவனுக்கு ஏன் சட்டைக் கிழியவேண்டும். வேண்டாம் என்று கூறி செல்பவள் போகு முன் போட்டிருந்த அவனது சட்டையைக் கிழித்துவிட்டு செல்வாளா என்ன? இல்லை உதறி கீழே தள்ளிவிடுவாளா?

அவனே ஏதோ வாலாட்டியிருந்ததால்தான் சட்டை கிழியப்பட்டிருக்கும்...

இந்த சான்று மட்டும் போதாதே.. சரவணனின் குற்றத்தைக் காட்ட.. சத்தியராஜ் சொன்னது போல 'எயிட்ஸ்' இருந்ததற்கு என்ன சாட்சி. எப்படி இவர்களின் வார்த்தைகளை நம்புவது..?

சரவணன் மாடியிலிருந்து விழாமல் இருந்திருக்கலாம். அவன் உயிருடன் இருந்திருந்தால் உண்மை தெரிந்திருக்கும்,.... யார் பேச்சில் நியாயம் என்று புரிந்திருக்கும். அநியாய மாய் பாவி மேலிருந்து குதித்து.. தலையில் அடிபட்டு... இரத்த வெள்ளத்தில் மிதந்து.. நினைக்கவே சகிக்கவில்லை.. இறந்து என்ன சாதித்தான்? இருந்து சாதிக்காமல் போனானே...

நினைவுச்சங்கிலியை ஏதோ தடுத்து நிறுத்தியது. ரத்தம் சிந்தி... அவனுக்கு ரத்தம் தேவையாகி இருக்குமே.. ஒருவேளை ஆஸ்பத்திரியில் இரத்தப் பரிசோதனை செய்திருந்தால்..

'பளிச்' என்று மின்னல் தலையினுள் வெட்டியது.

'சான்று.. சான்று என்று அலைகிறாயே.. போய்ப் பார் கிடைக்கும்' என்று மனசாட்சி நிமிண்டியது. ஒரு முடிவுக்கு வந்தவனாய் புறப்பட்டான்.



# 19

"உங்களது நண்பரா.. கொண்டு வந்தபோது உயிர் இன்னும் ஒட்டியிருந்தது. அதிக இரத்தம் சேதம். இரத்தம் ஏற்ற முயன்றோம். பரிசோதனையில் அவருக்கு 'எயிட்ஸ்' நோய் தாக்கியுள்ளது என்று எங்களுக்குத் தெரியவந்தது. அதனால் அவரை மருத்துவமனையில் இருந்து அப்புறப் படுத்த வேண்டிவந்தது. அவர் பிழைத்திருந்தாலும் அந்த கொடூர நோய் விட்டுவைத்திருக்காது. உடம்பை அழித் திருக்கும். தற்கொலைக்கு அதுதான் காரணமாய் இருந் திருக்க வேண்டும். 'காதல் தோல்வி' என்று பொய்யாய் காரணம் எழுதி நிஜத்தை மறைத்துவிட்டார். ம்ம்.. இந்தாருங்கள் சான்றிதழ்.."

சிகிச்சை செய்த மருத்துவர் ஆனந்தனிடம் பேசினார்.

மருத்துவ சான்றிதழில் இரத்தப் பரிசோதனையில் எயிட்ஸ் கிருமிகள் காணப்பட்டதை குறிப்பிடப்பட்டிருந்தது.

அதை பார்த்துவிட்டு உள்ளம் தடுமாறி போனான். அப்போது தான் தெரிந்தது. எப்படியும் இறக்கப் போகிறோம் என்று தேவிகாவிடம் ஆடியிருக்கிறான். தான் பெற்ற நோய் தன்னுடன் போகக்கூடாது என்று வக்கிரமாய் நினைத்திருக்க வேண்டும்.

ச்சே.. நண்பன் என்று அவனை நினைக்கவே குமட்டிக் கொண்டு வந்தது. அத்தனை நாள் பழகியிருந்தாலும் அவனைப்பற்றி புரிந்து கொள்ளாமல் போனேனே என்று வருந்தினான்.

என்னமாய் நாடகம்.. என்ன நடிப்பு..! காதலாம்.. தோல்வி யாம்.. பழிக்குப் பழியாம்.. பலியாடாய் தேவிகா.. பாவம் தேவிகாவை எப்படியெல்லாம் வார்த்தையால் சாடினோம்.

நல்லவனாய் இருந்திருந்தால் பழிவாங்க நினைத்திருப் பானா? அவனது பேச்சை நம்பி அநியாயமாய் ஒரு பெண்ணின் வாழ்வை சீரழியச் செய்தது.. மரண இம்சை தந்தது.. தானும் ஒரு ஆண்மகன்..!

துன்பத்தை சகிக்காமல் தேவிகா தற்கொலை செய்து கொண்டிருந்தால்.. நினைக்கவே விதிர்த்தது.

தான் செய்த தவறுக்கு என்ன பிராயசித்தம்.. இனி தன் மனை வியை வாழ்நாள் முழுக்க கண்கலங்க விடாமல் செய்வதுதான்..

கண்ணின் மணிபோல போற்றி வைத்துக்கொள்ள வேண் டும். பூ போன்ற அவள் மனதை புண்படாமல் வைத்துக் கொள்ள வேண்டும்.

அந்த நினைப்பில் அதுவரை உள்ளத்தில் பூட்டிக்கிடந்த ஆசை என்னும் கதவு படீர் என்று திறந்துகொள்ள.. அடை பட்டு கிடந்த அன்பு என்ற வெள்ளம் பிரவாகமாகி பெருக் கெடுத்து ஓடத் தொடங்கியது. அந்த பிரவாகத்தில் கோபம், ஆத்திரம் எல்லாமே அடித்து வெளியேற்றப்பட்டது.

திருமணத்திற்குபின் முதன் முறையாய் அவனது இதயம் 'தேவிகா... தேவிகா...' என்று காதலுடன் முணுமுணுக்க ஆரம்பித்தது.

நடையில் ஒரு துள்ளல் தெரிய தன் மனைவியை பார்க்கும் ஆசையுடன் வீடு நோக்கிச் சென்றான்.

## 20

**வீ**ட்டை அடைந்தபோது ஆனந்தனின் மனம் நிச்சலனத் துடன் அமைதியாக இருந்தது. ஏதோ ஒரு புதிருக்கு விடை கண்ட நிம்மதி... இனி தான் வாழ்வில் எந்தவித குழப்பமும் இல்லை என்ற மனநிறைவு.



மனைவியுடன் புதுவாழ்வு ஆரம்பம் என்ற மகிழ்ச்சி. இதைத் தவிர வேறு இல்லை..

தேவிகாவைப் பார்த்து அவளது கண்ணீரைத் துடைத்து இனிமையான வாழ்வைத் தொடங்கலாம் என்று அடைந் தவன்.. வீட்டினுள் தெரிந்த நிசப்தத்தைக் கண்டு வியப்பு..

தேவிகா இருந்த சுவடும் இல்லை...

மனம் படபடக்க சுற்றிலும் பார்த்தான்...

தொலைக்காட்சியின் மீது ஒரு காகிதம் படபடத்து நின்றது.

அவசரத்துடன் அதை எடுத்துப் பிரித்தான்... தேவிகா தான் எழுதியிருந்தது.. படித்துவிட்டு அப்படியே சிலையாய் நின்றான்.

**"தாலி கட்டியவருக்கு..**

**யாருக்கும் நான் மோசம் செய்யவில்லை.. யாருடைய சாவிற்கும் நான் பொறுப்பில்லை. இதை நீங்களும் நம்பப் போவதில்லை. இந்த போலி வாழ்க்கையில் யாருக்கும் பிரயோசனமும் இல்லை. என்னைப் பார்த்தபோதெல் லாம் உங்கள் நண்பரின் நினைவில் நீங்கள் தவித்தது போதும். உங்கள் அன்புக்கு ஏங்கி நானும் தவித்தது போதும். நான் போகிறேன்....**

**- அனாதையான தேவிகா."**

கண்களில் பொங்கிய கண்ணீர் திரையின் ஊடே எழுத்துக்கள் மங்கலாய் தெரிய படித்தான்.

'தேவிகா..' 'என் மனைவியை நான் இழக்கக்கூடாது..' என் தேவிகா எனக்கு வேண்டும்.. தேவிகா.. என் அன்பை உன் மீது மழையாய் பொழிய ஒரு சந்தர்ப்பம் கொடுக்காமல் சென்று விட்டாயே..'

மனம் குமுறியது.. ஒருவேளை தற்கொலையென்று ... உடம்பு பதறியது.. 'தேவிகா..' அலறினான். அவனது வார்த்தைகள் பெரிதாய் ஒலித்தன. தலையை கவிழ்த்து கரங்களால் முகத்தை மூடிக்கொண்டு அப்படியே அமர்ந்திருந்தான்.

'எங்கே தேடுவேன் என் உயிருக்குயிரானவளை..' மனதினுள் அழுகை.

'என் கண்மணியை தொலைத்துவிட்டு நிற்கிறேனே..' இதயம் புலம்பி நின்றது.

'தேவிகா.. என் கண்ணம்மா..' அவனையும் அறியாமல் வார்த்தைகள் அழைத்தன.

''என்னை கூப்பிட்டீர்களா?''

தேவிகாவின் குரலில் திடுக்கிட்டான். திரும்பிப் பார்த்தான். பக்கத்து அறையில் இருந்து வெளிவந்து நின்றிருந்தாள்.

தேவிகாவேதான்.. அவன் அவளையே பார்த்து நின்றான்.

உண்மையில் அவள்தானா? பின் இந்த கடிதம்...?

இளம் புன்னகை பூத்தவாறே ''நான் சொன்னதைக் கேட்டும் நீங்கள் மனம் மாறாமல் போனால் இது என் கடைசி முயற்சியாக இருக்கட்டும் என்று நினைத்து எழுதி வைத்தேன்... இது அதிர்ச்சி வைத்தியம்தான்... மனதை தெளிவுபடுத்த இது வேண்டியதுதான். அதில் வெற்றியும் கிடைத்தது'' என்றபோது அவள் முகத்தில் குதூகலம் தெரிந்தது.

அடுத்த கணம் இருவரும் அணைப்பில் இருந்தனர். அங்கு மவுனமே மொழியாயிற்று.

வழக்கம் போல அலட்சியமாய் சென்று கொண்டிருந்த நிலவு இருவரின் ஆலிங்கனத்தைப் பார்த்து நகரவும் பிடிக்காமல் அங்கேயே நின்றது. பின்பு வெட்கி மேகத்தினுள் மறைந்து போனது.

✱